بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 11

இதழ் 30 & 31

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1448 - 08 - 16 ஸஃபர்

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - வஃபா 23 - 30 ★ 23 - 30 ஜுலை 2026

## அல்லாஹ்வின் கட்டளை

قُلۡ یٰۤاَیُّہَا النَّاسُ اِنِّیۡ رَسُوۡلُ اللّٰہِ اِلَیۡکُمۡ جَمِیۡعَا
ۣالَّذِیۡ لَہٗ مُلۡکُ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ لَاۤ اِلٰہَ اِلَّا
ہُوَ یُحۡیٖ وَیُمِیۡتُ ۪ فَاٰمِنُوۡا بِاللّٰہِ وَرَسُوۡلِہِ
النَّبِیِّ الۡاُمِّیِّ الَّذِیۡ یُؤۡمِنُ بِاللّٰہِ وَکَلِمٰتِہٖ
وَاتَّبِعُوۡہُ لَعَلَّکُمۡ تَہۡتَدُوۡنَ

நீர் கூறுவீராக! மக்களே! நிச்சயமாக நான் உங்கள் எல்லாருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன். வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்குரியது. அவனையன்றி வணக்கத்திற்குரியது எதுவுமில்லை. அவன் உயிரை வழங்கவும், மரணத்தை அளிக்கவும் செய்கிறான். (7:159)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நபிமொழி**

## இறை வணக்கங்கள் இறையச்சம் மற்றும் நன்றியுணர்வு

عَنۡ زِیَادٍ، قَالَ سَمِعۡتُ الۡمُغِیۡرَۃَ بۡنَ شُعۡبَۃَ رَضِیَ اللّٰہُ عَنۡہُ، یَقُوۡلُ
قَامَ النَّبِیُّ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ وَسَلَّمَ حَتّٰی تَوَرَّمَتۡ قَدَمَاہُ،
فَقِیۡلَ لَہٗ غَفَرَ اللّٰہُ لَکَ مَا تَقَدَّمَ مِنۡ ذَنۡبِکَ
وَمَا تَاَخَّرَ؟ قَالَ اَفَلَا اَکُوۡنُ عَبۡدًا شَکُوۡرًا

ஹஸ்ரத் முஃகைரா பின் ஷுஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இரவு நேரத்தில் (இறை வணக்கத்தில்) எந்த அளவிற்கு நீண்ட நேரம் நின்றுகொண்டிருப்பார்கள் என்றால், அவர்களின் இரு அருளுக்குரிய பாதங்களும் வீங்கிவிடும். 'அல்லாஹ்வோ தங்களின் முந்தைய மற்றும் பிந்தைய பாவங்கள் அனைத்தையும் மன்னித்துவிட்டானே; (பிறகு இவ்வளவு சிரமம் ஏன்?)' என்று அன்னாரிடம் கேட்கப்பட்டது. அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'அப்படியென்றால் நான் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள ஒரு அடியானாக இருக்கக் கூடாதா?' (ஸஹீஹ் புகாரி, கிதாபுத் தஃப்ஸீர், ஹதீஸ் எண்: 4837)

***** ******

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்**

## அனைத்து நபிமார்கள் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெற்றுள்ள சிறப்பு என்பது எனது ஈமானின் மகத்தான அம்சமாகும்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்த அந்த பணியையும், அந்தச் சீர்திருத்தத்தையும் செய்ய விரும்பியிருந்தாலும் அவர்களால் ஒருபோதும் அதைச் செய்திருக்க முடியாது. நமது நபி (ஸல்) அவர்களுக்கு கிடைத்திருந்த அந்த இதயமும், அந்த ஆற்றலும் அவர்களிடம் இருக்கவில்லை. அல்லாஹ் காப்பானாக! இது நபிமார்களை அவமதிப்பதாகும் என்று ஒருவர் கூறுவாரேயென்றால், அந்த அறிவிலி என் மீது இட்டு கட்டுகிறார்.

நபிமார்களைக் கண்ணியப்படுத்துவதையும், அவர்களுக்கு மரியாதை செலுத்துவதையும் நான் எனது ஈமானின் அம்சமாகக் கருதுகிறேன். எனினும், மற்ற அனைத்து நபிமார்கள் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெற்றுள்ள சிறப்பு என்பது எனது ஈமானின் மகத்தான அம்சமாகும். மேலும் இது எனது நரம்புகளிலும், இரத்தத்திலும் கலந்திருக்கும் விஷயமாகும்.இதனை அகற்றுவது எனது அதிகாரத்தில் இல்லை. நற்பேறு இழந்தவர் மற்றும் கண்பார்வையற்றவர் என்ன வேண்டுமானாலும் கூறிக் கொள்ளட்டும்! நம்முடைய நபி (ஸல்) அவர்கள் எத்தகைய பணியை செய்துள்ளார்கள் என்றால், அதனை தனித்தனியாகவோ அல்லது அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டாகவே எவராலும் செய்திருக்க முடியாது. மேலும் இது அல்லாஹ் தஆலாவின் அருளாகும். அவன் நாடியவருக்கு அதனை வழங்குகிறான்.' (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 174)

***** ******

**முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் பொன்மொழிகள்**

## ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்கான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்வைத்த முதல் விஷயம் எத்தகைய கருத்து என்றால், அதற்கு ஏகத்துவத்துடன் என்ன தொடர்பு? என்பதை உலகம் இன்னும் புரியவில்லை. அந்தக் கருத்து என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து ஞானத்தைப் பெற்று, முழு உலகிலும் நபிமார்கள் வந்து கொண்டிருந்தனர் என்று பிரகடனம் செய்ததாகும். வெளிப்படையில், இந்த விவகாரத்திற்கு ஏகத்துவத்துடன் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தென்படவில்லை. ஆனால், உண்மை என்னவென்றால், இந்த விஷயத்தை ஏற்றுக்கொள்ளாமல் ஏகத்துவத்தை நிரூபிக்கவே முடியாது. எகிப்து, ஈரான், இந்தியா, சீனா, ஜப்பான், ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இறைவன் தூதர்களை தோன்றச் செய்தான் என்பதை ஒப்புக்கொள்ளாமல் தவ்ஹீது முழுமையடைய முடியாது.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தோன்றி, இதில் பெரும் அழுத்தம் கொடுத்தார்கள். எனவேதான் திருக்குர்ஆனில் எச்சரிக்கை செய்பவர் எவரும் வராத எந்தச் சமுதாயமும் இல்லை. (அல் ஃபாத்(த்)திர்:25) என்று வருகிறது.

அடுத்து, அல்லாஹ் கூறுகிறான்:

'நிச்சயமாக நாம் ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒரு தூதரை அனுப்பினோம்' (அந்நஹ்ல்: 37).

அத்துடன் தவ்ஹீதைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறுகின்றான்: அல்லாஹ்வை வணங்குங்கள்; அல்லாஹ் அல்லாதவற்றை விட்டு விலகியிருங்கள்' என்று அவர் அந்த மக்களுக்கு கற்பிக்க வேண்டும் என்பதற்காக நாம் ஒவ்வொரு சமுதாயத்திலும் தூதரை அனுப்பினோம். எனவே, 'எங்களிடம் மட்டுமே உண்மை வந்தது; மற்ற முழு உலகத்தையும் இறைவன் கைவிட்டுவிட்டான்' என்று கூறுவது தவறாகும் என்ற கோட்பாட்டை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகிற்கு முன்னால் வைத்தார்கள்.

உண்மை என்னவென்றால், ஒரு நபியோ அல்லது தூதரோ வராமல் எந்த ஒரு சமுதாயமும் கடந்து போகவில்லை.

(காதியானில் நடைபெற்ற ஸீரத்துன் நபி (ஸல்) ஜல்ஸாவில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது (ரலி) அவர்கள் நிகழ்த்திய உரை, 2, ஜூன் 1929 )

***** ******

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஈமானை வலுவூட்டும் நற்குறிப்புகள்

ஐந்தாவது கிலாஃபத்தின் அருளுக்குரிய காலக்கட்டத்தில் ஹஸ்ரத் முஹம்மது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரது கண்ணியத்திற்குரிய ஸஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஆகியோரின் அழகிய நற்குறிப்புகள் எடுத்துரைக்கப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கடந்த சில வருடங்களாக, ஈமானை வலுவூட்டுகின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளின் சம்பவங்களை ஹுஸூர் அக்தஸ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எடுத்துரைத்து கொண்டே செல்கின்றார்கள். அந்த ஸஹாபிகளின் தியாகங்களைக் குறித்த மனம்கவர் நினைவுகளை நமக்கு புரிய வைத்துக் கொண்டே வருகின்றார்கள்.இதன் நோக்கம் என்னவென்றால், அஹ்மதிகளாகிய நாம் நமது வாழ்விலும் ஆன்மீக மாற்றங்களை உருவாக்க வேண்டும்; மேலும் ஸஹாபிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளின்படி, ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இந்தக் காலக்கட்டமும் ஸஹாபிகளின் காலக்கட்டமாகும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'அல்லாஹ் மஸீஹ் மவ்வூத் உடன் இருக்கும் இந்த ஜமாஅத்திற்கு இந்த நற்பேறை வழங்கியுள்ளான். அதாவது, அது ஸஹாபிகளின் கூட்டத்தினருடன் இணையக் கூடியதாகும்.

'வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம்' என்பது குறித்து திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்; அதாவது, இது மஸீஹ் மவ்வூத் அவர்களின் ஜமாஅத் ஆகும். மேலும் இது ஜமாஅத் ஒருவகையில் ஸஹாபிகளின் ஜமாஅத்தாக இருக்கும்.'

அதேபோன்று மேலும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'ஸஹாபிகளின் ஜமாஅத் என்பது ஏதோ முற்காலத்தில் கடந்துபோன ஒரு கூட்டம் மட்டுமே என்று கருதாதீர்கள். மாறாக, அது அல்லாஹ் திருக்குர்ஆனில் குறிப்பிட்டுள்ள மற்றொரு கூட்டமும் ஆகும். அஹ்மது (ஸல்) அவர்களின் நிழலாக இருப்பவரின் உடன் இருக்கும் அந்தக் கூட்டமும் ஸஹாபிகளுடன் சேரும்.'

(நூல் தஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், சூரா அல்-ஜுமுஆ, பக்கம்: 140)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது அருளுக்குரிய காலத்தில் தமது அந்த ஸஹாபா பெருமக்களுக்கு ஆன்மீகப் பயிற்சியையும், பராமரிப்பையும் வழங்கினார்கள். அன்னாருக்குப் பிறகு அன்னாருடைய மகத்தான கலீஃபாக்கள் தத்தமது காலத்தில் இந்தக் கடமையை நிறைவேற்றிக் கொண்டே வருகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்திலிருந்து தூரமாய் நகர்ந்து கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில், ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தன்னிகரற்ற அந்த தியாகங்களை எடுத்துரைத்தவாறு நமக்குள்ளும் அதே ஆன்மாவை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்து வருகின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

"ஆகரீன மின்ஹும்' என்ற வசனத்தில், மஸீஹ் மவ்வூதின் இந்த ஜமாஅத்திற்கு ஸஹாபா (ரலியல்லாஹு அன்ஹும்) பெருமக்களின் கூட்டத்துடன் ஒப்புமை உள்ளது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதேபோன்று, மேலும், அவர் தம்முடன் ஒப்புமை பெற்றிருப்பார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே வாக்களிக்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களின் பண்புகளைப் பற்றிக் கூறியிருப்பது போன்று, இந்த ஜமாஅத்தின் இமாமாக இருக்கும் நபர், அவரும் நிழல் வடிவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒப்புமை படைத்திருப்பார்.'

(அய்யாமுஸ் ஸுல்ஹ், தஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், சூரா அல்-ஜுமுஆ, பக்கம்: 132)

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஸஹாபா பெருமக்கள் (ரலியல்லாஹு அன்ஹும்) அவர்களின் சிறப்புகளைப் பற்றி ஒரு குத்பா பேருரை நிகழ்த்தினார்கள். 9 மார்ச் 2018 அன்று அந்த ஜுமுஆ பேருரையை நிகழ்த்தினார்கள். அதில் ஸஹாபிகளின் தியாகங்களைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறினார்கள்:

'உண்மை, விசுவாசம், தூய்மையான அன்பு மற்றும் நற்குணங்களை வெளிப்படுத்தக் கூடியவர்களின் அந்த முன்மாதிரிகள் எந்த அளவு மகிமையுடன் நமக்கு தென்படுகின்றது என்றால், அவற்றைக் கண்டு மனிதன் ஆச்சரியத்தில் உறைந்து விடுகிறான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றல், அவர்களின் நேசங்களின் திசைகளை மாற்றிவிட்டது. அதுமட்டுமின்றி, முதலில் அவர்களுடைய நேசங்களின் திசை வேறொரு பக்கம் இருந்தது. பின்னர் வேறொரு பக்கம் ஆகிவிட்டது. அதாவது, உலகத்தின் பக்கமிருந்து அவர்களின் பார்வையைத் அல்லாஹ்வின் பக்கம் ஆக்கிவிட்டது.அவர்களின் அன்பின் எல்லைகளுக்கு எத்தகைய ஒரு புதிய உச்சத்தையும், மேன்மையையும் வழங்கியது என்றால், இதற்கு முன்னர் உலகில் அப்படி ஒரு முன்மாதிரியைப் பார்க்க முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த உச்சத்தையும், மேன்மையையும் அழகிய முறையில் எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் (அலை) கூறினார்கள்:

அந்த ஸஹாபிகளின் நேசத்திற்கான அந்த தரம் முந்தைய நபிமார்களின் வாழ்க்கையிலும் கூட உதாரணம் இல்லை. மற்ற நபிமார்களை ஏற்றுக் கொண்டவர்களின் கேள்வியைப் பொருத்தவரை, அவர்களின் மேன்மை ஒருபக்கம் இருக்கட்டும்; அவர்களின் நிலை கூட ஸஹாபிகளுக்கு எதிரில் மிகவும் பின்தங்கியுள்ளது. இந்த ஸஹாபிகள் தங்களுடைய அனைத்து மனயிச்சைகளிலிருந்தும் முற்றிலும் தூய்மையாக இருந்தனர். தூய இதயம் படைத்தவர்களாகவும், அல்லாஹ்விற்காக மட்டுமே தங்களை அர்ப்பணித்தவாறும், அவனது விருப்பத்தை மட்டுமே நாடியவாறும் தங்களது வாழ்வை கழிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். இத்தகைய நிலை மனிதனிடம் உருவாகி விடும்போது, பின்னர் இறைவனும் அருளுகின்றான்; மேலும், அளவற்ற முறையில் அருள் புரிகின்றான். இந்த உண்மைகளை நாம் ஸஹாபிகளின் வாழ்வில் காண்கிறோம்.'

(பத்ர் பத்திரிகை, 05/12 ஏப்ரல் 2018)

ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கடந்த பல வருடங்களாக ஸஹாபா பெருமக்களின் நிலைமைகளை எடுத்துரைத்து வருகின்றார்கள். இதன் நோக்கம், அல்லாஹ் நம்மை ஸஹாபிகளுக்கு ஒப்பானவர்களாக ஆக்கியுள்ளான் என்பது மட்டுமே ஆகும். எனவே, ஸஹாபிகளின் இதயங்களில் இருந்த அதே தூய்மையான எண்ணமும், தியாக உணர்வும் நம்மிடமும் இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸஹாபிகளுக்கு இருந்த அதே அன்பும், நேசமும் நம் இதயங்களிலும் இருக்க வேண்டும். எந்த நேசத்தால் அவர்கள் தங்களின் உயிர்களையே அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்து வந்தார்களோ, அந்த நேசம் நமது உள்ளங்களில் இருக்க வேண்டும்.

அல்ஹம்துலில்லாஹ்! அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஸஹாபா பெருமக்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தமது இமாமின் அழைப்பிற்குப் பதிலளித்தவாறு, இணையற்ற தியாகங்களுக்கான நினைவுகளை நிலை நிறுத்தக் கூடிய ஏராளமான நபர்கள் இருக்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

' 'வ ஆகரீன மின்ஹும்' என்று கூறி, அல்லாஹ் இந்த ஜமாஅத்தை ஸஹாபா பெருமக்களின் ஜமாஅத்துடன் இணைத்திருக்கும்போது, ஸஹாபிகளிடம் இருந்த அதே தூய்மை, நன்றியுணர்வு மற்றும் அர்ப்பணிப்பு இந்த ஜமாஅத்திலும் இருக்க வேண்டும். ஸஹாபிகள் என்னென்ன செய்தார்கள்? அவர்கள் அல்லாஹ்வின் கம்பீரத்தின் வெளிப்பாட்டைக் கண்டார்கள். மேலும் அவர்கள் அந்த வழியைத் தேர்ந்தெடுத்தார்கள். அதாவது, அந்த வழியில் தங்களின் உயிர்களை அர்ப்பணித்தார்கள். மேலும், தங்களின் மனைவிமார்கள் விதவைகளாகி விடுவார்கள்; பிள்ளைகள் அனாதைகளாகி விடுவார்கள்; மக்கள் தங்களைப் பார்த்துப் பரிகாசம் செய்வார்கள் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.ஆனால் அவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவர்கள் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டார்கள்; ஆனால், அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது அவர்கள் கொண்ட ஈமானின் வெளிப்பாட்டிலிருந்து பின்வாங்கவில்லை. உண்மையில், அவர்களின் ஈமான் மிகவும் வலிமையானதாக இருந்தது. அதற்கு இணையான ஒன்றை எங்கும் காண முடியாது.' (அல்-ஹகம் தொகுதி 6, எண் 40, 10 நவம்பர் 1902, பக்கம் 3) (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தஃப்ஸீர் - தஃப்ஸீர் சூரா அல்-ஜுமுஆ, பக்கம் 150)

எனவே, நாம் ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் மூஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இந்த குத்பாக்களைக் கவனமாக

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

# ஜுமுஆ பேருரை

## பணிவு மற்றும் தாழ்மை குணம் என்ற அம்சத்தின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கப் பண்புகள் தொடர்பான மனம்கவர் நற்குறிப்புகள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 05 ஜூன் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **05 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ○ اَلرَّحْمٰنِ الرَّحِيمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّينِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ○

صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ○

கடந்த குத்பாவில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பணிவு மற்றும் தாழ்மை குணத்தின் சம்பவங்கள் அல்லது அன்னாருடைய அறிவுரைகள் எடுத்துரைக்கப்பட்டிருந்தன. இன்றும் அது தொடர்பாகவே சில நிகழ்வுகளையும் அவர்களின் அறிவுரைகளையும் எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் ஷேக் முஹம்மது இஸ்மாயில் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நற்பண்புகளின் நிலை என்னவாக இருந்தது என்றால், காதியானில் அன்னாருக்கு எதிராக பகைமைப் பாராட்டுவதில் எப்போதும் ஈடுபட்டிருந்தார்களோ மேலும், எவர்கள் எதிர்ப்பில் எந்தவொரு சிறிய வாய்ப்பைக் கூட தவறவிட்டதில்லையோ அவர்களும் கூட அன்னாரது வாசலுக்கு வந்து கதவைத் தட்டினார்கள். அப்போது, நான் இதனைக் கண்டேன். அதாவது, அன்னார் (அலை) வெறும் காலுடனேயே வெளியே வந்தார்கள். மேலும், அவர்களைப் பார்த்த உடன், மிகவும் கனிவுடனும், தயவுடனும் அவரது ஸலாமிற்குப் பதிலளித்து, 'நீங்கள் நலமாக உள்ளீர்களா? என்று கேட்பார்கள். மேலும் அவரது குடும்பத்தினர் அனைவரின் நலத்தையும் விசாரிப்பார்கள். மேலும், நீங்கள் எதற்காக வந்துள்ளீர்கள்?' என்று விசாரிப்பார்கள். பின்னர் அவர் தனது தேவையை முன்வைக்கும்போது, 'உங்களுக்கு எவ்வளவு (பணம்) தேவை?' என்று கேட்டுவிட்டு, அவரது தேவைக்கு அதிகமாகவே அவருக்குக் கொடுப்பார்கள்; பின்னர், 'இன்னும் தேவைப்பட்டால் மேலும் வாங்கிக் கொண்டு செல்லுங்கள்' என்று கூறுவார்கள்.'

(ரிவாயத் அஸ்ஹாப் அஹ்மது, பாகம் 2, பக்கம் 395-396)

எதிரிகளுடனும் அன்னாரது நடத்தை மிகவும் நன்றாக இருந்தது. மேலும் அவர்களிடமும் எப்போதும் பணிவுடன் நடந்து வந்தார்கள். ஒருபோதும் ஆணவம் கொள்ளவில்லை.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களிடமிருந்து இந்த அறிவிப்பை நான் செவியுற்றேன். மௌலவி ஷேர் அலி ஸாஹிப் (ரலி) அவர்கள் அன்னாரிடம் கூறியிருந்தார்கள்:

ஒருமுறை மீரான் பக்ஷ் ஸவ்தாயி என்ற சற்று மனநலம் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் பெரிய பள்ளிவாசலிலிருந்து வந்து கொண்டிருந்தபோது, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு மிகவும் அவமரியாதையாக அழைத்தார். அவருக்கு அறிவு இருக்கவில்லை; எனவே அவர் அப்படித்தான் பெயர் சொல்லி அழைப்பார். அவர், 'ஓய் குலாம் அஹ்மது!' என்று கூறினார். அன்னார் (அலை) உடனடியாக எழுந்து நின்று விட்டார்கள். மேலும், 'ஜீ' (ஆம்)! என்று கூறினார்கள். ஒருபோதும் அன்னார் (அலை) அதனை தீயதாக கருதவில்லை. மேலும், ஜீ! என்ன கூறுகின்றீர்கள்? என்று அன்னார் (அலை) கேட்டார்கள். அதற்கு, 'ஓ ஸலாம் தே ஆகியா கர் என்று அவர் கூறினார். அதாவது பஞ்சாபியில் 'முதலில் வந்து ஸலாம் சொல்' என்று கூறினார். பாவம்! தன்னை ஒரு அதிகாரியாக நினைத்துக் கொண்டு அவர் இவ்வாறு கூறினார். அன்னார்(அலை) 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று கூறினார்கள். பின்னர், 'விஷயத்தைக் கவனி' என்று அவர் கூறினார்.

அதாவது ஜமீன்தார்கள் அங்கு ஒரு வரி செலுத்துகின்றனர். அது அரசாங்கம் சார்பான ஒரு வரியாகும்.

எவ்வாறிருப்பினும், ஹுஸூர் (அலை) அவர்கள் அவரது பேச்சைக் கேட்டு, 'பையிலிருந்த கைகுட்டையை எடுத்தார்கள். ......அதிலிருந்த நான்கு அல்லது எட்டணாவை அவருக்கு கொடுத்து விட்டார்கள். பின்னர் அவர் மகிழ்ச்சியடைந்து சென்று விட்டார். கோடியான் எனும் புகழ்ப் பாடலைப் பாடத் துவங்கினார்.'

(ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, பக்கம் 734, ரிவாயத் எண் 805)

கோடியான் என்பது புகழ்ச்சி கவிதைகள் ஆகும்.

மாஸ்டர் நஸீர் ஹுஸைன் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் எப்போதெல்லாம் என் தந்தையாருடன் காதியானுக்கு ஹுஸூர் (அலை) அவர்களிடம் சென்றேனோ, அப்போதெல்லாம் ''ஹக்கீம் மர்ஹும் ஈஸா'' ஸாஹிப் வந்திருக்கின்றார்' என்று ஹுஸூர் (அலை) அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும்போது, தகவல் கிடைத்த உடனேயே ஹுஸூர் (அலை) அவர்கள் வெளியே வருவதையும், அந்த நேரத்தில் சாப்பிடுவதற்கு ஏதேனும் ஒன்றைக் கொடுப்பதையும் நான் எப்போதும் பார்த்திருக்கிறேன். சில நேரங்களில் அன்னாரே முதலில் சென்று உணவை எடுத்து வந்ததும் உண்டு.

அன்னார் (அலை) எழுதுகின்றார்கள்:

' ஹுஸூர் (அலை) அவர்கள் விருந்தினர்களை எவ்வளவு எளிமையுடன் சந்தித்து வந்தார்கள் என்றால், சில சமயங்களில் ஹுஸூர் (அலை) அவர்களின் கையில் பேனா இருக்கும் நிலையிலும், சில சமயங்களில் ஹுஸூர் (அலை) அவர்கள் வெறும் கால்களுடன் (செருப்பணியாமல்) நடந்து வருவதையும் நான் பார்த்திருக்கிறேன்.'

வீட்டின் அறையில் அமர்ந்திருக்கும் போது கதவு தட்டப்பட்டால் (knock), அப்படியே வெளியே வந்துவிடுவார்கள். ஒருவேளை ஹுஸூர் (அலை) அவர்கள் பள்ளிவாசலில் இருக்கும் போது ஏதேனும் விருந்தினர் வந்தால், ஹுஸூர் (அலை) அவர்கள் பெரும்பாலும் எழுந்து நின்று அவரிடம் கை குலுக்குவார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் வேறொருவருடன் ஏதேனும் பேசிக் கொண்டிருக்கும்போது யாராவது வந்து ஹுஸூர் (அலை) அவர்களின் அருகில் அமர்ந்து கைகுலுக்கினால், அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் உடனடியாக தம் கவனத்தை செலுத்தி, அவருடைய உடல் நிலை போன்ற விபரங்களை விசாரிப்பார்கள்.

சுருக்கமாக, ஹுஸூர் (அலை) அவர்கள் தம்மிடம் வருபவர்களை மிகுந்த பணிவுடன் வரவேற்பவர்களாக (receive செய்பவர்களாக) இருந்தார்கள். (ரிவாயாத் அஸ்ஹாபே அஹ்மத், பாகம் 3, பக்கம் 173, ஹசரத் மாஸ்டர் நஸீர் ஹுஸைன் ஸாஹிப் (ரலி) அவர்களின் அறிவிப்புகள்)

ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

'எனக்கு நினைவிருக்கிறது; ஒருமுறை நான் லாகூரிலிருந்து காதியான் சென்றேன். அநேகமாக அது 1897 அல்லது 1898-ஆம் ஆண்டின் நிகழ்வாக இருக்கலாம். ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் என்னை மஸ்ஜிது முபாரக்கில் அமர வைத்தார்கள்... அப்போது அது ஒரு சிறிய பள்ளிவாசலாக இருந்தது.

அன்னார் (அலை) கூறினார்கள்: 'நீங்கள் அமருங்கள்; நான் உங்களுக்கு உணவு கொண்டு வருகிறேன்.' இதைக் கூறிவிட்டு அன்னார் (அலை) உள்ளே சென்றார்கள். ஏதேனும் ஒரு வேலைக்காரர் மூலம் உணவை அனுப்பி வைப்பார்கள் என்று நான் நினைத்தேன். ஆனால் சில நிமிடங்களுக்குப் பிறகு ஜன்னல் திறக்கப்பட்ட போது, நான் என்ன கண்டேன் என்றால், தம் சொந்தக் கைகளால் ஒரு ஸீனீயில் அதாவது பெரிய தட்டு மற்றும் டிரேயில் உணவை வைத்து, அதனை அன்னாரே சுமந்து வந்து, எனக்கு உணவளித்தார்கள். என்னைப் பார்த்து, 'நீங்கள் உணவை உண்ணுங்கள்; நான் தண்ணீர் கொண்டு வருகிறேன்' என்று கூறினார்கள்.'

கூறுகின்றார்கள்:

நம்முடைய தலைவராகவும் வழிகாட்டியாகவும் இருக்கும் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களே நமக்கு இப்படி சேவை செய்யும்போது, நாம் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் எவ்வளவு அதிகமாக சேவை செய்ய வேண்டும்! என்று எண்ணி' 'என் கட்டுப்பாட்டை மீறி உருக்கத்தால் என் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது;

(திக்ரே ஹபீப் - ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப், பக்கம் 258)

அன்னாரின் எளிமை மற்றும் பணிவு குறித்த ஓர் அறிவிப்பை 'மாய் போலி', 'மாயி ஜீவான்' என்ற ஒரு பெண்மணியின் கூற்றின் அடிப்படையில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அந்தப் பெண்மணி கூறினார்: 'ஒருமுறை ஹுஸூர் (அலை) அவர்கள் வருகை தந்தார்கள்; அப்போது, நான் புதிய கோதுமையை வறுத்து எடுத்துச் சென்றேன்.

அந்தப் பெண்மணியின் ஊருக்கு

ஹுஸீர் (அலை) சென்றிருந்தார்கள்.

அப்போது, அன்னார் (அலை) 'தம்முடன் இருந்தவர்களுக்கும் அதனை பகிர்ந்து கொடுத்து விட்டார்கள். தாமும் அதைச் சுவைத்து மகிழ்ந்தார்கள். ஹுஸீர் (அலை) அவர்கள் நடந்து வரும்போதெல்லாம், எங்களுடைய பள்ளிவாசலில் வந்து இஷ்ராக் தொழுகையைத் தொழுவார்கள். நாங்கள் கீரையும், ரொட்டியும் கொடுத்தால், ஹுஸீர் (அலை) அவர்கள் ஒருபோதும் அதைத் தவறாகவோ அல்லது வெறுப்பாகவோ கருத மாட்டார்கள்'. இன்னும் கூறப்போனால், மிகுந்த மகிழ்ச்சியுடன் விருந்தோம்பலை ஏற்றுக் கொள்வார்கள்.' (ஸீரத்துல் மஹ்தி, பாகம் 2, பக்கம் 202, நிகழ்வு எண் 1318)

ஹஸ்ரத் முன்ஷி ஸஃபர் அஹ்மது ஸாஹிப் கபூர்தல்வி (ரலி) அவர்கள் ஒரு நிகழ்வை எடுத்துரைக்கின்றார்கள்:

'ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் தாம் அமரும் இடத்தில் கதவுகளைத் திறந்து வைத்து ஒருபோதும் அமர மாட்டார்கள்'.

அதாவது கதவைத் திறந்து வைத்து அமர மாட்டார்கள். மாறாக, எப்போதும் கதவை உள்ளே பூட்டி வைத்தே அமர்ந்து வந்தார்கள்.

கூறுகின்றார்கள்: 'ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மியான் மஹ்மூத் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் சிறிது சிறிது நேரத்திற்கு பிறகு ஒருமுறை வந்து 'அப்பா கதவைத் திறங்கள்' என்று கூறுவார். உடனே ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் எழுந்து சென்று (கதவைத்) திறந்து விடுவார்கள். ஒருமுறை நான் அன்னாரின் சமூகத்தில் ஆஜராகியிருந்தேன். ஹுஸீர் (அலை) அவர்கள் பாயில் அமர்ந்திருந்தார்கள். என்னைப் பார்த்தவுடன், அன்னார் (அலை) ஒரு கட்டிலைத் தூக்கினார்கள். அதை உள்ளே தூக்கிக் கொண்டு சென்றார்கள்.ஹுஸீர்! நான் தூக்குகிறேன்' என்று நான் கூறினேன். அதற்கு, 'இது அதிக எடையுள்ளது; உங்களால் தூக்க முடியாது' என்று அன்னார் (அலை) கூறினார்கள்; மேலும், 'நீங்கள் இந்தக் கட்டிலில் அமருங்கள்' என்றார்கள்.'

கட்டிலைத் தூக்கி அங்கு கொண்டு சென்றார்கள்; மேலும் அவரை அமர வைத்தார்கள். மேலும் தம்மைப் பற்றிக் கூறுகையில், 'எனக்கு இங்கே கீழே அமர்வதுதான் வசதியாக உள்ளது', 'நான் கீழே அமர்கிறேன், நீங்கள் கட்டிலில் அமருங்கள்' என்றார்கள். அவர் கூறுகிறார்: 'முதலில் நான் மறுத்தேன். ஆனால், 'இல்லை! நீங்கள் எந்தத் தயக்கமும் இன்றி அமருங்கள்' என்று அன்னார் (அலை) கூறினார்கள். பின்னர், நான் அமர்ந்து கொண்டேன். எனக்குத் தாகம் எடுத்தது. நான் பானைகளின் பக்கம் பார்வையைத் திருப்பினேன், அங்கே தண்ணீர் குடிப்பதற்கான பாத்திரம் எதுவும் இல்லை. அன்னார் (அலை) என்னைப் பார்த்து, 'உங்களுக்குத் தாகமாக இருக்கிறதா? நான் தண்ணீர் கொண்டு வருகிறேன்' என்று கூறினார்கள். கீழே உள்ள பெண்கள் பகுதிக்குச் சென்று, அன்னார் (அலை) கிளாஸை எடுத்துக் கொண்டு வந்தார்கள்.பின்னர்,'சற்றுப் பொறுங்கள்' என்று கூறிவிட்டு, மீண்டும் கீழே சென்று, அங்கிருந்து இரண்டு சர்பத் பாட்டில்களைக் கொண்டு வந்தார்கள். அதை மணிப்பூரிலிருந்து யாரோ அனுப்பியிருந்தார்கள்.'

அவர் கூறுகின்றார்: 'அது மிகவும் சுவையான பானமாக இருந்தது.

அன்னார் (அலை) கூறினார்கள்: 'இந்த பாட்டில்களை வைத்தே பல நாட்கள் ஆகிவிட்டன. முதலில் ஒரு நண்பருக்கு இதைப் பருகக் கொடுத்துவிட்டு, அதன் பிறகே நாம் குடிக்க வேண்டும் என்று நாம் நிய்யத் வைத்திருந்தோம். இன்று அது எனக்கு நினைவுக்கு வந்தது.'

ஆக, அன்னார் (அலை) கிளாஸில் சர்பத் தயாரித்து எனக்குக் கொடுத்தார்கள்.' வந்திருந்த அந்த அன்பளிப்பை (அதாவது சர்பத்தைப்) பற்றிக் கூறும்போது, 'முதலில் நான் யாரேனும் ஒரு நண்பருக்குக் கொடுப்பேன்; பிறகே நான் குடிப்பேன்' என்றார்கள்.

கூறுகின்றார்கள்: 'முதலில் ஹுஸீர்! நீங்கள் இதிலிருந்து கொஞ்சம் பருகுங்கள்! என்று நான் கூறினேன்."

கிளாஸில் சர்பத் தயாரித்து அவரிடம் கொடுக்கப்பட்டபோது, 'தாங்கள் முதலில் பருகுங்கள்; பிறகு நான் குடிப்பேன் என்று அவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கூறினார். அன்னார் (அலை) ஒரு மடக்கு அருந்திவிட்டு என்னிடம் கொடுத்து விட்டார்கள். நானும் குடித்தேன். நான் சர்பத்தைப் பாராட்டினேன். அன்னார் (அலை) கூறினார்கள்: 'நீங்கள் ஒரு பாட்டிலை கொண்டு செல்லுங்கள்; மேலும், ஒன்றை எடுத்துச் சென்று வெளியில் இருக்கும் மற்ற நண்பர்களுக்கும் பருகக் கொடுங்கள்.' அன்னார் (அலை) அந்த இரண்டு பாட்டில்களிலிருந்தும் அதே ஒரு மடக்கு தான் பருகியிருந்தார்கள். நான் அன்னாரின் கட்டளைப்படி பாட்டில்களை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டேன்.' (அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 168- 169)

இதேபோன்று, ஹஸ்ரத் மிர்சா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அஹ்மது ஜான் ஸாஹிபா அவர்களின் மகள் ஆயிஷா ஸாஹிபா அறிவிக்கின்றார்கள்:

1906-ஆம் ஆண்டு எனது மர்ஹூமா தாயார் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அப்போது, அம்மா ஜீ அதாவது (ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் துணைவியார் தமது வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டார்கள். காலை உணவு எல்லாம் அருந்தச் செய்தார்கள். பிறகு நான்கு, ஐந்து நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் என்னை தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். தற்போது எங்கு மாடியில் சமையலறை உள்ளதோ அங்கு அம்மா ஜான் (ரலி) அவர்கள் எனது தலையைக் கழுவிக் கொண்டிருந்தார்கள். அப்போது, ஒரு பெண் எனது தலையில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்.

அம்மா ஜான் (ரலி) அவர்கள் எந்த சிறுமியின் தாயார் மரணித்து விட்டிருந்தாரோ அவருடைய தலையை கழுவிக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பெண்மணி கூறுகின்றார்:

மேலும் ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் (ரலி) அவர்கள் எனது தலையில் சோப்பு தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தார்கள். உடன் இருந்த அந்தப் பெண் அதிகப்படியாகத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார். ஹுஸீர் (அலை) அவர்கள் அந்த இடத்தில் உலாவிக் கொண்டிருந்தார்கள். அன்னார் (அலை) இதைப் பார்த்ததும், அந்தப் பெண்ணிடமிருந்து சொம்பை வாங்கி, என் தலையில் தண்ணீர் ஊற்றத் தொடங்கிவிட்டார்கள். மேலும் மெது மெதுவாகத் தண்ணீர் ஊற்றிக் கொண்டே சென்றார்கள். ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் அம்மான் ஜான் (ரலி) அவர்கள் தலை வாரிக் கொண்டிருந்தார்கள். 'இவ்வாறு செய்தால் பேன்கள் வெளியேறிவிடும் என்று ஹுஸீர் (அலை) அவர்கள் கூறினார்கள்.'

(ஸீரத்துல் மஹ்தி தொகுதி 2, பக்கம் 285, அறிவிப்பு எண்: 1509)

அந்தச் சிறுமியின் தலையில் பேன்கள் அதிகமாகியிருக்கக் கூடும். ஏனெனில் நீண்ட நாட்களாக அவருடைய தாயார் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள்; பின்னர் இறந்துவிட்டார்கள். கவனித்துக் கொள்ள யாரும் இருக்கவில்லை. எப்படியிருந்தாலும், இந்த காரணத்தினால் பேன்கள் அதிகமாகியிருக்கலாம் அல்லது அந்தப் பகுதிகளில் பொதுவாகவே அப்படி இருந்திருக்கலாம். எது எப்படியிருந்தாலும், ஹஸ்ரத் அவர்கள் கூறினார்கள்: 'தலையை இப்படி நன்றாகக் கழுவி, இவ்வாறு தலை வாரினால் பேன்கள் அனைத்தும் நீங்கிவிடும்.'

(ஸீரத்துல் மஹ்தி, பாகம் 2, பக்கம் 285, அறிவிப்பு எண்: 1509)

வீட்டின் ஒரு வேலையில் உதவி செய்வதில் அன்னாருக்கு எவ்விதமான தயக்கமும் இருந்ததில்லை.

முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை நான் உளூ செய்வதற்காகத் தண்ணீரைத் தேடியவாறு, கையில் சொம்பை எடுத்துக் கொண்டு, மஸ்ஜித் முபாரக்கிலிருந்து ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களுடைய வீட்டின் உள்பகுதிக்குச் செல்லும் அந்த வாசலுக்குள் சென்றேன் - அங்கு ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் ஒரு பணிப்பெண் அல்லது ஊழியர் யாரிடமாவது சொம்பைக் கொடுத்து உள்ளேயிருந்து தண்ணீர் வாங்கி வரலாம் என்று அவ்வாறு சென்றேன். அப்போது, தற்செயலாக உள்ளேயிருந்து ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களே வெளியே வருகை தந்தார்கள். நான் (கையில் சொம்புடன்) நின்று கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு,'உங்களுக்குத் தண்ணீர் வேண்டுமா?' என்று கேட்டார்கள். 'ஆம்! ஹுஸீர்!' என்று நான் கூறினேன். ஹஸ்ரத் (அலை) அவர்கள் என் கையிலிருந்து செம்பை வாங்கிக்கொண்டு, 'நான் கொண்டு வந்து தருகிறேன்' என்று கூறி, அன்னாரே உள்ளே இருந்து தண்ணீரை நிரப்பிக் கொண்டு வந்தார்கள். மேலும் எனக்குக் கொடுத்தார்கள்.'

(திக்ரே ஹபீப், ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி), பக்கம் 257-258)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

மர்ஹூம் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களின் துணைவியாரான மதிப்பிற்குரிய முராத் காத்தூன் ஸாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் (ரலி) அவர்கள் மற்றும் நாங்கள் அனைவரும் சேர்ந்து மாம்பழம் சாப்பிட்டோம். அது மாம்பழக் காலமாக இருந்தது. அந்த நாட்களில் உறிஞ்சி சாப்பிடப்படக் கூடிய மாம்பழம் அதிகமாக கிடைத்து வந்தது. அதனால் முற்றத்தில் மாம்பழத் தோல்கள் மற்றும் கொட்டைகளின் குவியல் சேர்ந்து விட்டன. அங்கு பல பெண்கள் அமர்ந்திருந்தனர். அவற்றின் மீது ஏராளமான ஈக்கள் மொய்க்கத் தொடங்கின. பெண்கள் பேச்சில் மூழ்கிவிட்டதால், அந்த நேரத்தில் தூய்மையைப் பற்றிய எண்ணம் யாருக்கும் வரவில்லை.

கூறுகின்றார்கள்: அந்த நேரத்தில் நானும் அங்குதான் அமர்ந்திருந்தேன். சில பணிப் பெண்களும், ஊழியர்களும், சேவை செய்யும் பெண்களும் அங்குதான் அமர்ந்திருந்தார்கள். இதற்கிடையில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அங்கு வந்தார்கள். அன்னார் (அலை) இதைப் பார்த்தபோது, அன்னாரே ஒரு செம்பில் பினாயிலை ஊற்றி, அதனை முழு முற்றத்திலும் கிடந்த அந்த மாம்பழத் தோல்களின் குவியல்கள் மீது தம் கையாலேயே ஊற்றினார்கள்; ஈக்கள் போன்ற பூச்சிகள் ஒழிவிடவும், அழுக்குகள் சுத்தமாகிவிடவும் இவ்வாறு செய்தார்கள். (ஸீரத்துல் மஹ்தி, பாகம் 2, பக்கம் 261, அறிவிப்பு எண்: 1470)

அசுத்தத்தை விரைவாக சுத்தப்படுத்த வேண்டும் என்பதை பிறருக்கு அறிவுரையாக கூறுவதற்கு முன்பாக, தமது சொந்த செயலின் மூலமே அன்னார் (அலை) செய்து காட்டி விட்டார்கள். இதில் எங்கு அன்னாரின் பணிவு தென்படுகிறதோ அங்கு சுகாதாரத்தை பாதுகாப்பதில் அன்னாருக்கு இருந்த அக்கறையும் தென்படுகிறது.

லாகூரிலிருந்து வந்த ஒரு குழுவில் சில கண்ணியமிக்க நபர்கள் இருந்தனர். அவர்களில் டாக்டர் அல்லாமா இக்பால் மற்றும் சர் ஷஹாபுத்தீன் போன்றோரும் அடங்குவர். அவர்கள் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களைச்

திருக்குர்ஆனிலிருந்து...

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

சந்திப்பதற்காக வந்திருந்தனர். இந்தச் சந்திப்பின் நிலையைப் பற்றி பாபு குலாம் முஹம்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்:

இரவு உணவு சாப்பிட்ட பிறகு கட்டில்கள் விநியோகிக்கப்பட்டன. அப்போது, நான் ஒரு வலுவான மற்றும் பெரிய கட்டிலை எடுத்துக் கொண்டேன். ஆனால் சவ்த்ரி ஷஹாபுதீன் ஸாஹிப் (இவர்கள் பிற்காலத்தில் 'சர் ஷஹாபுதீன்' என்று அழைக்கப்பட்டார்கள்) என் படுக்கையை அதிலிருந்து எடுத்துவிட்டு,என்னுடைய கட்டிலைக் கைப்பற்றிக் கொண்டார்.'

ஹஸ்ரத் ஸாஹிப் வருகை தந்தபோது, ஒவ்வொருவரிடமும் 'உங்களுக்கு ஏதேனும் சிரமம் உள்ளதா?' என்று விசாரித்தார்கள். ஒவ்வொருவரும், 'ஹுஸுர்! எனக்கு எந்த சிரமமும் இல்லை' என்று கூறினர். ஆனால் அன்னார் (அலை) என்னிடம் வந்தபோது, நான் கவலையுடன் நின்று கொண்டிருந்தேன். ஏனெனில் சவ்த்ரி ஷஹாபுத்தீன் ஸாஹிப் எனது கட்டிலை பறித்துக் கொண்டிருந்தார்கள். ஹுஸுர்! சவ்த்ரி ஷஹாபுதீன் ஸாஹிப் எனது கட்டிலை எடுத்துக் கொண்டார்; நான் எங்கே தூங்குவது? என்று தெரியாமல் திகைத்து நிற்கிறேன்' என்று நான் அன்னாரிடம் கூறினேன். அதற்கு, அன்னார் (அலை) 'சற்று பொறுங்கள்! நான் உங்களுக்காக மற்றொரு கட்டிலைக் கொண்டு வருகிறேன்' என்று கூறினார்கள்.

கூறுகின்றார்கள், 'ஆக, ஹஸ்ரத் ஸாஹிப் சென்று விட்டார்கள். ஆனால் நீண்ட நேரம் ஆகியும் அன்னார் (அலை) திரும்பவில்லை, கட்டிலும் வரவில்லை.'

நான் ஹுஸுர் (அலை) அவர்களின் வீட்டின் முற்றத்தில் இருந்த கதவு வழியாக உள்ளே எட்டிப் பார்த்தபோது, ஒரு நபர் மிக வேகமாக கட்டிலை நெய்து கொண்டிருப்பதையும், ஹுஸுர் அவருக்கு அருகில் அமர்ந்து கையில் விளக்கைப் பிடித்துக் கொண்டு, 'இதோ வெளிச்சம் காட்டுகிறேன்' என்று கூறிக் கொண்டிருப்பதையும் கண்டேன்.

ஹுஸுர் (அலை) அவர்களின் இந்த நிலையைக் கண்டு நான் மிகவும் வெட்கமடைந்தேன். நான் முன்னால் சென்றேன். 'கதவு திறந்தே இருந்தது'. 'ஹுஸுர்! விளக்கை என்னிடம் கொடுங்கள்; இந்த ஒளிவிளக்கை நான் பிடித்துக் கொள்கிறேன்' என்று வேண்டினேன். ஆனால், 'இல்லை! இன்னும் ஒரேயொரு சுற்று நெசவு தான் மீதமுள்ளது' என்று ஹுஸுர் (அலை) கூறினார்கள்.

ஹுஸுர் (அலை) அவர்களின் இந்த நற்பண்பைக் கண்டு என் மீது எவ்வளவு பெரிய தாக்கம் ஏற்பட்டது என்றால், எனக்கு கண்ணீர் வந்துவிட்டது. அந்த நேரத்தில் ஹுஸுர் (அலை) அவர்களின் அருளுக்குரிய முகத்தைப் பார்த்து, 'இந்த முகம் ஒருபோதும் ஒரு பொய்யரின் முகமாக இருக்க முடியாது' என்று நான் கூறிக்கொண்டிருந்தேன். (லாகூர் தாரிக்கே அஹ்மதிய்யா, பக்கம் 217-218)

'அன்னாருடைய சேவகர் மர்ஹூம் மிர்ஸா இஸ்மாயீல் பேக் ஸாஹிப் அவர்களின் சாட்சியம் என்னவென்றால், ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் தமது தந்தையார் அவர்களின் கட்டளைக்கு இணங்க, நபித்துவ வாதத்திற்கு முன்னதாக வழக்குகள் சம்பந்தமாக நீதிமன்றங்களுக்கு சென்று வந்தார்கள். சவாரி செய்வதற்காக ஒரு குதிரையும் உடன் இருக்கும்; நானும் பொதுவாக அன்னாருடன் செல்வேன். ஆனால், அன்னார் (அலை) நடக்கத் தொடங்கும்போது அன்னார் (அலை) நடந்தே செல்வார்கள்; என்னை குதிரை மீது ஏறிச் செய்து சவாரி செய்ய வைத்து விடுவார்கள்.

*நபிமொழியிலிருந்து...*

**சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)**

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

எவர் ஊழியராக இருப்பாரோ அவரை குதிரையில் சவாரி செய்ய வைத்து விடுவார்கள். மேலும் அன்னார் (அலை) நடந்து செல்வார்கள்.

கூறுகின்றார்கள்: நான் மீண்டும், மீண்டும் மறுத்தேன்? மேலும், ஹுஸுர்! எனக்கு வெட்கமாக இருக்கிறது! என்று கூறினேன். அன்னார் (அலை) கூறினார்கள்: நடந்து செல்வதில் எமக்கு வெட்கம் இல்லாதபோது, உமக்கு சவாரி செய்து செல்வதில் ஏன் வெட்கம் வர வேண்டும்? ஹஸ்ரத் (அலை) அவர்கள் காதியானில் இருந்து புறப்படும்போது, எப்போதும் முதலில் என்னை சவாரி செய்ய வைப்பார்கள்; பாதி அல்லது அதற்கும் கூடுதலான தூரத்தைக் கடந்த பிறகு நான் இறங்கிவிடுவேன்; அன்னார் (அலை) சவாரி செய்து கொள்வார்கள். இதேபோல் நீதிமன்றத்தில் இருந்து திரும்பி வரும்போதும், முதலில் என்னை சவாரி செய்ய வைப்பார்கள், அதன் பிறகு அன்னார் (அலை) சவாரி செய்வார்கள். அவர்கள் சவாரி செய்யும்போது, குதிரை எப்படி நடந்து செல்லுமோ அதே நிலையில் நடக்க விட்டு விடுவார்கள். இதனால் நான் அவர்களுடன் நடந்து செல்லும்போது எனக்கு எந்த சிரமமும் ஏற்படாது.' (ஹயாத்தே தய்யிபா, நூலாசிரியர் - அப்துல் காதிர் ஸாஹிப் , பக்கம் 16)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மௌலவி ஷேர் அலி ஸாஹிப் (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: 'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மௌலவி முஹம்மது அலி ஸாஹிப் அவர்களிடம் ஒரு விஷயம் குறித்து விசாரிக்க வேண்டியிருந்தால், அவரைத் தன்னிடம் அழைப்பதற்குப் பதிலாக, மௌலவி ஸாஹிபின் சிறிய அறைக்கு அன்னாரே நேரில் சென்று வருவார்கள்.'

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் கூறுகிறேன்: 'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாழ்வில், மௌலவி முஹம்மது அலி ஸாஹிப் அன்னாரின் வீட்டின் ஒரு பகுதியில் தங்கியிருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தமது வீட்டின் ஓர் அறையை மௌலவி முஹம்மது அலி ஸாஹிபிற்காக கொடுத்து வைத்திருந்தார்கள். மேலும் அவர் பணி செய்வதற்கான அவரது அலுவலகமும் மஸ்ஜித் முபாரக்கிற்கு ஒட்டி கிழக்குப் பக்கம் அமைந்திருந்தது.' (ஸீரத்துல்-மஹ்தி, பாகம் 1, பக்கம் 357, அறிவிப்பு எண் 394)

அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களே அவரிடம் நேரில் செல்வார்கள். வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், மௌலவி ஸாஹிப் ஹுஸுரின் பணிவிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடத்தைக் கற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் தமது ஆணவத்தால் தமக்கே நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டார். (எடிட்டர் அல்-ஹகம்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எளிமை தொடர்பாக எழுதுகின்றார்கள்:

'அன்னார் (அலை) நடைப்பயிற்சிக்குச் செல்லும்போது, எவரும் தமக்கு முன்னால் செல்லக்கூடாது என்ற பாகுபாடு எல்லாம் அன்னாருக்கு இருக்காது. இன்னும் கூறப்போனால், தூசு காற்றில் பறக்கிறது; ஹஸ்ரத் அக்தஸ் (அலை) பின்னால் இருக்கின்றார்களே! என்ற கவலை பல சமயங்களில் கண்ணியமிக்க தோழர்களுக்கு தோன்றி விடும். நடந்து செல்லும்போது, தூசு காற்றில் பறந்து கொண்டிருக்கும். சாலையோ மண் சாலையாக இருந்தது. ஆனால், ஹஸ்ரத் ஹுஜ்ஜத்துல்லாஹ் (இறைவனின் சான்று) (அலை) அவர்கள் ஒருபோதும் இத்தகைய எண்ணங்களை கொண்டிருக்கவில்லை.பெரும்பாலும் என்ன நிகழும் என்றால், பின்னாலிருந்து மக்கள் கடந்து சென்று விடுவார்கள். மேலும் ஹஸ்ரத் அவர்களுக்கு ஏதேனும் தடுமாற்றம் ஏற்பட்டாலோ, அல்லது காலணி கழன்று விட்டாலோ, அதாவது 'ஒருவருடைய கால் பட்டுவிட்டலோ' அல்லது 'கைத்தடி கீழே விழுந்து விட்டாலோ' அல்லது 'தடுமாற்றம் ஏற்பட்டு விட்டாலோ அன்னார் (அலை) ஏதேனும் மனவருத்தத்தை வெளிப்படுத்தியதாகவோ அல்லது ஏதேனும் ஒரு குறிப்பிட்ட அசைவை விரும்பியதாகவோ எவரும் ஒருபோதும் பார்த்ததும் இல்லை ; கேட்டதும் இல்லை.

'உங்களுக்கு கவனம் இல்லையா?' என்று கூட அன்னார் (அலை) கூறியதில்லை. பள்ளிவாசலில் பல முறை அன்னார் (அலை) ஸஹாபிகளின் குழுவில் அமர்ந்திருந்தபோது, யாராவது ஒரு புதியவர் வந்தால், அவர் நேராகச் சென்று முதலில் மௌலானா மௌலவி அப்துல் கரீம் ஸாஹிப் அல்லது ஹஸ்ரத் ஹக்கீமுல் உம்மத் ஆகியோரிடம் கைகுலுக்குவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் யார்? என்று அந்த நபர்களை புதியவர்கள் புரிந்துகொள்ளும்போது, அந்த பெரியவர்கள் 'ஹஸ்ரத் ஸாஹிப் இவர்கள் தான்' என்று தங்கள் நாவினால் கூறுவார்கள்.

சுருக்கமாக, தமது தலைவரான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் செயலையே எப்போதும் தமது செயலாக மேற்கொண்டிருந்தார்கள்.மேலும் அதே முன்மாதிரியையே அன்னாரும் வெளிப்படுத்தினார்கள். (மல்ஃபூஸாத், பாகம் 2, பக்கம் 270 குறிப்பு, பதிப்பு 2022)

டாக்டர் பஷாரத் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஓர் அறிவிப்பு உள்ளது: 'மலேர்கோட்லாவின் நவாப் முஹம்மது அலி கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் பேகம் ஸாஹிபா (மனைவி) காலமானபோது, ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் ஜனாஸாவுடன் மண்ணறைக்குச் சென்றார்கள்.ஜனாஸா தொழுகையை அன்னாரே நடத்தினார்கள். மண்ணறை இன்னும் தயாராகியிருக்கவில்லை. நானும் ஜனாஸாவுடன் இருந்தேன். மக்கள் மண்ணறையைப் பார்ப்பதில் மும்முரமாக இருந்தனர்.'

அறிவிப்பாளர் கூறுகின்றார்: 'நானும் அந்தப் பக்கமே கவனம் செலுத்தினேன். சிறிது நேரத்திற்குப் பிறகு நான் பார்த்தபோது, ஹஸ்ரத் ஸாஹிப் அங்கில்லை.' பதற்றமடைந்து அங்கும், இங்கும் பார்த்தபோது, தோட்டத்தில் ஒரு பக்கத்தில் தனியாக தரையில் அமர்ந்திருப்பது தெரிய வந்தது. நான் வேகமாக ஒரு மரத்தின் அடியில் வெள்ளை விரிப்பை விரித்துவிட்டு, ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களிடம் சென்று, 'இங்கே வெயில் உள்ளது; எனவே அங்கே மரத்தின் நிழலுக்கு வருகை தாருங்கள்' என்று வேண்டினேன். அதற்கு, 'ஆம்! இது நல்லது!' என்று அன்னார் (அலை) கூறினார்கள். அன்னார் (அலை) மரத்தின் நிழலில் அந்த விரிப்பில் அமர்ந்தார்கள்.நானும் அருகில் அமர்ந்து கொண்டேன்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்:

சிறிது நேரத்தில் ஹஸ்ரத் ஸாஹிப் மரத்தின் அடியில் அமர்ந்திருப்பதை மக்கள் பார்த்தவுடன், அவர்களும் அங்கே வரத் தொடங்கி விட்டனர். அப்போது யார் வந்தாலும், அவரிடம் 'வாருங்கள்! வாருங்கள்! இங்கே அமருங்கள்' என்று ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் கூறிவிட்டு, அன்னார் பின்னோக்கி நகர்ந்து, அந்த விரிப்பில் வரக்கூடியவர்களை அமர வைப்பார்கள்'. 'மக்கள் வந்துகொண்டே இருந்தனர், ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் பின்னோக்கி நகர்ந்து, நகர்ந்து மக்களை விரிப்பில் உட்கார வைத்துக்கொண்டே இருந்தார்கள். எந்தளவுக்கு என்றால், சிறிது நேரம் கூட கழியவில்லை; நான் பார்த்தபோது ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் வெறும் மண்ணில் அமர்ந்திருந்தார்கள். சீடர்கள் அனைவரும் விரிப்பின் மேல் அமர்ந்திருந்தனர். வந்தவர்களுக்கு, (அன்னாரைப்) பார்க்கும் மற்றும் சந்திக்கும் ஆர்வத்திலும், ஆசையிலும், என்ன நடக்கிறது என்பதும், ஹஸ்ரத் ஸாஹிப் கீழே (மண்ணில்) இறங்கிவிட்டார்கள்;மேலும் நாம் விரிப்பில் அமர்ந்திருக்கிறோம் என்பதும் கண்ணில் படவில்லை.

ஆனால்' அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் இதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இறைவன் அன்னாருக்கு எவ்வளவு பெரிய

அந்தஸ்தைக் கொடுத்திருக்கிறான், ஆனால் அன்னாருடைய ஆன்மாவில் எவ்வளவு அடக்கமும் பணிவும் இருக்கிறது!‘ என்று என் மனதிற்குள்ளேயே நான் உருகிக் கொண்டிருந்தேன். அதே நேரம் என் ஈமான் அதிகரித்துக் கொண்டிருந்தது.
(முஜத்திதே அஃஸம் டாக்டர் பஷாரத் அஹ்மத், பாகம் இரண்டு, பக்கம் 1293-1294)

அப்துல்லாஹ் ஆத்தம் என்பவருடன் அம்ரித்ஸரில் விவாதம் நடந்து கொண்டிருந்த நாட்களில் நடந்த ஒரு சம்பவத்தை முன்ஷி ஸஃபர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் கூறுகின்றார்கள்:

அநேகமாக கரீம் பக்ஷ் என்ற ஒரு செல்வந்தரின் மாளிகையில் நாங்கள் தங்கியிருந்தோம்; அப்போது கர்னல் அல்தாஃப் அலி கான் எங்களுடன் சேர்ந்துகொண்டார். அவர் என்னிடம், ‘நான் ஹஸ்ரத் ஸாஹிப்பை தனிமையில் சந்திக்க விரும்புகிறேன்‘ என்று கூறினார். கர்னல் ஸாஹிப் கோட், பேண்ட் அணிந்திருந்தார், தாடி மீசையை மழித்திருந்தார்; கிளீன் ஷேவ் செய்திருந்தார்.

நான் கூறினேன், ‘நீங்கள் உள்ளே செல்லுங்கள்; வெளியில் இருந்து யாரையும் நாங்கள் உள்ளே வரவிட மாட்டோம்.‘ அதன்படி கர்னல் ஸாஹிப் உள்ளே சென்றார். சுமார் அரை மணி நேரம் அங்கே ஹஸ்ரத் ஸாஹிபை தனிமையில் சந்தித்தார். கர்னல் ஸாஹிப் வெளியே வந்தபோது, அவருடைய கண்கள் கலங்கியிருந்தன; கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. நான் அவரிடம், ‘நீங்கள் என்ன பேசினீர்கள்? ஏன் இந்த நிலை ஏற்பட்டது?‘ என்று கேட்டேன்.

அவர் கூறலானார்: ‘நான் உள்ளே சென்றபோது, ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் தமக்கே உரிய சிந்தனையில் ஒரு பாயில் அமர்ந்திருந்தார்கள். ஆனால், பாயின் மேல் அன்னாருடைய முழங்கால் மட்டுமே இருந்தது, மீதிப் பகுதி வெறும் தரையில் இருந்தது. ’ஹுஸூர்! தரையில் அமர்ந்திருக்கின்றீர்களே?’ என்று நான் கேட்டேன். உடனே ஹுஸூர் (அலை) அவர்கள், அநேகமாக நான் (அதாவது கர்னல் ஸாஹிப்) வெறும் பாயில் அமர விரும்பவில்லை என்று நினைத்துக் கொண்டார்கள். எனவே, ஹுஸூர் (அலை) அவர்கள் கூடுதல் விரிப்பை விரித்து விட்டார்கள். தமது துணியின் ஒரு பகுதியை எடுத்தோ அல்லது தமது தலைப்பாகையின் ஒரு பகுதியை அவிழ்த்தோ அந்தப் பாயின் மேல் விரித்து விட்டார்கள்.

அவர் கூறுகின்றார்: எவ்வாறிருப்பினும், அந்த துணியையும் கூடுதலாக நிலத்தில் விரித்து விட்டார்கள். மேலும், நீங்கள் இங்கே அமருங்கள்! என்று கர்னல் ஸாஹிபிடம் கூறினார்கள். அவர் அநேகமாக பாயில் அமர விரும்பவில்லை என்று அன்னார் (அலை) எண்ணினார்கள்; மேலும் தமது துணியை தலையில் இருந்து அவிழ்த்து, எடுத்துக் கொள்ளுங்கள்; இங்கே துணியை விரித்து விடுகிறேன் ; இதில் அமருங்கள் என்று கூறினார்கள்.

இந்த நிலையைப் பார்த்ததும்,‘ கர்னல் ஸாஹிப் கூறுகின்றார்:

எனக்குக் கண்ணீர் வந்துவிட்டது. நான் வேண்டினேன்: ’நான் வெளிநாட்டில் Baptize (ஞானஸ்நானம்- பெற்றுவிட்ட போதிலும் அதாவது கிறித்தவ மதத்தை ஏற்றுக்கொண்டபோதிலும் ஹுஸூர் (அலை) அவர்களின் தலைப்பாகையின் மீது அமரும் அளவுக்கு நான் நன்றி கெட்டவன் ஆகிவிடவில்லை.’

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ’அதனால் ஒன்றும் பரவாயில்லை; எந்தத் தவறும் இல்லை; நீங்கள் எவ்வித தயக்கமுமின்றி அமருங்கள்.’

எவ்வாறிருப்பினும், கூறுகின்றார்கள்: ‘நான் அந்தத் தலைப்பாகையைக் கையால் ஒதுக்கி வைத்துவிட்டு பாயில் அமர்ந்து விட்டேன். பிறகு என்னுடைய நிலையை விவரிக்கத் தொடங்கினேன்: ’நான் மது அதிகமாகக் குடிக்கிறேன். மேலும் பல பாவங்களும் செய்கிறேன். அல்லாஹ் மற்றும் ரஸூல் பற்றி எனக்கு எதுவும் தெரியாது, ஆனால் இந்தத் தருணத்தில் உங்கள் முன்னிலையில் நான் கிறித்தவ மதத்திலிருந்து விலகி, தவ்பா செய்து முஸ்லிமாகின்றேன்.

இவை அனைத்தும் நிகழ்ந்திருந்தபோதிலும் நான் கிறித்தவனாக மாறியிருந்தேன். ஆனால், இப்போது தங்களுடைய இந்த நிலையைக் கண்டு, தங்களுடைய வார்த்தைகளைக் கேட்டு நான் முஸ்லிமாகிறேன்; ஆனால் எனக்குப் பழகிப்போன இந்தத் தீய பழக்கங்களை (குறைகளை) விடுவது கடினமாகத் தோன்றுகிறது’ என்றார்.

**ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: இஸ்திஃக்ஃபார் செய்யுங்கள்; ஐவேளைத் தொழுகைக்கான பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இது ஒரு மாமருந்தாகும். தீமைகள் உருவாகிவிட்டால், மனிதன் மார்க்கத்தை விட்டு விலகிவிட்டால், பின்னர் அவன் அதிகமாக பாவமன்னிப்புக் கோர வேண்டும்; தொழுகைகளில் அழுத்தம் கொடுக்க வேண்டும்.‘**

கூறுகின்றார்கள்: நான் ஹுஸூருக்கு அருகில் அமர்ந்திருந்தபோது எனது நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. நான் அழுதுகொண்டே இருந்தேன். அதே நிலையில் பாவமன்னிப்புத் தேடுவதிலும், தொழுகையிலும் நிச்சயம் ஈடுபடுவேன் என்று உறுதியளித்தேன். மேலும் அன்னாரின் அனுமதி பெற்று வந்து விட்டேன். அதன் தாக்கம் என் இதயத்தில் தற்போது வரை உள்ளது. இந்த கர்னல் ஸாஹிப் இதே (அப்துல்லாஹ் ஆத்தம் மார்க்க) விவாதங்களில் பங்கேற்றிருந்தார். அவர் கிறிஸ்தவர்கள் பக்கம் அமர்ந்திருந்தார். ஆனால், அவரது இயல்பு நல்லதாக இருந்தது. அல்லாஹ் தாக்கத்தை ஏற்படுத்தினான். மேலும் அவர் மீண்டும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு விட்டார். (அஸ்ஹாபே அஹ்மது, பாகம் 4, பக்கம் 150 - 151)

மௌலவி அப்துல் கரீம் ஸாஹிப் ஸியால்கோட்டி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

(‘இது அநேகமாக 1896-ஆம் ஆண்டின் நிகழ்வாக இருக்கும், ஏனெனில் அன்னார் இந்தக் கூற்றை 1900-ல் வெளியிட்டிருந்தார்கள்)

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த விஷயமாகும் என்று கூறுகின்றார்கள்: ‘அன்னாரது வீட்டு மக்கள் லூதியானாவுக்குச் சென்றிருந்தார்கள். ஜூன் மாதமாக இருந்தது. வீடு புத்தம் புதிதாக இருந்தது. மதிய வேளையில் அங்கு ஒரு கட்டில் போடப்பட்டிருந்தது, அதில் படுத்துவிட்டேன். ஹஸ்ரத் (அலை) அவர்கள் உலாவிக் கொண்டிருந்தார்கள்.

நான் ஒரு முறை கண்விழித்தபோது, அன்னார் (அலை) தரையில் எனது கட்டிலுக்குக் கீழே படுத்திருந்தார்கள். நான் மரியாதையாக பதற்றத்துடன் எழுந்து அமர்ந்தேன். அன்னார் (அலை) மிகுந்த அன்புடன், நீங்கள் ’ஏன் எழுந்தீர்கள்?’ என்று என்னிடம் கேட்டார்கள். ’தாங்கள் கீழே படுத்துள்ளீர்கள்; நான் மேலே உறங்குகின்றேன் என்று நான் கூறினேன்.’ அன்னார் (அலை) புன்னகைத்தவாறு,’நானோ உங்களுக்குக் காவல் காத்துக் கொண்டிருந்தேன்; சிறுவர்கள் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள்; உங்கள் தூக்கம் கலைந்து விடாமல் இருக்க அவர்களை தடுத்துக் கொண்டிருந்தேன் என்று கூறினார்கள்.‘(ஸீரத்தே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் - ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி ஸாஹிப் இர்ஃபானி ஸாஹிப், பக்கம் 147)

ஹஸ்ரத் முன்ஷி இமாமுத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் தமது பைஅத் செய்த நேரத்தின் காட்சியை எடுத்துரைக்கின்றார்கள்:

‘நான் 1894-ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அருளுக்குரிய கரங்களில் பைஅத் செய்தேன். மாலைத் தொழுகைக்குப் பிறகு, என் சகோதரர் முன்ஷீ அப்துல் அஸீஸ் ஸாஹிப் மற்றும் பாய் ஜமாலுத்தீன் ஸாஹிப் ஆகியோர் என்னுடன் இருந்தனர். தொழுகை முடிந்ததும், முன்ஷீ ஸாஹிப் (ரலி) அவர்கள் என்னை நோக்கி சைகை செய்தவாறு, (ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் சமூகத்தில்) இவருக்கும் பைஅத் செய்து வையுங்கள்’ என்று வேண்டுகோள் வைத்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள், ’உள்ளே வாருங்கள்’ என்று கூறினார்கள். நான் பைத்துல் ஃபிக்ர் அறைக்குள் தனியாகச் சென்றபோது, ஹுஸூர் (அலை) ஒரு கட்டிலின் கால்மாட்டில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் என்னைக் கட்டிலின் தலைமாட்டில் அமருமாறு கூறினார்கள். நான் முதலில் அமரத் தயங்கினேன், ஆனால் ஹுஸூர் (அலை) மீண்டும் கட்டளையிட்டதால் நான் அங்கு அமர்ந்தேன், ஹுஸூர் (அலை) எனக்கு பைஅத் செய்து வைத்தார்கள்.‘

ஹுஸூர் (அலை) அவர்களின் இந்த நடத்தை என்னை வியப்பில் ஆழ்த்தியது. தமக்கு நிகராக யாரையும் அமர வைக்காத அந்த பீர்மார்கள் எங்கே? இந்த எளிய வேலைக்காரனைக் கட்டிலின் தலைமாட்டில் அமரச் செய்த இறைவனால் அனுப்பப்பட்ட மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எங்கே!‘ நல்ல பகுதியில் அவர்கள் அமர வைத்தார்கள்.

என் சகோதரர் முன்ஷீ அப்துல் அஸீஸ் ஸாஹிப் (ரலி) அறைக்குள் நுழையவில்லை. ஆனால், வெளியில் இருந்து இந்த காட்சியைக் கண்டுகொண்டிருந்தார்.(அஸ்ஹாபே அஹ்மது, பாகம் 1, பக்கம் 112)

ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருமுறை மறைந்த முன்ஷீ அரோடா ஸாஹிப் (ரலி) அவர்களும், நானும் லூதியானாவில் ஹுஸூர் (அலை) அவர்களின் சமூகத்தில், ’ஒருமுறை ஹுஸூர் கபுர்தலாவுக்கு வருகை தரவேண்டும்’ என்று விண்ணப்பித்தோம்.

அந்த நாட்களில் கபுர்தலாவுக்கு இரயில் வசதி கிடையாது. ஹுஸூர் (அலை) அவர்கள், ’நாம் கண்டிப்பாக எப்போதாவது வருவோம்’ என்று வாக்குறுதி அளித்தார்கள். அதற்குப் பிறகு விரைவாகவே ஹுஸூர் (அலை) அவர்கள் எந்த முன்னறிவிப்பும் இன்றி ஒருநாள் கபுர்தலாவுக்கு வருகை தந்து விட்டார்கள். மேலும், குதிரை வண்டியில் இருந்து இறங்கி, அதற்கு கபூர்தலாவிற்கு அருகில் உள்ள ஃபத்ஹ் பள்ளிவாசலுக்கு சென்று விட்டார்கள். ஹாஃபிழ் ஹாமித் அலி ஸாஹிப் உடன் இருந்தார்கள். பள்ளிவாசலில் இருந்து ஹுஸூர் (அலை) அவர்கள் அங்கு இருந்த முல்லாவை அனுப்பினார்கள். அவர் ஒரு அஹ்மதி அல்லாதவராக இருந்தார். முன்ஷீ அரோடா ஸாஹிப் அல்லது முன்ஷீ ஸஃபர் அஹ்மத் ஸாஹிபிற்கு நாம் வந்திருப்பதை தெரியப்படுத்துங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார்கள்.

கூறுகின்றார்கள்: நானும் முன்ஷீ அரோடா ஸாஹிபும் நீதிமன்றத்தில் வேலை செய்து கொண்டிருந்தோம். நீதிமன்ற எழுத்தர் ஒருவர் வந்து, பள்ளிவாசலில் மிர்ஸா ஸாஹிப் வந்து தங்கியிருக்கின்றார்; உங்களுக்கு தகவல் கொடுக்கும்படி அன்னார் என்னை அனுப்பியுள்ளார் என்று கூறினார். முன்ஷீ அரோடா ஸாஹிப் மிகுந்த கோபம் கலந்த ஆச்சரியத்துடனும் பஞ்சாபி மொழியில், தேக்கோ தான் தேரி மஸீத் விச் ஆகே மிர்ஸா ஸாஹிப் டெஹர்னா ஸீ அதாவது, ’பார், உனது பள்ளிவாசலில் வந்து மிர்ஸா ஸாஹிப் தங்குவாரா? இது எப்படி சாத்தியம்? பொய் கூறாதே! என்று கூறினார். ’வாருங்கள்! சென்று என்னவென்று பார்க்கலாமே! என்று நான் கூறினேன்’. முன்ஷீ ஸஃபர் ஸாஹிப் கூறினார்கள். பின்னர் முன்ஷீ ஸாஹிப் தமது தலைப்பாகையை அவசரமாகக் கட்டிக்கொண்டு



என்னுடன் புறப்பட்டார்கள்.

நாங்கள் பள்ளிவாசலுக்குச் சென்று பார்த்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் தரையில் படுத்திருந்தார்கள். மேலும் ஹாஃபிஸ் ஹாமித் அலி ஸாஹிப் (ரலி) அவர்கள் அன்னாரின் கால்களை அமுக்கிக் கொண்டிருந்தார்கள். அருகில் ஒரு கோப்பையும், கரண்டியும் வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்தபோது, ஒருவேளை அன்னார் (அலை) பால் குடித்திருக்கலாம் அல்லது ஏதேனும் ரொட்டியை அதில் நனைத்துச் சாப்பிட்டிருக்கலாம் என்று தெரிய வந்தது. முன்ஷீ அரோடா ஸாஹிப் அவர்கள் ஹுஸூர் (அலை) இவ்வாறு தான் வரவேண்டுமா? எங்களுக்குத் தகவல் கொடுத்திருக்கலாமே; நாங்கள் கர்தார்பூர் நிலையத்திற்கு வந்திருப்போமே. அதற்கு, 'தகவல் கொடுப்பதற்கு என்ன தேவை இருந்தது? உங்களிடம் நாம் வாக்குறுதி செய்திருந்தோம்; அதனை நிறைவேற்ற வேண்டியிருந்தது. எனவே அதைச் செய்துவிட்டோம்' என்று ஹுஸூர் (அலை) அவர்கள் பதிலளித்தார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மத், பாகம் 4, பக்கம் 141-142)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'எனது நிலைமை என்னவென்றால், யாருக்காவது வேதனை ஏற்பட்டு, நான் தொழுகையில் மும்முரமாக இருந்தால், அவரது குரல் என் காதில் வந்து விழுந்து விட்டால், நான் தொழுகையை முறித்துக்கொண்டு அவருக்கு ஏதேனும் நன்மை செய்ய முடியுமென்றால் அவருக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும், என்னால் இயன்றவரை அவரிடம் அனுதாபத்தைக் காட்ட வேண்டும் என்றும் நானோ விரும்புகிறேன்.

ஒரு சகோதரனின் துன்பத்திலும், துயரத்திலும் அவருக்கு உதவாமல் இருப்பது என்பது நல்லொழுக்கத்திற்கு எதிரானதாகும். உங்களால் வேறு எதுவும் செய்ய முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் அவருக்காக துஆவாவது செய்யுங்கள். நம்மவர்கள் ஒருபக்கம் இருக்கட்டும்; அந்நியர்களுடனும், இந்துக்களுடனும் இத்தகைய நல்லொழுக்கத்திற்கான முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும் என்றும், அவர்களிடம் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் நான் கூறுகிறேன். ஒருபோதும் ஆணவம் படைத்த இயல்பு கொண்டவராக இருக்கக் கூடாது.'

இது வெறும் அறிவுரை மட்டுமல்ல; அன்னாரது எத்தனை வாழ்க்கைச் சம்பவங்களை நாம் கேட்கிறோமோ, அவையனைத்திலும் அன்னாரது சொந்தச் செயல்பாடும் இவ்வாறாகவே இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொடர்ந்து எழுதுகின்றார்கள்:

'ஒருமுறை நான் வெளியே உலாவச் சென்று கொண்டிருந்தேன். அப்துல் கரீம் என்ற ஒரு பட்வாரி (எனும் கிராமக் கணக்கர்) என்னுடன் இருந்தார். அவர் சற்று முன்னால் சென்றுகொண்டிருந்தார். நான் பின்னால் இருந்தேன். வழியில் சுமார் 70 அல்லது 75 வயதுடைய ஒரு முதிய ஏழைப் பெண்மணி சந்தித்தார். அவர் ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்து, அதாவது அந்த பட்வாரியிடம் கொடுத்து அதை வாசிக்கும்படி கூறினார்.' ஆனால், அவர் (பட்வாரி) அந்தப் பெண்ணை அதட்டி விரட்டிவிட்டார்.'

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'என் மனம் மிகவும் வேதனைப்பட்டது. நான் அவரிடம் (பட்வாரியிடம்) நெருங்கிச் சென்றேன். 'அவர் அந்தக் கடிதத்தை என்னிடம் தந்தார். நான் அதை வாங்கிக் கொண்டு நின்றுவிட்டேன்; மேலும் அதை அவருக்கு வாசித்துக் காட்டி நன்றாகப் புரிய வைத்தேன். அதனால் அவருக்கு மிகவும் வெட்கத்திற்குள்ளாக நேர்ந்தது. ஏனெனில், அங்கு அவருக்கு நிற்கவும் வேண்டியதாயிற்று; மேலும் அவர் நற்கூலியிலிருந்தும் இழப்பிற்குரியவராகி விட்டார்.' (மல்ஃபூஸாத், பாகம் 1, பக்கம் 415-416, 2022 பதிப்பு)

அவர் பணிவுடன் அந்தக் கடிதத்தைப் படித்துக் கொடுத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

'இந்த எளியவன் சமர்ப்பிப்பது என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஒருவரை சந்திக்கும்போது புன்னகையுடனே சந்திப்பார்கள். மேலும் அன்னாரைச் சந்திக்க வருபவர்களின் அனைத்துக் கவலைகளும், அதாவது துன்பங்களும் நீங்கிவிடும். அன்னாரது புன்னகையைப் பார்த்தே, 'அஹ்மதியான ஒவ்வொருவரும் இந்த அவையின் உள்ளே நுழையும்போது தன் இதயத்தின் அனைத்துத் துயரங்களும் கழுவப்பட்டுவிட்டதாக உணர்வார்கள்.' அன்னாரது புன்னகைக்கும் முகத்தின் மீது பார்வை பட்ட உடனேயே, ஒட்டுமொத்த உடலிலும் மகிழ்ச்சியின் அலை பரவிவிடும். மிகச் சிறிய மனிதனின் பேச்சையும் கூட மிகுந்த கவனத்துடனும், பேரன்புடனும் கேட்டுப் பதிலளிப்பது அன்னாரது வழக்கமாக இருந்தது. ஒவ்வொரு நபரும் தன்னைத்தான் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் எல்லோரையும் விட அதிகமாக நேசிப்பதாக எண்ணிக் கொள்வார்.

இறைத் தூதர்களின் அவைக்குரிய ஒழுக்கங்களை அறியாத 'அறிமுகமில்லாத' பாமர மக்கள், அன்னாரது அவைக்கு வரும்போது, நீண்ட நேரம் தங்களுக்குத் தெரிந்த கதைகளைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள், ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் அமைதியாக அவர்களுடன் அமர்ந்து கேட்டுக் கொண்டே இருப்பார்கள். ஒருபோதும் யாரிடமும் 'இப்போது போதும்; நிறுத்துங்கள்' என்று கூற மாட்டார்கள்.' (ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, பக்கம் 227)

ஒரு நபர் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் சமூகத்தில் வந்து, அன்னாரது பாதங்களைத் தொட்டு வணங்குவதற்காகத் தன் தலையைக் கீழே குனிந்தார். ஹஸ்ரத் அவர்கள் தம் கையால் அவரது தலையை உயர்த்தி அமர வைத்தார்கள். மேலும், 'இந்த வழிமுறை ஆகுமானதன்று; அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூற வேண்டும்; மேலும் முஸாஃபஹா (கைகுலுக்குதல்) செய்ய வேண்டும்' என்று கூறினார்கள். (மல்ஃபூஸாத், பாகம் 9, பக்கம் 168, 2022 பதிப்பு)

ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

'காஷ்மீரிலிருந்து ஓர் உயரமான ஏழை அஹ்மதி நபர், மிகுந்த தூய்மையுடன் தன் கிராமத்திலிருந்து காதியான் வரை உள்ள முழு வழிப் பாதையையும் நடந்தே கடந்து வந்தார். அவரது பெயர் அநேகமாக 'அக்ல் ஜோ' என்பதாக இருந்தது. அவர் ஒருமுறை காதியானுக்கு வந்திருந்தபோது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஒரு நாள் காலை உலாவச் செல்வதற்காக வெளியே வருகை தந்தார்கள். சௌக் ( எனும் நாற்சந்திப்பு) பகுதியில் அந்த காஷ்மீரி நபரும் நின்று கொண்டிருந்தார்.' அவர் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களைப் பார்த்தபோது,' அன்பின் மிகுதியால் அழுதவாறு அன்னாரின் பாதங்களில் தலையை வைத்து விட்டார். அன்னார் (அலை) குனிந்து அவரை (மேலே) தூக்கினார்கள். மேலும், இது ஆகுமற்றதாகும்; மனிதனுக்கு ஸஜ்தா செய்யக் கூடாது என்று கூறினார்கள்.

(ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் திக்ரே ஹபீப், பக்கம் 162)

அதாவது எந்த மனிதனுக்கும் ஒருபோதும் ஸஜ்தா செய்தல் கூடாது; அவரது பாதங்களில் சிரம் பணியக் கூடாது.

இதே போன்று ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் ஸாஹிப் ஸியால்கோட்டி (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஒருமுறை உலகின் பீர் ஃபக்கீர்மார்கள் மீது அன்பு கொண்டிருந்த ஒரு நபர் இருந்தார்.

அதாவது அவர் அவர்களின் பக்தராக இருந்தார். மேலும் அவர்களின் சபையில் அமரும் பழக்கம் அவருக்கு இருந்தது. பீர்மார்கள் மற்றும் ஃபக்கீர்மார்களின் சபையில் அமரும் வழக்கம் அவருக்கு இருந்தது.

கூறுகின்றார்கள்: அவர் நமது பள்ளிவாசலுக்கு வந்தார். மக்கள் சுதந்திரமாக ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களுடன் உரையாடுவதைக் கண்டு ஆச்சரியத்திற்குள்ளாகி விட்டார். மேலும், தங்களுடைய பள்ளிவாசலில் எந்தவித மரியாதையும் இல்லை.' பீர்மார்கள் மற்றும் ஃபக்கீர்மார்களின் சபைகளிலிருந்து எழுந்து வந்த நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம், தங்களுடைய பள்ளிவாசலிலோ எவ்வித ஒழுங்கும் இல்லை ; மக்கள் எவ்வித தயக்கமுமின்றி அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் அச்சமின்றியும், துணிச்சலாகவும் அமர்ந்து தங்களுடன் உரையாடுகின்றனர். அதாவது அவர்கள் தங்களுக்கு உரிய கண்ணியமும், மரியாதையும் வழங்குவதில்லை என்று கூறினார்.

அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்:

'மக்கள் ஒரு கொடூரமான மிருகத்தைக் கண்டு அஞ்சுவது போல் என்னைக் கண்டு அஞ்சும் அளவுக்கு, நான் ஒரு கோபக்காரனாகவோ அல்லது பயங்கரமானவனாகவோ அமர்ந்திருப்பது எனது கொள்கை அன்று. மேலும் நான் ஒரு சிலையாக மாறுவதை கடுமையாக வெறுக்கிறேன். நான் சிலை வழிபாட்டை நிராகரிப்பதற்காகவே வந்துள்ளேனே தவிர, நானே ஒரு சிலையாக மாறி மக்கள் என்னை வழிபட வேண்டும் என்பதற்காக அல்ல. அல்லாஹ் நன்கறிவான். நான் எனது நஃப்ஸை மற்றவர்களை விட எள்ளளவும் உயர்வாகக் கருதுவதில்லை. என்னைப் பொறுத்தவரை, ஒரு அகந்தையுள்ளவரை விட பெரிய சிலை வணங்கியும், தீயவரும் வேறு எவரும் இருக்க முடியாது. **அகந்தை கொண்டவர் எந்த இறைவனையும் வணங்குவதில்லை, மாறாக அவர் தன்னையே வணங்குகிறார்.**

(ஹஸ்ரத் யஃகூப் அலி இர்ஃபானி ஸாஹிப் (ரலி) அவர்களின் ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) எனும் நூல், பக்கம் 314)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் முன்ஷி ஸஃபர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பை எடுத்துரைக்கின்றார்கள். கூறுகின்றார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் டெல்லியிலிருந்து திரும்பும் போது அம்ரித்ஸரில் இறங்கினார்கள். ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் (ரலி) அவர்களும் உடன் இருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் ஒரு குழந்தையை மடியில் எடுத்துக் கொண்டார்கள்.

அநேகமாக மியான் பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களாக இருக்கலாம்.

மற்றொரு கையில் ஒரு கனமான பையை எடுத்துக் கொண்டார்கள். அதாவது ஒரு பக்கம் குழந்தை, மறுபக்கம் பை.

'மேலும் என்னிடம் கூறினார்கள்: நீங்கள் வெற்றிலை பெட்டியை எடுத்துக் கொள்ளுங்கள்.'

இவரும் உடன் இருந்தார். அவரிடம் அந்த சிறிய வெற்றிலை பெட்டியை எடுத்துக் கொள்ளுமாறு கூறினார்கள்.

'நான் கூறினேன், ஹுஸூர்! இந்த பையை என்னிடம் கொடுத்து விடுங்கள். அதற்கு, 'வேண்டாம்! என்று அவர்கள் கூறிவிட்டார்கள். நான் ஒன்றிரண்டு முறை கூறியபோதும் ஹுஸூர் (அலை) அவர்கள் அதையே தான் கூறினார்கள், எனவே நான் 'எப்படியோ' வெற்றிலை பெட்டியை எடுத்துக் கொண்டேன், நாங்கள் நடக்கத் தொடங்கினோம். அதற்குள் ரயில் நிலையத்தில் இருந்த இரண்டு மூன்று இளம் ஆங்கிலேயர்கள் என்னிடம் வந்து, ஹுஸூர் அவர்களிடம் சற்று நிற்குமாறு கூறுங்கள் என்றனர். எனவே நான் ஹுஸூர் அவர்களிடம் விண்ணப்பித்தேன். இவர்கள் நீங்கள் சற்று நிற்க வேண்டும் என விரும்புகிறார்கள் என்று கூறினேன்.. ஹுஸூர் அவர்கள் நின்றார்கள்' ரயில் நிலையத்தில்

ஆங்கிலேயர்கள் இருந்தனர். 'மேலும் அவர்கள் அதே நிலையில் ஹுஸூர் (அலை) அவர்களுடன் ஒரு புகைப்படத்தை எடுத்துக் கொண்டனர்.' ஒரு குழந்தையையும் தூக்கிக்கொண்டு, சுமையையும் சுமந்து கொண்டிருந்த அந்த நிலையிலேயே அவர்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அவர்கள் புகைப்படம் எடுக்க விரும்பினார்கள். இவ்வளவு எளிமையாக இருந்தபோதிலும், அன்னாருடைய ஆளுமையால் ஈர்க்கப்பட்டு, இந்த பெரிய மனிதரின் புகைப்படத்தை நாங்கள் எடுக்க விரும்புகிறோம் என்று அவர்கள் கூறினர். (ஸீரத்துல் மஹ்தி, பாகம் 2, பக்கம் 58-59, அறிவிப்பு எண் 1073)

ஹஸ்ரத் மலிக் மௌலா பக்ஷ் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

'மியான் ஜான் முஹம்மது என்ற பெயருடைய ஒரு நபர் அமிர்தசரஸில் எங்கள் வீட்டிற்கு எதிரே வசித்து வந்தார். அவர் அதிகம் பேசுபவராக இருந்தார். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் 'சுர்மா சஷ்மா ஆர்யா' புத்தகத்தை அவர் செயல்ரீதியில் மனனம் செய்திருந்தார், மேலும், படிப்பறிவில்லாதவராக இருந்தபோதிலும் ஆரியர்களுடன் அவர் நன்றாக விவாதம் செய்து வந்தார். அவருக்கு மனச்சோர்வு நோய் பாதித்திருந்தது; 'டிப்ரஷன்' மற்றும் பைத்தியக்காரத்தனம் போன்ற நிலை ஏற்பட்டு வந்தது. 'அவரைச் சந்திக்கும் அனைவரையும்' நீண்ட நேரம் நிறுத்தி வைத்து, 'தன்னுடைய நோயின் நீண்ட விரிவான விபரங்களை' கூறிவந்தார். மக்கள் சலிப்படைந்து வந்தார்கள்; மேலும் அவருடைய பேச்சைக் கேட்பதைத் தவிர்த்து வந்தார்கள்.

'நீங்கள் காதியானுக்குச் சென்று (ஹஸ்ரத்) மௌலவி ஹக்கீம் நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களிடம் சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்' என்று யாரோ ஒருவர் அவரிடம் கூறினார். அதற்கு, 'அவர் பெரிய மனிதர்; என் கதையை அவர் எப்படி கேட்பார்?' என்று அவர் கூறினார். 'ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவ்வல் (ரலி) எப்படி என் கதையைக் கேட்பார்? அது மிக நீண்ட கதை' என்று அவர் கூறினர். (பரிந்துரைத்த) அந்த நபர், 'இல்லை, அவர் மிகவும் நற்பண்புகள் கொண்ட மனிதர் ஆவார்; கண்டிப்பாக உங்கள் பேச்சைக் கேட்பார்' என்றார். எனவே, அந்த ஸாஹிப் காதியானுக்கு சென்றார். தற்செயலாக, அவர் குதிரை வண்டியிலிருந்து இறங்கிய அதே நேரத்தில், ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் தமது காதிம்களுடன் நடைப்பயிற்சி முடிந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்கள்.

'இதோ (ஹஸ்ரத்) மிர்ஸா ஸாஹிப் வந்து கொண்டிருக்கிறார்' என்று குதிரை வண்டிக்காரர் கூறினார். உடனே அந்த ஸாஹிப், குதிரை வண்டியிலிருந்து இறங்கி,' நேராகச் சென்று முஸாஃபா செய்தார் (கை குலுக்கினார்). மேலும், தனது மனச்சோர்வு நோயின் நிலையை விவரிக்கத் தொடங்கினார். 'பதற்றத்தில் அவர் விவரித்த விதம் என்னவென்றால்' - நீண்ட நீண்ட கதைகளைச் சொல்லத் தொடங்கி விட்டார். கதை எவ்வளவு நீண்டு கொண்டு சென்றதென்றால், மக்கள் அனைவரும் சலிப்படைந்து விட்டனர். ஆனால் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் மிகுந்த அமைதியுடன் நின்று, அவரது கையைத் தம் கையில் ஏந்தியபடி அனைத்தையும் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தார்கள். இறுதியில், எனது வாய் வறண்டு விட்டது; என்னால் இனி பேச முடியாது; நான் இவ்வளவு நேரம் பேசி விட்டேன்; தாங்கள் கேட்டுக் கொண்டே செல்கின்றீர்களே? என்று 'அந்த நோயாளியான மியான் ஜான் முஹம்மது ஸாஹிபே கூறிவிட்டார். அப்போது, மிகவும் நல்லது ; நீங்கள் விருந்தினர் இல்லத்திற்கு செல்லுங்கள்; மேலும் சிறிது உணவு அருந்துங்கள்; பின்னர் மவ்லவி ஸாஹிபிடம் (அதாவது ஹக்கீம் நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களிடம்) நிலைமையை கூறுங்கள் என்று ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் கூறினார்கள்.

ஆக, புத்துணர்வு பெற்று அந்த நபர் ஹஸ்ரத் ஹகீம் நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி விட்டார். 'மேலும் அதே நீண்ட கதையைக் கூறத் தொடங்கி விட்டார். (ஹஸ்ரத்) மௌலவி ஸாஹிப் அவர்கள், உடனே ஒரு மருந்துச் சீட்டை எழுதிக் கொடுத்தார்கள்.' அன்னார் ஒரு மருத்துவராக இருந்ததால், அவர் கொஞ்சம் விவரித்தவுடனேயே அவருக்கு என்ன நோய் இருக்கிறது? என்று அன்னாருக்கு தெரிந்து விட்டது. மருந்துச் சீட்டை எழுதிக் கொடுத்துவிட்டு, 'உங்கள் நோய் எனக்குத் தெரிந்துவிட்டது என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அவருடைய கதையைக் கேட்கவில்லை'. அவர் அந்த மருந்துச் சீட்டை வாங்கிக் கொண்டார், ஆனால் கூறினார்:

மௌலவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் மிகவும் நற்பண்புகள் உள்ளவர் என்று மக்கள் கூறினர், ஆனால் ஹஸ்ரத் மிர்ஸா ஸாஹிப் (அலை) அவர்களின் நற்பண்புகளுடன் இவருக்கு என்ன ஒப்பீடு உள்ளது? இதன் தாக்கம் அவர் மீது எவ்வளவு அதிகமாக ஏற்பட்டதென்றால், அவர் பைஅத் செய்து விட்டார்.

இதற்கு முன்னர் அவர் பைஅத் செய்திருக்கவில்லை. இந்த சம்பவத்திற்குப் பிறகு அவர் பைஅத் செய்து விட்டார்.

கூறுகின்றார்கள்: இந்த சம்பவத்தை அவர் முன்னிலையில் 'டாக்டர் இபதுல்லாஹ் ஸாஹிப் மர்ஹூம் (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள். மேலும், அவர் இதை உறுதிபடுத்தினார்.

(அஸ்ஹாபே அஹ்மத், பாகம் 1, பக்கம் 143-144)

இதேபோல், ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

மாஸ்டர் அல்லாஹ் தத்தா ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுத்துப்பூர்வமாக இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: 'ஒரு முறை லாகூரில் அஹ்மதிய்யா கட்டிடத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் தங்கியிருந்தார்கள். அப்போது, ஷர்க்பூர் பைனீயிலிருந்து மிகவும் பலவீனமான, வயதான, இயலாத 'முஸ்தகீம்' என்ற பெயருடைய ஒரு நபர் ஹுஸூர் (அலை) அவர்களின் சமூகத்தில் சந்திப்புக்காக வருகை தந்தார்கள். மக்களின் கூட்ட நெரிசலால் அவரால் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு அருகில் செல்ல முடியவில்லை. அவர் உரத்த குரலில், 'ஹுஸூர்! நான் தங்களை சந்திக்க வந்துள்ளேன்' என்று கூறினார். ஹுஸூர் (அலை) அவர்கள், 'பாபா ஜீயை (பெரியவரை) முன்னால் வர விடுங்கள்' என்று கூறினார்கள். மக்கள் அவருக்கு வழிவிட்டனர். அவர் (பாபா) 'முதியவர்; அவரால் சரியாக எழ முடியவில்லை' என்று கூறப்பட்டது. இதைக் கேட்ட ஹுஸூர் (அலை) அவர்கள், 'பாபா ஜிக்கு சிரமமாக உள்ளது' என்று கூறி, தாமே எழுந்து அவரிடம் சென்று அமர்ந்தார்கள்.' (ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, பக்கம் 672, அறிவிப்பு எண்: 740)

இதேபோன்று, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்களின் அறிவிப்பை கூறுகின்றார்கள்:

'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் சில காதிம்களுடன் பாவா ஸாஹிப் (ரலி) அவர்களின் மேலங்கியைப் பார்ப்பதற்காக டேரா பாபா நானக் சென்றார்கள்; அப்போது, அங்கிருந்த ஒரு பெரிய மரத்தின் நிழலில் சில துணிகளை விரித்து, ஜமாஅத் மக்கள் ஹுஸூர் (அலை) அவர்களுடன் அமர்ந்தார்கள். மௌலவி முஹம்மது அஹ்ஸன் ஸாஹிப் (ரலி) அவர்களும் உடன் இருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்களின் வருகையின் செய்தியைக் கேட்டு கிராம மக்கள் அங்கு ஒன்றுகூடத் தொடங்கி விட்டனர். அவர்களில் முதலில் வந்த சிலர், மௌலவி முஹம்மது அஹ்ஸன் ஸாஹிப் (ரலி) அவர்களை மஸீஹ் மவ்வூத் என்று நினைத்து அவர்களுடன் கை குலுக்கி அமர்ந்து விட்டனர். மூன்று அல்லது நான்கு பேர் கை குலுக்கிய பிறகு, அவர்களுக்கு ஏதோ தவறு ஏற்பட்டுள்ளது என்பது புரிந்தது. அதன் பிறகு, தம்மிடம் கை குலுக்கும் அத்தகைய ஒவ்வொரு நபரையும் ஹுஸூர் (அலை) அவர்களின் பக்கம் திருப்பி விட்டு, 'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) இவர்கள் ஆவர்' என்று மௌலவி முஹம்மது அஹ்ஸன் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். (ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, பக்கம் 307, அறிவிப்பு எண்: 401)

ஹஸ்ரத் ஷேக் அப்துல் காதிர் ஸாஹிப் ((ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மூத்த மகன் ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் அஹ்மது ஸாஹிப் மர்ஹூம் அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்:

'தந்தையார் அவர்கள் தமது வாழ்நாளை ஒரு முஹலாயராகக் கழிக்கவில்லை; மேலும், தலைவரின் மகனாக இருந்தார்கள்; முஹலாயராக இருந்தார்கள். எனினும், ஒரு ஃபகீர் என்ற ரீதியில் (தமது வாழ்நாளைக்) கழித்தார்கள்.'

காதியானைச் சேர்ந்த கன்ஹைய்யா லால் ஸர்ராஃப் என்பவரின் கூற்றாகும் இது:

ஒருமுறை ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களுக்கு பட்டாலாவுக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஒரு குதிரை வண்டியை வாடகைக்கு எடுத்து வரும்படி அன்னார் (அலை) என்னிடம் கூறினார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் நதியை அடைந்தபோது, வீட்டில் ஏதோ ஒரு பொருள் விடுபட்டுவிட்டது என்பது நினைவுக்கு வந்தது. குதிரை வண்டிக்காரரை அங்கேயே நிறுத்திவிட்டு, அன்னார் (அலை) சுயமே நடந்து திரும்பி (காதியானுக்கு) சென்றார்கள். குதிரை வண்டிக்காரருக்குப் பாலம் அருகில் வேறு சவாரிகள் கிடைத்துவிட்டன. அவர் அவர்களுடன் பட்டாலா நோக்கிப் புறப்பட்டுவிட்டார். ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் (பொருளை எடுத்துக்கொண்டு) கால்நடையாகவே பட்டாலா சென்றடைந்தார்கள். நான் குதிரை வண்டிக்காரரை அழைத்து அடித்தேன். மேலும், 'கயவனே! மிர்ஸா நிஸாமுத்தீனாக இருந்திருந்தால், உனக்கு மூன்று நாட்கள் அங்கு உட்கார நேர்ந்திருந்தாலும் நீ (அங்கேயே) அமர்ந்திருப்பாய்! ஆனால், இவரோ ஒரு நல்ல மற்றும் எளிமையான இயல்பு கொண்ட நபராக இருக்கின்றார்; அதனால்தான் நீ அவரை விட்டுவிட்டு ஓடிவிட்டாய்' என்று கூறினேன்.

எவ்வாறாயினும், கூறுகின்றார்கள்:

'மிர்ஸா ஸாஹிபுக்கு, அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இந்த விஷயம் தெரிய வந்தபோது, அன்னார் (அலை) என்னை அழைத்து, 'அவர் என் பொருட்டு ஏன் காத்துக்கொண்டிருக்க வேண்டும்? அவருக்கு கூலி கிடைத்துவிட்டது, அவர் போய்விட்டார்; நீங்கள் ஏன் அவர் மீது அநீதி இழைத்தீர்கள்?' என்று கேட்டார்கள்.'

(ஹயாத்தே தய்யிபா, பக்கம் 15-16)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அறிவுரை கூறும் போது கூறுகின்றார்கள்:

'ஒவ்வொரு நபரும் தஹஜ்ஜுத் வேளையில் எழுவதற்கு முயற்சி செய்ய வேண்டும், மேலும் ஐவேளை தொழுகைகளிலும் எந்த வகையான விரக்தியும் கலக்காமல் அல்லாஹ்வின் கோபத்தை உண்டாக்கும் அனைத்து விஷயங்களிலிருந்தும் தவ்பா செய்ய வேண்டும். தவ்பா என்பதன் பொருள், அந்த அனைத்து தீய செயல்களையும், இறைவனின் அதிருப்திக்கான காரணிகளையும் கைவிட்டு விட்டு, ஓர் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்; மேலும் முன்னால் அடியெடுத்து வைக்க வேண்டும்;

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும். நல்லொழுக்கத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இதிலும் இறைவனின் கருணை உள்ளது. மனிதப் பழக்கவழக்கங்களை நாகரீகமானதாக ஆக்குங்கள். கோபம் கொள்ளுதல் கூடாது. பணிவும், அடக்கமும் அதற்குப் பதிலாக வர வேண்டும். ஒழுக்கத்தைச் சரி செய்வதுடன், தமது சக்திக்கு ஏற்ப தர்மம் செய்வதையும் மேற்கொள்ளுங்கள்.'

(மல்ஃபூஸாத் பாகம் 1, பக்கம் 192, பதிப்பு 2022)

அன்னார் (அலை) தமது ஜமாஅத்திற்கு பல்வேறு விஷயங்களைப் பற்றி வழங்கிய அறிவுரையாகும் இவை.

அடுத்து, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

' இறையச்சம் கொண்டவர்களுக்கான நிபந்தனை என்னவென்றால், அவர்கள் வறுமையிலும், ஏழ்மையிலும் தங்கள் வாழ்க்கையைக் கழிக்க வேண்டும். 'இது இறையச்சத்தின் ஒரு கிளை' ஆகும். வறுமையிலும், ஏழ்மையிலும் வாழ்வது என்பது 'இறையச்சத்தின் ஒரு கிளை' ஆகும். இதன் மூலம் நாம் ஆகுமற்ற கோபத்தை எதிர்கொள்ள வேண்டும்.பெரும்,பெரும் ஞானிகளுக்கும், உண்மையாளர்களுக்கும் இறுதியான மற்றும் கடினமான இடம் கோபத்திலிருந்து தவிர்ந்திருப்பதுதான்.

தலைக்கனம் மற்றும் அகந்தையால் கோபம் பிறக்கிறது. சில சமயங்களில் சுய பெருமை மற்றும் அகந்தையின் விளைவாகவே கோபம் ஏற்படுகிறது. ஏனெனில் மனிதன் பிறரை விட தனது நஃப்ஸிற்கு முன்னுரிமை வழங்கும் அந்த நேரத்தில்தான் (அவனுக்கு) கோபம் உண்டாகிறது.

என் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவரை தாழ்ந்தவர் அல்லது உயர்ந்தவர் என்று கருதிக் கொள்வதையும் அல்லது ஒருவர் மற்றவர் மீது தற்பெருமை கொள்வதையும் அல்லது ஏளனத்துடனும் பார்ப்பதையும் நான் விரும்பவில்லை. யார் பெரியவர்? யார் சிறியவர்? என்பது இறைவனுக்கு மட்டுமே தெரியும். இது ஒரு வகையான ஏளனமாகும். இதற்குள் ஓர் ஏளனம் மறைந்துள்ளது. இந்த ஏளனம் ஒரு விதை போல வளர்ந்து அவரது அழிவுக்குக் காரணமாகிவிடுமோ என்ற அச்சம் உள்ளது. சில நபர்கள் பெரியவர்களை சந்திக்கும்போது மிக மரியாதையுடன் நடந்து கொள்கின்றனர். ஆனால் ஏழைகளின் பேச்சை தாழ்மையுடன் செவியேற்று, அவருக்கு ஊக்கம் அளிப்பவரே பெரியவர் ஆவார். அவரது கூற்றுக்கு கண்ணியமளிக்க வேண்டும்; அவருக்கு மனவேதனை அளிக்கும்படியான எந்தவொரு கடுமையான வார்த்தையையும் நாவில் கொண்டு வரக் கூடாது.

அல்லாஹ் கூறுகிறான்:

ஒருவரையொருவர் (தீய) பட்டப் பெயர் சூட்டி அழைக்காதீர்கள். ஏனெனில் நம்பிக்கை கொண்ட பின்னர் கெட்ட பெயர் எடுப்பது மிகவும் தீய ஒன்றாகும். கழிவிரக்கங் கொள்ளாதவர்கள் அநீதியிழைப்பவர்களாவார்கள். (அல் ஹுஜ்ராத்: 12)

இதனை விரிவாக விளக்கும் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) கூறுகின்றார்கள்:

'நீங்கள் ஒருவரையொருவர் வசைபாடாதீர்கள். இது பாவிகள் மற்றும் தீயவர்களின் செயலாகும். எவர், ஒருவரை அவமதிக்கிறாரோ, அவர் சுயமே அதே போன்ற நிலைக்கு ஆளாகும் வரை மரணிக்க மாட்டார்.'

உங்கள் சகோதரர்களை இழிவாகக் கருதாதீர்கள். நீங்கள் அனைவரும் ஒரே ஊற்றிலிருந்து தண்ணீர் குடிக்கும்போது, யாருடைய நற்பேறில் அதிக தண்ணீர் இருக்கிறது என்று யாருக்குத் தெரியும்? உலகக் கொள்கைகளின்படி எவரும் கண்ணிய மிக்கவராகவோ அல்லது பெரியவராகவோ ஆகிவிட முடியாது. இறைவனின் பார்வையில் எவர் இறையச்சமுடையவராக இருக்கிறாரோ, அவரே பெரியவர் ஆவார்.

நிச்சயமாக அல்லாஹ்விடம் உங்களில் எவர் அதிக இறையச்சம் உடையவரோ அவரே அல்லாஹ்விடத்தில் மிகவும் கண்ணியமானவர் ஆவார். அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவனும், நுட்பமாக அறிந்தவனுமாவான்.(அல் ஹுஜ்ராத்: 13 ).

(மல்ஃபூஸாத் பாகம் 1, பக்கம் 30-31, பதிப்பு 2022)

அல்லாஹ் நமக்கு உண்மையான பணிவையும் அடக்கத்தையும் வளர்த்துக் கொள்ளும் நற்பேறை வழங்குவானாக! மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பைஅத்தில் இணைந்து, இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின்படி செயல்பட்டு, அதன் கடமைகளை நிறைவேற்றுபவர்களாக நம்மையும் ஆக்குவானாக! ஆமீன்!

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஜுன் 26, 2026, பக்கம் 3 - 8)

தமிழாக்கம்
முரப்பி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

## உ-ம் பக்கத் தொடர்ச்சி (தலையங்கம்).....

படிப்பதும், கேட்பதும் மிகவும் அவசியமாகும். இதில் பெருமானார் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளின் தியாகங்களைப் பற்றிய மனம்கவர் சம்பவங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நாமும் நம்முள் அத்தகைய முன்மாதிரிகளை உருவாக்க முடியும். ஏனெனில், நாம் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மீது ஈமான் கொண்டு ஸஹாபிகளின் கூட்டத்தில் இணைந்திருக்கின்றோம்; இந்த அடிப்படையில் அந்த தியாகங்கள் நம்மை அழைக்கின்றன. மேலும், உலகம் முழுவதும் உள்ள நமது ஏராளமான சகோதரர்கள் கிலாஃபத்தின் நிழலின் கீழ் இத்தகைய தியாகங்களைச் செய்து வருகின்றனர். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நற்பேறை வழங்குவானாக. ஆமீன்.

கவிதை வரிகள்:
காலத்தின் மஸீஹ் இப்போது உலகிற்கு வந்துள்ளார்
இறைவன் தனது வாக்குறுதியின் நாளைக் காட்டியுள்ளான்
எவர் தற்போது ஈமான் கொண்டுள்ளாரோ அவர் அருளுக்குரியவர் ஆவார்.
என்னை ஏற்றுக் கொள்பவர் ஸஹாபிகளோடு இணைந்து விடுவார்.
பானத்தை வழங்குபவர் அதே பானத்தை அவர்களுக்கு அருந்தக் கொடுத்துள்ளார்;
எனவே, எனது எதிரிகளை அவமானப்படுத்திய எனது இறைவன் தூயவன்

* * * * * * * * * * *

## ஸீரத்துல் மஹ்தி

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

{18}பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். ஹஸ்ரத் தாயார் ஸாஹிபா (ரலி) அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது இளமைப் பருவத்தைப் பற்றி குறிப்பிட்டு வந்தார்கள். கூறினார்கள் :

இந்த வழியில் முன்னேற தொடர்ந்து நோன்பு நோற்பதும் அவசியமாகும் என்று அந்த நேரத்தில் எனக்குத் தெரிய வந்தது. அல்லது எனக்கு அவ்வாறு சைகை கிடைத்தது என்று கூறினார்கள். மேலும் அன்னார் (அலை) கூறினார்கள்: பிறகு நான் ஆறு மாதம் தொடர்ந்து நோன்பு இருந்தேன். வீட்டிலோ அல்லது வெளியிலோ எவருக்கும் நான் நோன்பு நோற்றுள்ளேன் என்பது தெரியாது, காலை உணவு வீட்டிலிருந்து வரும்போது அதனை நான் தேவையுடையவர்களுக்குக் கொடுத்துவிடுவேன், மாலை உணவை நானே உண்டு வந்தேன்.

அன்னார் (அலை) இறுதி வயதிலும் நஃபிலான நோன்புகளை நோற்று வந்தார்களா? இல்லையா? என்று நான் தாயாரிடம்,கேட்டேன். அதற்கு தாயார் ஸாஹிபா அவர்கள் இவ்வாறு கூறினார்கள்;

ஆம்! இறுதி வயதிலும் அன்னார் (அலை) நோன்பு நோற்று வந்தார்கள்; குறிப்பாக, ஷவ்வால் மாதத்தின் ஆறு நோன்புகளை அன்னார் (அலை) முறையாக நோற்று வந்தார்கள்; ஒரு சிறப்பு காரியத்திற்காக துஆ செய்ய வேண்டியிருந்தால், அன்னார் (அலை) நோன்பு நோற்று வருவார்கள். எனினும், கடைசி இரண்டு, மூன்று ஆண்டுகளில் உடல் பலவீனம் மற்றும் ரமலானின் நோன்புகளைக் கூட அன்னாரால் நோற்க முடியவில்லை. (இந்த எளியவன் கூறுகிறேன்: 'கிதாபுல்-பர்ரிய்யா' என்ற நூலில் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் (தமது) நோன்புகளுக்கான காலம் எட்டு மாதங்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள்).

(19) ஹஸ்ரத் தாயார் ஸாஹிபா என்னிடம் கூறினார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு முதன்முதலில் தலைச் சுற்றல் மற்றும் ஹிஸ்டீரியா நோய் முதலாம் பஷீருடைய மரணத்திற்குப் பிறகு ஏற்பட்டது. (எங்களின் மூத்த சகோதரர் ஒருவர் இருந்தார்; அவர் 1888-ல் காலமாகியிருந்தார்) அன்னார் (அலை) தூங்கிக் கொண்டிருக்கும்போது, அன்னாருக்கு வாந்தி வந்தது. மேலும் அதன் பிறகு உடல்நிலை பாதிக்கப்பட்டு விட்டது; ஆனால், இது சிறிய அளவிலான பாதிப்பாக இருந்தது. பின்னர் இதற்கு சிறிது நேரத்திற்குப் பிறகு, அன்னார் (அலை) ஒருமுறை வெளியே தொழுகைக்காகச் சென்றார்கள். வெளியில் செல்லும்போது, இன்று கொஞ்சம் உடல்நிலை மோசமாக உள்ளது என்று கூறியபடி சென்றார்கள்.

தாயார் ஸாஹிபா கூறினார்கள்: சிறிது நேரத்திற்குப் பிறகு, ஷேக் ஹாமித் அலீ ஸாஹிப் (அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பழைய ஒரு தூய தொண்டராக இருந்தார்; (தற்போது அவர் மரணித்து விட்டார்) கதவைத் தட்டி, ஒரு குடம் தண்ணீரை சூடாக்குங்கள் என்று கூறினார். தாயார் ஸாஹிபா கூறினார்கள்: ஹஸ்ரத் ஸாஹிபின் உடல்நிலை மோசமடைந்திருக்கும் என்பதை நான் புரிந்து கொண்டேன். இவரிடம் அன்னாரது உடல்நிலை எப்படி உள்ளது? என்று கேளுங்கள் என்று ஒரு பெண் பணியாளரிடம் நான் கூறினேன். சற்று மோசமாக உள்ளது என்று ஷேக் ஹாமித் அலி கூறினார். எனவே நான் பர்தா செய்து கொண்டு பள்ளிவாசலுக்குள் சென்று விட்டேன். அப்போது அன்னார் (அலை) படுத்திருந்தார்கள். நான் அருகில் சென்றபோது, எனது உடல்நிலை மிகவும் மோசமாகி விட்டது; ஆனால், தற்போது முன்னேற்றம் உள்ளது; நான் தொழுது கொண்டிருந்தேன்; அப்போது நான் கண்டேன்: ஏதோ ஒரு கருமை நிறப் பொருள் என் முன்னால் வந்தது; மேலும் அது வானம் வரை சென்று விட்டது; பின்னர் நான் சப்தமிட்டவாறு நிலத்தில் விழுந்து விட்டேன். மேலும் எனக்கு மயக்கம் போன்ற நிலை ஏற்பட்டு விட்டது என்று அன்னார் (அலை) கூறினார்கள். தாயார் ஸாஹிபா கூறுகின்றார்கள்: அதன் பிறகு அன்னாருக்குத் தொடர்ந்து ஏற்படத் துவங்கி விட்டது.இந்த எளியவன் தாயாரிடம் அது குறித்து கேட்டேன்'.தாயார் ஸாஹிபா கூறினார்கள்: (தொடரும்.......)

(நூல்.ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, நூலாசிரியர் = ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள்)

* * * * * * * * * * *

# ஜுமுஆ பேருரை

**பணிவு மற்றும் தாழ்மை குணம் என்ற அம்சத்தின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கப் பண்புகள் தொடர்பான மனம்கவர் நற்குறிப்புகள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 29 மே 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **29 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி....**

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி ஸாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் இந்த நிகழ்வை 'ஹயாத்தே அஹ்மது' என்ற தமது நூலில் எடுத்துரைத்துள்ளார்கள். அது குறித்த ஒரு குறிப்பையும் எழுதியுள்ளார்கள். அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்:

விவாதங்களின் பொதுவான முறைகளையும், விவாதம் செய்பவர்களின் நிலையையும் மக்கள் நன்கு அறிவர். அதாவது தங்களின் எதிர் தரப்பினர் அல்லது தங்களுக்கு எதிரில் இருப்பவர் கூறும் உண்மையான விஷயத்தை விவாதம் செய்பவர்கள் ஏற்றுக்கொள்வதும், பொதுமக்களுக்கு முன்னால் அதனை ஒப்புக்கொள்வதும் மிகவும் கடினமானதாகும். விவாதம் செய்யக் கூடியவர்களின் இந்த நிலையை மக்கள் அறிந்துள்ளனர். நான் ஆலிம்களை ஏளனம் செய்யவில்லை. ஆனால், ஆலிம்கள் தம் உயிரை கொடுப்பது எளிதாகும்; ஆனால் அவர்கள் தங்களது தவறை ஒப்புக்கொள்வது ஒரு பக்கம் இருக்கட்டும்; அவர்கள் தங்களது எதிர் தரப்பினரின் சரியான மற்றும் அறிவார்ந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளும் பழக்கம் அவர்களுக்கு கிடையாது. இன்றைய நிலையும் இதுவாகவே உள்ளது.

ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நிலை முற்றிலும் தூய்மை மற்றும் அல்லாஹ்வின் திருப்தியின் நிலையில் மூழ்கியுள்ளது. முஸ்லிம்களுக்குள் உள்நாட்டுப் போர் போன்ற சண்டைகள் ஏற்படுவதையோ அல்லது பரஸ்பர விவகாரங்களில் கருத்து வேறுபாடுகள் காரணமாக உண்மையைத் தேடுவதை கைவிட்டு விடுவதையோ அதாவது, உண்மையைத் தேடுவதையும், உண்மையான கூற்றுகளை கைவிட்டு விடுவதையும், அன்னார் (அலை) இயல்பாகவே விரும்பவில்லை என்பதும் இதன் மூலம் தெரிய வருகிறது.

அடுத்து இது எவ்வளவு பெரிய துணிச்சல் மற்றும் தைரியமாகும்! அதாவது, எந்த நபருடன் விவாதம் செய்ய இருந்தார்களோ அவரது வீட்டிற்குச் செல்கின்றாகள்; மேலும், அந்த நபரின் அறிவும் செல்வாக்கும் அன்னாரது இயல்பில் எந்தவொரு தடையையும், தயக்கத்தையும், ஏற்படுத்தவில்லை. எனினும், அவரது வாயிலிருந்து ஓர் உண்மையான கூற்றை செவியேற்றபோது, மக்கள் என்ன சொல்வார்கள்? என்பதைப் பற்றி அன்னார் (அலை) சற்றும் பொருட்படுத்தவில்லை. மேலும், 'இவர் தோல்வியை ஒப்புக் கொண்டு தப்பி ஓடிவிட்டார்' என்றோ அல்லது 'எதிர்த் தரப்பினரால் ஈர்க்கப்பட்டுவிட்டார்' என்றோ மக்கள் கூறுவார்களே என்பதைப் பற்றி அன்னார் (அலை) கவலைப்படவில்லை. எது உண்மையான விஷயமாக இருந்ததோ, அதனை அன்னார் (அலை) ஏற்றுக் கொண்டு விட்டார்கள். மக்கள் என்ன கூறுவார்கள்? என்பதைப் பற்றி அன்னார் (அலை) சற்றும் பொருட்படுத்தாமல் 'அவர் கூறியது சரியானதுதான் என்று வாதத்தின் உண்மைத்தன்மைக்கு சான்றளித்து விட்டார்கள். இது எத்தகைய ஒரு செயல் என்றால், இதற்கு நிகரான உதாரணம் நபிமார்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய சீடர்களின் வாழ்க்கையைத் தவிர வேறு எங்கும் கிடைக்காது. **மார்க்கத்தில் தூய்மை மற்றும் தனது மன இச்சைகளை அடக்கும் வலிமையான உணர்வு ஆகியவை அல்லாஹ்வின் அருளால் மட்டுமே கிடைக்க முடியும்.**

அடுத்து, இந்தச் செயல் ஒப்புக் கொள்ளப்பட்டதற்கான அறிகுறிகள் அப்போதே வெளிப்பட்டு விட்டன. அல்லாஹ் தனது வஹீயின் மூலம் நற்செய்தி வழங்கினான். ஒருவகையில் அல்லாஹ் அன்னார் (அலை) மீது திருப்தி கொண்டு விட்டான் என்பதற்கான சான்றிதழை வழங்கினான். உலகத்தில் தனது பிரபல்யம் அதிகரிக்க வேண்டும்; மேலும் மக்கள் தன் பால் ஈர்க்கப்பட வேண்டும் என்று மனிதன் விரும்புகிறான்.

'அரசர்கள் உம்முடைய ஆடைகளிலிருந்து பரக்கத் தேடுவார்கள்' என்று அல்லாஹ் அந்தச் செயலின் பலனாக கூறினான். இது 'பராஹீனே அஹ்மதிய்யா' எனும் நூலை இன்னும் தொகுப்பதற்கு அல்லது முறைப்படுத்துவதற்கு எண்ணம் தோன்றாமல் இருந்த அந்தக் காலத்தில் நிகழ்ந்த விஷயமாகும், மேலும் அப்போது எந்த வாதமும் செய்யப்படவில்லை. உலகத்தோடு ஏறக்குறைய தொடர்பற்று வாழ்க்கையை அன்னார் (அலை) கழித்துக் கொண்டிருந்தார்கள். வேலைவாய்ப்பு போன்ற விஷயங்களையும் அன்னார் (அலை) கைவிட்டிருந்தார்கள். எதிர்கால வாழ்க்கை எப்படி கழியும்? என்ற எண்ணம் அன்னாரின் மனதிலோ அல்லது சிந்தனைகளிலோ தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை, ஆனால், குடும்பத்தினருக்கு 'இவர் என்ன செய்யப் போகிறார்?' என்ற கவலை நிச்சயமாக இருந்தது. அந்த நேரத்தில், 'அரசர்கள் உம்முடைய ஆடைகளிலிருந்து பரக்கத் தேடுவார்கள் என்ற இல்ஹாம் இறங்கியது. அப்போது அன்னாரிடம் ஒன்றும் இருந்திருக்கவில்லை. 'மதிப்பிற்குரிய தந்தையார் அவர்கள் அப்போது உயிரோடுதான் இருந்தார்கள்,

சுருக்கமாகக் கூறின், வாழ்வின் எந்வொரு கட்டத்தில் ஓர் உலகவாதி பெரும் ஆசைகளை கொண்டிருப்பாரோ, மேலும், வாழ்வின் எந்தப் பருவத்தில் எல்லாவிதமான எண்ணங்கள், சுயநலம் மற்றும் தன்முனைப்பின் உணர்வுகள் முழுமையான உத்வேகத்திலும், ஆதிக்கத்திலும் இருக்குமோ அந்தப் பருவத்தில் அன்னார் (அலை) இருந்தார்கள். இந்த அனைத்து நிலைமைகளில் இடையே ஹஸ்ரத் மிர்ஸா ஸாஹிப் ஒரு பிரபலமான மௌலவியுடன் விவாதம் செய்யச் செல்கின்றார்கள். மேலும் அவரது உரையைத் தெளிவாகக் கேட்டுவிட்டு, அதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துகின்றார்கள். மக்கள் என்ன சொல்வார்கள்? என்ற எண்ணமும் அன்னாருக்கு வரவில்லை, மேலும் 'இந்த நபரின் சில கொள்கைகளின் காரணமாக அவருக்கு பொதுவான எதிர்ப்பு இருந்து வருகிறது; மேலும் நான் எனது கூற்றின் மூலம் அவரை ஆதரிக்கிறேன்; இதனால் எனக்கு எதிராகவும் அவமரியாதையான ஒரு புயல் கிளம்பும்' என்ற விஷயங்களை எல்லாம் அன்னார் (அலை) பொருட்படுத்தவில்லை.

எனவே நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்; ஹனஃபிகளுக்கும், கைர் முகல்லித்களுக்கும் (மார்க்கச் சட்ட முறைகளைப் பின்பற்றாதவர்கள்) இடையே கடுமையான விவாதம் நடந்து கொண்டிருந்த அந்த நிலைமைகளில், மேலும் அஹ்லே ஹதீஸ்களுக்கு ஆதரவளிப்பது என்பது எல்லையற்ற துன்பங்களை விலைக்கு வாங்குவதற்கு சமமாக இருந்த அந்த நிலைமைகளில் ஹஸ்ரத் மிர்ஸா ஸாஹிப், மௌலவி முஹம்மது ஹுஸைன் ஸாஹிப் அவர்களின் வாதத்தை ஆதரித்து விடுகின்றார்கள். அதே நேரம் அன்னார் (அலை) அவருடன் விவாதம் செய்வதற்காகவே அழைக்கப்பட்டிருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மௌலவி அபூ ஸயீத் ஸாஹிபின் அறிவு அல்லது அழுத்தம் அன்னார் (அலை) அமைதியானதற்கு காரணகியா அமைந்திருக்கக் கூடும் என்ற எண்ணம் அல்லது ஐயம் முற்றிலும் மடமையாகும். பிற்காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் அன்னாரை மவ்லவி முஹம்மது ஹுஸைன் ஸாஹிபுடன் நேரடியான விவாதங்களும், எழுத்துப்பூர்வமான விவாதங்களும் செய்யாமல் இருந்திருந்தால், மேலும் அவருடனான அபாயகரமான போட்டியில் முஹம்மது (ஸல்) அவர்களின் இந்த இளைஞன் அவரை எதிர்கொள்ளாமல் இருந்திருந்தால் பின்னர் இந்த ஐயம் ஓரளவு பொருளுடையதாக இருப்பதற்கு வாய்ப்பு இருந்தது. ஆனால், அவ்வாறு நிகழவில்லை. அந்த நேரத்தில் அன்னார் (அலை) தாக்கத்திற்குள்ளாகி அமைதியாகி) விட்டார்கள் என்ற எண்ணம் தவறானதாகும். ஏனெனில், அன்னார் (அலை) பின்னாட்களிலோ மௌலவி முஹம்மது ஹுஸைன் ஸாஹிபிற்கு பலமுறை அறைகூவல் விடுத்தார்கள். அவரை போட்டிக்கு அழைத்தார்கள்; மேலும் நீங்கள் என்ன தவறு செய்கின்றீர்கள்? மேலும் எதனை நீங்கள் சரியாக செய்கின்றீர்கள்? என்று அவரிடமும் கூறினார்கள்.

அடுத்து எழுதுகின்றார்கள்: ஒருபோதும், எந்தச் சூழ்நிலையிலும், ஒரு நொடி கூட, அவரது அறிவு அல்லது செல்வாக்கின் அச்சம் அன்னாரிடத்தில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை'. இவை உண்மையான நிகழ்வுகளாகும். எவரும் இவற்றை பொய்ப்படுத்த முடியாது. எனவே, இந்த நிலைமையில், அத்தகைய எண்ணம் முற்றிலும் அறியாமையாகும். இன்னும் கூறப்போனால் இதன் பின்னணியில் ஒரேயொரு உண்மை மட்டுமே இருந்தது, அது 'மார்க்கத்தில் இருந்த தூய்மை என்பதாகும்'.'(ஹயாத்தே அஹ்மது தொகுதி 1, பக்கம் 291-292)

மார்க்க விவகாரத்தில் தூய்மை இருந்தது. எனவேதான், அன்னார் (அலை) அந்தக் கூற்றை ஏற்றுக் கொண்டார்கள். மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவிக்கு அஞ்சி அன்னார் (அலை) ஒப்புக் கொள்ளவில்லை, ஏனெனில் பிற்காலத்தில் அன்னார் (அலை) அவருக்குப் பலமுறை அறைகூவலும் விடுத்தார்கள். மேலும் அவருக்கு அழைப்பும் விடுத்தார்கள். மேலும் அவர் சரியான பாதையின் பக்கம் வர வேண்டும் என்று அவருக்கு அறிவுறுத்தவும் செய்தார்கள்.

தமது ஒரு கடிதத்தில் மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவிக்கு அன்னார் (அலை) எழுதினார்கள். அதில் அன்னார் (அலை) உண்மையின் தூதுச் செய்தியை எட்ட வைத்தார்கள். எனினும், இறைவனால் அனுப்பப்பட்டவர் என்ற ஓர் உயர்ந்த பொறுப்பில் இருந்தபோதிலும் தம்மைக் குறித்து பணிவு மற்றும் தாழ்மையின் மிக உயர்ந்த அந்தஸ்தை

அன்னார் (அலை) வெளிப்படுத்தினார்கள். ஆக, அன்னார் (அலை) எழுதுகின்றார்கள்:

' "மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய எனது சகோதரர் மௌலவி ஸாஹிப் (ஸல்லமஹு தஆலா) அவர்களே",........ "உங்களுடைய அன்பான கடிதம் கிடைத்தது". "இந்த எளியவனுக்கு ஒரு பெரிய சிரமம் ஏற்பட்டுள்ளது" என்றும் எழுதினார்கள். மேலும், "அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்தஹு" என்றும் அன்னார் (அலை) அதில் எழுதியிருந்தார்கள்:

எவ்வாறிருப்பினும், எழுதுகின்றார்கள்:

இந்த எளியவனுக்கு ஏற்பட்ட பெரிய சிரமம் என்னவென்றால், உடல்நிலை பலமுறை திடீரென எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்றால், மரணம் கண்முன்னே வந்துவிடுகிறது. மேலும் சில நோய்களோ இரவும், பகலும் தொடர்கின்றன. நான் அதிகமாகப் பேசினால் அல்லது சிந்தித்தால், நோயின் பாதிப்பு மீண்டும் தொடங்கிவிடுகிறது. நான் அதிகமாக சிந்தித்தால், பின்னர் அதே பாதிப்பு மீண்டும் ஏற்பட்டு விடுகிறது. தங்களுடைய கடைசி கடிதம் வந்தது. மௌலவி அப்துல் ஜப்பார் சாஹிபுடன் இணைந்து எழுதப்பட்டிருப்பதாக தெரிய வந்தது.

அதாவது இருவரும் இணைந்து எழுதியுள்ளனர்.

எனவே இந்த முறையில் பதில் எழுதப்பட்டிருந்தது. இந்த எளியவன் நோயின் பிடியில் மிகவும் பலவீனமடைந்து கொண்டிருக்கின்றேன். தற்போது நோயின் தாக்கம் மிகவும் அதிகமாக உள்ளது. இந்த நேரத்தில் சொற்போர் அல்லது எழுத்துப்பூர்வமான விவாதங்களைத் தொடங்குவதற்கு ஆற்றல் எங்கே உள்ளது?. விவாதங்கள் செய்வதற்கு இந்த நேரத்தில் என்னிடம் ஆற்றல் இல்லை. அல்லாஹ்வின் அருளால் மட்டுமே இந்த மூன்று கட்டுரைகளும் எழுதப்பட்டன.

அதாவது ஃபத்ஹே இஸ்லாம், தவ்ளீஹே மராம் மற்றும் இஸாலாயே அவ்ஹாம் என்ற மூன்று நூல்களை அன்னார் (அலை) எழுதினார்கள்.

அவை எவ்வாறு எழுதப்பட்டன என்றால், பெரும்பாலும் இந்த எளியவனின் சொற்பொழிவை ஒருவர் எழுதிக் கொண்டே சென்றார். மிகக் அரிதாகவே நானே என் கையால் எழுதும் சந்தர்ப்பம் அமைந்தது. வாக்கியங்களைச் சீரமைத்துச் செப்பனிடும் அளவிற்குக் கூட நேரம் கிடைக்கவில்லை. "ஹதீஸ் கலையில் உங்களது அறிவு மிகவும் பரந்தது மற்றும் ஆழமானது".

இவ்வாறு மௌலவி ஸாஹிபிற்கு அன்னார் (அலை) எழுதிகின்றார்கள்.

நானோ இந்த மூன்று புத்தகங்களையும் எழுதியுள்ளேன். ஹதீஸ் கலையில் உங்கள் அறிவு மிகவும் பரந்துபட்டுள்ளது. மேலும் நீங்கள் பெரும் அறிஞர் ஆவீர்கள். இந்த எளியவனோ ஒரு பாமரனும், அறிவீனமான நபரும் ஆவான்.

தம்மை ஒரு பாமரன் என்றும், அறிவற்றவன் என்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அளப் பெறும் பணிவை வெளிப்படுத்துகின்றார்கள்.

சுருக்கமாக, அறிவும், திறமையும் எதுவும் ஒன்றுமே இல்லை. இறைவன் புறமிருந்து ஒரு விவகாரம் இருந்தது. அது உறுதியான மற்றும் நிச்சயமானதாக இருந்தது. அதனை இந்த எளியவன் எட்ட வைத்து விட்டேன். ஒப்புக் கொள்வதும், மறுப்பதும் அவரவர் கருத்து மற்றும் புரிதலை சார்ந்திருக்கின்றது.(மக்தூபாத் அஹ்மத், பாகம் 1, பக்கம் 319-320, கடித எண் 10)

ஹஸ்ரத் முன்ஷீ அஹ்மத் ஜான் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எழுதிய மற்றுமொரு கடிதமும் இதில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதிலும் அவர்களின் பணிவு மற்றும் தன்னடக்கத்தின் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

அன்னார் (அலை) எழுதுகின்றார்கள்:

'கண்ணியத்திற்குரிய தங்களின் அன்பான கடிதம் கிடைத்தது. கருணைக்குரிய இறைவனின் பேரருளுக்கு இந்த எளிய அடியான் எவ்வாறு நன்றி செலுத்துவது என்று தெரியவில்லை. இந்த எளிய அடியானுக்கு இத்தகைய தூய்மையான உள்ளம் கொண்ட நண்பர்களை அவன் தந்துள்ளான், அந்த நண்பர்களின் இருப்பு இந்த எளியவனுக்குப் பெருமையையும், கண்ணியத்தையும் அளிக்கிறது. கண்ணியத்திற்குரிய இறைவன் தங்களை மகிழ்ச்சியாகவும், கண்ணியத்துடனும் வைக்கட்டும், தங்களின் இந்த உளப்பூர்வமான அன்பிற்கு ஈருலகிலும் நற்கூலியை வழங்குவானாக. இந்த எளியவன் மிகவும் தகுதியற்றவனும், பலவீனனும் ஆவான். சிறிதளவு தகுதியும் இன்றி இந்த எளியவன் மீது அவன் பெரும் அருட்கொடைகளின் மழையை பொழிந்து கொண்டிருப்பது பெரும் கருணையாளனாகிய இறைவனின் அருளும், கருணையும் ஆகும்.

அவன் பெரும் அருள் மழையை பொழிந்து கொண்டிருக்கின்றான்.

தவறு மேல் தவறுகளை காண்கின்றான்; எனினும் கருணை மேல் கருணை செய்கிறான். அநீதி மேல் அநீதியை காண்கின்றான்; அருள் மேல் அருள் செய்கிறான். உள்ளபடியே அவன் மிகவும் கருணையாளனும், கண்ணியத்திற்குவுரியவனும் ஆவான். அவனுக்கு நன்றி செலுத்தும் நாவை எங்கிருந்து நான் கொண்டு வருவது என்று நான் அறியேன். இந்த எளியவன் ஒன்றுமற்றவனும், எளியவனும், தகுதியற்றவனும், வறியவனும் ஆவேன். நான் மண்ணில் கிடப்பதை அவன் கண்டு என்னை உயர்த்தி விட்டான். அல்லாஹ் நான் நிலத்தில் கிடப்பதைக் கண்டு உயர்த்தி விட்டான். இந்த தகுதியவற்றவன் பார்க்க மட்டுமே செய்தேன். மேலும் அவன் என்னை பராமரித்தான். என் பலவீனத்தைக் கண்டு அவனே ஆற்றலை வழங்கினான். எனது அறியாமையைக் கண்டு அவனே எனக்கு ஞானத்தை வழங்கினான். பார்க்காமல் என் குறைகளை மறைத்தான். என் பலவீனத்தின் மீது இரக்கம் காட்டி எனக்கு ஆற்றலை வழங்கினான். எனக்கு வழங்கப்பட்ட அனைத்து ஞானமும் இறைவனால் வழங்கப்பட்டவையாகும்.

எனக்கு இருக்கும் அறிவு என்பது இறைவனால் அருளப்பட்டதாகும். என் மீது அவன் எவ்வளவு பேரருள் செய்துள்ளான் என்றால, அவற்றை என்னால் எண்ணி மாளாது. தங்களைப் போன்ற மூத்த சகோதரர்களின் உள்ளங்களில் இந்த எளியவன் மீது அன்பை ஏற்படுத்தியதும், அவனது அருட்கொடைகளில் ஒரு வெளிப்பாடாகும். எனவே அவன் இந்த அன்பை வளர்ப்பான்; மேலும் இந்த எளியவனுடன் தொடர்பு கொண்டுள்ள அந்த மக்கள் அனைவர் மீதும் அருள் புரிவான்.' இது அவனுடைய அருட்கொடைகளுடன் தொடர்புடையதாகும். (மக்தூபாத் அஹ்மது, பாகம் 3, பக்கம் 25-26, சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் பெயரிலான கடித எண் 3)

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி ஸாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் இந்தக் கடிதத்தை வெளியிட்டவாறு தமது ஒரு குறிப்பையும் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உள்ளத்தில் இறைவன் மீதான அன்பும், மாண்பும் அளவிடற்கரியதாக இருந்தது என்பதையும் இக்கடிதம் வெளிப்படுத்துகிறது. மேலும் அன்னாரின் பணிவு, எளிமை மற்றும் நன்றியுணர்வு மிகத் தெளிவாக புலப்படுகிறது. மேலும் இதே பேரருள்கள் மற்றும் அருட்கொடைகளுக்கான நன்றியுணர்வின் ஆன்மாவே அன்னாருக்குள் பேசிக் கொண்டிருக்கின்றது. (மக்தூபாத்தே அஹ்மது, தொகுதி 3, பக்கம் 26)

தான் 'மஸீஹைப் போன்றவர் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வாதம் செய்தபோது, மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டால்வி கடுமையான எதிர்ப்பைத் தொடங்கினார். மேலும், மிகவும் ஆணவம் மிக்க முறையில், மிகவும் நாகரிகமற்ற வார்த்தைகள் மற்றும் பட்டங்களைப் பயன்படுத்தி ஹுஸூர் (அலை) அவர்களுக்கு கடிதங்களை எழுதத் தொடங்கினார். மேலும் தனது 'இஷாஅதுஸ் சுன்னா' என்ற இதழிலும் மரியாதைக் குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்.

மேலும், 'இந்த ஜமாஅத் ஒரு குழப்பமாகும்; நான் இந்த ஜமாஅத்தை முற்றிலும் சிதறக்கடிக்கச் செய்து விடுவேன்; எந்த அளவிற்கு என்றால், நான் இவரை வானத்தில் உயர்த்தியது போன்று இனி இவரை பூமியில் வீழ்த்திவிடுவேன்' என்று அறிவிப்பு செய்தார்.

அதாவது (நவூதுபில்லாஹ்) மௌலவி முஹம்மது ஹுஸைன், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களைப் புகழ்ந்து வானத்தில் உயர்த்தியதாகவும், இப்போது நான் அவரை கீழே வீழ்த்தி விடுவேன் என்றும் கூறினார். (இஷாஅதுஸ் சுன்னா இதழ், 1890, எண் 1, பாகம் 13, பக்கம் 3-4)

'பரஹீனே அஹ்மதியா' நூலின் மீதான தனது விமர்சனத்தின் மூலம் தானே ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களை வானத்தில் உயர்த்தினேன் என்று மௌலவி ஸாஹிப் கர்வம் கொண்டிருந்தார். ஆனால், அவரது இந்த அனைத்துத் துவேஷமான, அகந்தையான பேச்சுக்களுக்கும், கடிதங்களுக்கும் பதிலளிக்கும் விதமாக ஹுஸூர் (அலை) அவர்கள் எத்தகைய மென்மை, சகிப்புத்தன்மை, பணிவு மற்றும் தன்னடக்கதை வெளிப்படுத்தினார்கள் என்றால், அது ஈஸா மஸீஹின் சகிப்புத்தன்மையைக் கூட தோற்கடித்து விட்டது. இங்கு, மௌலவி ஸாஹிபின் பெயரில் ஹுஸூர் (அலை) அவர்கள் எழுதிய ஒரேயொரு கடிதம் மட்டும் சமர்ப்பிக்கப்படுகின்றது. மௌலவி ஸாஹிபின் துவேஷம் மற்றும் கர்வத்திற்கு எதிரில் ஹுஸூர் (அலை) அவர்களின் உள்ளத்தில் அனுதாபம், நலம் நாடும் குணம், பணிவு மற்றும் தாழ்மை குணத்தின் ஒரு சமுத்திரம் அலைமோதிக் கொண்டிருந்தது இந்தக் கடிதத்திலிருந்து வெளிப்படுகின்றது.

ஆக, அன்னார் (அலை) மௌலவி ஸாஹிபை நோக்கி எழுதுகின்றார்கள்:

' உங்களது கனிவான கடிதம் கிடைத்தது. இந்த எளியவன் கண்ணியத்திற்குரிய அந்த இறைவனால் அனுப்பப்பட்டுள்ளேன் என்பதை அவன் நன்கறிவான். எந்த விவகாரங்களில் பொதுமக்களின் குழப்பத்திற்கான அச்சம் இருக்குமோ அத்தகைய விஷயங்களில் முழுமையாக மற்றும் உறுதியாக இந்த எளியவனுக்கு வெளிப்படுத்தப்படாத வரை ஒருபோதும் என் நாவிலிருந்து எந்த வார்த்தையும் வராது. ஆனால், இந்த மஸீஹின் வருகையின் விவகாரத்தில் கண்ணியத்திற்குரிய இறைவனின் சில ஞானம் இருக்கும். அதற்கு இஸ்லாத்தின் அசல் நிலை மற்றும் சாரத்துடன் எந்த தொடர்பும் இல்லை. அதாவது இஸ்லாத்தின் உண்மைத்துவம் மற்றும் சாரத்துடன் அதற்கு எந்தத் தொடர்பும் இல்லை. ஒரு முஸ்லிமிற்கு அதன் உண்மைத்துவம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது, அதனால் சகோதரத்துவம் என்ற அடிப்படையில் நல்லெண்ணமும் கொள்ளப்பட வேண்டும்.

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன

(13:29)

A. Khaleel Ahmad

( Melapalayam)

தங்களுக்கு எதிர்பாக எழுதுவதற்கு உத்வேகம் வழங்கப்பட்டுள்ளது. முதலாவதாக, ஈஸா (அலை) மரணித்து விட்டார்கள் என்று நான் கூறினால், பின்னர் நீங்கள் அனைவரும் முஸ்லிம்களாக இருப்பதன் அடிப்படையில் எனக்கு ஆதரவளித்திருக்க வேண்டும். ஆனால், நீங்கள் எதிர்ப்பான விஷயங்களை பேசத் துவங்கி விட்டீர்கள்.

கூறினார்கள்: தங்களுக்கு எதிர்ப்பிற்குரிய விஷயங்களைப் பேசுவதற்கு உத்வேகம் வழங்கப்பட்டுள்ளது. இதில் உங்களுடைய எண்ணம் நல்லதாகவே இருக்கும் என்பதை நான் அறிவேன். உங்களுடைய அவசரத்தைப் பற்றி எனக்கு முறையீடு இருக்கின்றது. அதாவது நீங்கள் அவசரம் காட்டுகின்றீர்கள்; மேலும் நீங்கள் அவசரத்தில் தவறான சொற்களை பயன்படுத்துகின்றீர்கள். அவற்றை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எடுத்துரைக்கவும் செய்வேன். இருந்தபோதிலும் உங்களுடைய எண்ணத்தைக் குறித்து எனக்கு நல்லெண்ணம் உள்ளது.

எவ்வாறிருந்தபோதும், நான் நல்லெண்ணம் கொள்கிறேன். மேலும், நிகழ்காலத்தின் பெரும்பாலான ஆலிம்கள் இன்னும் கூறப்போனால், நீங்கள் அதிருப்தி கொள்ளாமல் இருந்தால், இறைவனுக்காக மட்டுமே மேற்கொள்ளப்படும் கடும் முயற்சி மற்றும் பணிகளின் அடிப்படையில் தங்களை மவ்லவி நஸீர் ஹுஸைன் ஸாஹிபை விட சிறந்தவராகவும் நான் கருதுகிறேன். நான் இந்த விஷயங்களைப் பற்றி உங்களிடம் புகார் கூறினாலும், உங்கள் அகத் தூய்மையின் காரணமாக உங்களிடம் எனக்கு அன்பு இருக்கிறது. நான் அடையாளம் காணப்படவில்லை என்றால், இதுவே எனக்கு விதிக்கப்பட்டுள்ளது என்று நான் கருதுவேன். எனக்கு வெற்றி மற்றும் தோல்வியுடன் எந்தத் தொடர்பும் இல்லை, மாறாக இறை வணக்கம் மற்றும் கீழ்ப்படிதலுக்கான கட்டளையை பேணுவதே எனது நோக்கமாக உள்ளது.'

கட்டுப்படுதலுக்கான கட்டளையே எனது நோக்கமாக உள்ளது. நான் வெற்றி பெறுகிறேனா? இல்லையா? என்பது எனது நோக்கம் அன்று. இதை செய் என்று அல்லாஹ்வோ எனக்கு கட்டளை வழங்கியுள்ளான். அவனுக்கு கீழ்படிந்தவாறு நான் இதனை செய்து கொண்டிருக்கின்றேன். அதாவது நான் இந்த வாதத்தை செய்துள்ளேன். இதற்கு எதிரில் உங்களின் எண்ணம் நல்லதாகவே இருக்கும் என்பதை நான் அறிகிறேன். ஆனால், நீங்கள் முதலில் என்னுடன் கலந்து பேசி, எனது நூல்களை அதாவது, 'ஃபத்ஹே இஸ்லாம்', 'தவ்ஸீஹே மராம்' மற்றும் 'இஸாலா அவ்ஹாம்' என்ற மூன்று நூல்களை பார்த்துவிட்டு ஒன்றை எழுதுவது எனது பார்வையில் மிகச் சிறந்ததாக இருக்கும். உங்களைப் போன்ற ஒரு நண்பர் எதிர்ப்பதற்கு தயாராக இருப்பதில் எனக்கு எந்த வருத்தமும் வேதனையும் இல்லை, ஏனெனில் இந்த எதிர்ப்பான கருத்தும் கூட ஒருவேளை நீங்கள் உண்மைக்காகவே போராடுகிறீர்கள் என்றால், உண்மைக்கானதாகவே இருக்கும். ஆனால் முதலில் நீங்கள் எனது நூல்களை படித்துப் பாருங்களேன்.'

'தற்போது உங்களைச் சந்திக்க எனக்கு உடல் ஆரோக்கியம் உள்ளது. 'எனது உடல்நிலை நன்றாக உள்ளது. என்னால் உங்களை சந்திக்க (நேரில்) வர முடியும்.' நீங்கள் பட்டாலாவுக்கு வந்தால், நான் நோயாளியாக இருந்தாலும், மேலும், என்னால் நேராக நின்று தொழ முடியாத அளவிற்கு தலைச் சுற்றல் இருக்கின்றது என்றபோதிலும் தட்டுத்தடுமாறி என்னால் உங்களை வந்தடைய நேரிட்டாலும், நான் உங்களிடம் வந்து சேர்ந்து விடுவேன்.' (மக்தூபாத் அஹ்மத், பாகம் 1, பக்கம் 311 -312, கடித எண் 6).

எவ்வாறிருப்பினும் எனக்கு தலைவலியும், தலைச் சுற்றலும் உள்ளது. ஆனால், என்னால் பயணம் செய்ய முடியும் அளவுக்கு ஆரோக்கியம் இருந்தால், பின்னர் எந்நிலையிலும் நான் நிச்சயம் வந்துவிடுவேன்.

அடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஸாஹிபின் பெயரில் எழுதிய மற்றொரு கடிதத்தில் பின்வருமாறு எழுதுகின்றார்கள்:

'நீங்கள் அதிருப்தி அடையவில்லை என்றால் (இதனை கூற விழைகிறேன்), எனது பார்வையில் எனது சகோதரர் மௌலவி ஹக்கீம் நூருத்தீன் ஸாஹிப் அவர்களுக்கு எதிரில் இந்த எளியவனைக் குறித்த உங்களுடைய எழுத்துக்களில் சிறிது கடுமை இருந்தது.

ஹக்கீம் மௌலவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் உங்களுக்கு எழுதிய கடிதத்தின் பதிலில், நீங்கள் மிகவும் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கின்றீர்கள்.'

'அல்லாஹ் பணிவையும், அடக்கத்தையும் எப்போதும் விரும்புகிறான். மேலும் அறிஞர்கள் தங்கள் சகோதரர்களிடம் மிக உயர்ந்த ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று அவன் விரும்புகிறான்.'

'ஒழுக்கங்கள் நல்லவையாக இருக்க வேண்டும். 'எந்த மார்க்கத்தின் ஆதரவிற்காகவும், இரக்கத்திற்காகவும் இரவும் பகலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறன்றனவோ, அதன் நோக்கம் என்ன? அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் விருப்பத்திற்கு ஏற்ப நமது அனைத்து நிலைகளும், செயல்களும், அசைவுகளும், ஓய்வுகளும் அமைந்து விடுவதே அதன் நோக்கம் ஆகும்.

எனது பார்வையில், நல்லொழுக்கத்தின் அனைத்து அம்சங்களிலும் அல்லாஹ் எந்த அளவு பணிவு, தாழ்மை குணம் மற்றும் ஆணவத்திற்கு தடையாக இருக்கும் ஒவ்வொரு அடக்கத்தையும் விரும்புகின்றானோ அதுபோன்று நல்லொழுக்கத்தின் வேறு எந்த அம்சத்தையும் அவன் விரும்புவதில்லை. (அதாவது, பெருமை மற்றும் அகந்தையை உருவாக்கும் எந்தவொரு குணத்தையும் அவன் விரும்புவதில்லை.)

எனக்கு நினைவுள்ளது. அதாவது, 'ஒருமுறை மார்க்கப்பற்றற்ற கடுமையான ஓர் இந்துவுடன் இந்த எளியவன் உரையாடினேன். அப்போது, அவர் உறுதியான (இறை)மார்க்கத்திற்கு எதிராக வரம்பு மீறி இழிவான வார்த்தைகளை பயன்படுத்தினார். மேலும், மார்க்கத்தின் மீதான தன்மானத்தின் காரணமாக அவர்களிடம் கடுமையாக நடந்து கொள்ளுங்கள் என்ற அடிப்படையில் இந்த எளியவன் சற்று செயல்பட்டேன். ஒரு நபர் குறி வைக்கப்பட்டு கடுமையாக நடந்து கொள்ளப்பட்டிருந்தது. எனவே ஓர் இல்ஹாம் வந்தது: 'உமது உரையில் அதிகம் கடுமை உள்ளது; கனிவு தேவை; கனிவு!'

நான் (அவருடைய ஆட்சேபனைக்கே) அவருக்கு பதிலளித்திருந்தேன். இருந்தபோதிலும், 'நீர் மென்மையை மேற்கொள்வீராக!' என்று அல்லாஹ் என்னிடம் அது தொடர்பாக கூறினான்.

நாம் நீதியோடு சிந்தித்துப் பார்த்தால், நாமெல்லாம் யார்? நமது அறிவுதான் என்ன? கடலில் ஒரு குருவி தனது அலகைக் கொத்தினால் அதனால் கடலுக்கு என்ன குறைந்துவிடும்? 'கடலில் இருந்து ஒரு குருவி தண்ணீர் குடித்தாலோ அல்லது தன் அலகால் கொத்தினாலோ அதனால் கடலுக்கு என்ன குறைவு ஏற்பட்டுவிடும்?"

'நம்மைப் போன்றவர்கள் எளியவர்களாக இருப்பதே நமக்கு மிகச் சிறந்ததாகும். நாம் மண்ணாகவே இருப்போம். நமது இறைவனோ தற்பெருமையையும், அகந்தையையும் விரும்பாதபோது நாம் ஏன் தற்பெருமை கொள்ள வேண்டும்? (இறை) கோபத்திற்கு ஆளாக்குகின்ற கண்ணியத்தை விட இழிவே நமக்குச் சிறந்தது.' (மக்தூபாத் அஹ்மது, பாகம் 1, பக்கம் 315 - 316, கடித எண் 8)

அல்லாஹ்வை கோபமடையச் செய்வதை விட அவமரியாதை ஏற்பட்டுக் கொண்டிருப்பதே நமக்கு சிறந்ததாகும்.

எனவே, அன்னாரின் ஒவ்வொரு சொல்லும், செயலும் பணிவின் வெளிப்பாட்டால் நிறைந்து இருந்தது. ஒரே தேட்டம் அல்லாஹ்வின் திருப்தி கிடைக்க வேண்டும் ; அவனது தூதுச் செய்தியை உலகிற்கு எட்ட வைக்க வேண்டும்; மேலும் அவனது ஏகத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற ஒரு தேட்டம் மட்டுமே இருந்தது. பணிவை மேற்கொள்ளுங்கள் என்றே அன்னார் (அலை) மீண்டும், மீண்டும் நமக்கு அறிவுரை வழங்கினார்கள். இதில் தான் உங்களின் நன்மையும் உள்ளது. இதுவே உங்களை அல்லாஹ்வின் நெருக்கத்தையும் பெற்றுக் கொடுக்கும். பணிவின் வழிகளை மேற்கொள்ளளும் நற்பேறை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக!

(அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 19 ஜூன் 2026, பக்கம் 8) தமிழாக்கம்

முரப்பி

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

## ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்)

### அரேபியர்களின் வணிகம்

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் மக்கத்து குறைஷிகளின் வணிகக் குழுக்கள் சிரியா மற்றும் ஏமன் நாடுகளுக்கு வழக்கமாகச் சென்று கொண்டிருந்தன, சில சமயங்களில் அரேபியாவின் பிற பகுதிகளுக்கும் சென்றன. ஆனால் அக்காலத்தில், குறைஷிகளின் மிகப் பெரிய வணிகம் சிரியாவுடனேயே இருந்தது. மக்காவிலிருந்து சிரியாவிற்குச் செல்லும் மிகவும் பயன்படுத்தப்பட்ட பாதை செங்கடலோரமாக வடக்கே சென்றது. யத்ரிப், பிற்காலத்தில் மதீனா என்று பெயர் பெற்றது, இப்பாதைக்கு அருகிலேயே அமைந்திருந்தது. சிரியப் பாதையில், மதீனாவிற்குச் செல்லும் பாதை கிழக்காகப் பிரியும் அந்த இடத்தில் தான், முஸ்லிம்களுக்கும் இணைவைப்பவர்களுக்கும் இடையே முதலாவது போர் நடைபெற்றது.

ஏற்றுமதிப் பொருட்கள் பொதுவாக விலையுயர்ந்த உலோகங்கள், முத்துக்கள், விலங்குகளின் தோல்கள், மசாலாப் பொருட்கள் மற்றும் வாசனை திரவியங்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தன. ஊகத்தின்படி, இறக்குமதி பொதுவாக தானியங்கள், துணிகள், போர்க் கருவிகள், மது மற்றும் உலர் உணவுப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தன. அரேபியாவில் ஆண்டுதோறும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வணிகக் கண்காட்சிகள் நடத்தப்படுவது வழக்கமாக இருந்தது, அதில் தூரத்திலிருந்தும் வணிகர்கள் வந்து கலந்துகொண்டு வணிகம் செய்தனர். இந்தச் சந்தைகளில், சிரியாவிற்கு அருகிலுள்ள 'தூமத்துல் ஜந்தல்', பஹ்ரைனில் 'வபா', ஏமனில் 'ஸன்ஆ' மற்றும் ஹிஜாஸில் 'உகாழ்' ஆகியவை சிறப்புப் புகழ் பெற்றிருந்தன.

### கல்வி மற்றும் பழமையான கவிதை

அரேபியாவில் சிறிது கல்வியறிவு இருந்தது, எனினும் மிகக் குறைவாகவே இருந்தது. சில குறிப்பிட்ட நபர்களைத் தவிர, ஒட்டுமொத்த நாடும் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவே இருந்தனர். இந்தச் சில கல்வியாளர்களும் பெரும்பாலும் நகரங்களிலேயே வசித்து வந்தனர். இருப்பினும், இந்த அறியாமைக்கு மத்தியிலும், அரேபியர்களுக்கு தங்களுடைய மொழியில் இருந்த சொற்செறிவு மற்றும் பாண்டித்தியத்தின் மீது மிகுந்த பெருமை இருந்தது. (தொடரும்....)

(நூல்: ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள் எழுதிய ஸீரத் காத்தமுன் நபிய்யீன்)

* * * * * * * * * * *

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு (மத நல்லிணக்கம் மற்றும் மார்க்க சுதந்திரம் குறித்து நபி (ஸல்) அவர்களின் போதனைகள் மற்றும் முன்மாதிரி)

மவ்லானா முஹம்மது இனாம் ஸாஹிப் கௌரி

(காதியான் ஆண்டு மாநாடு 2025)

அல்லாஹ் கூறுகின்றான்:

மார்க்கத்தில் எவ்வித கட்டாயமும் (ஆகுமானதும்) இல்லை. (ஏனென்றால்) நிச்சயமாக நேர்வழிக்கும் தவறான வழிக்கும் இடையிலுள்ள வேறுபாடு, மிகத் தெளிவாகி விட்டது. (திருக்குர்ஆன் 2: 257 )

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்:

நீர் கூறுவீராக: இந்த உண்மை உங்கள் இறைவனிடமிருந்து உள்ளதாகும். எனவே எவர் விரும்புகிறாரோ அவர் நம்பட்டும். எவர் விரும்புகிறாரோ அவர் நிராகரிக்கட்டும்! (திருக்குர்ஆன் 18: 30)

அல்லாஹ் கூறுகின்றான்:

(முஸ்லிம்களே!) நாங்கள் அல்லாஹ்விடத்திலும், எங்களுக்கு இறக்கப்பட்டதிலும், இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோருக்கும் யஃகூபுக்கும் (அவருடைய) மக்களுக்கும் இறக்கப்பட்டதிலும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் வழங்கப்பட்டதிலும், (இவ்வாறே ஏனைய) நபிமார்களுக்கு அவர்களின் இறைவனிடமிருந்து வழங்கப்பட்டதிலும் (அனைத்து வஹீயிலும்) நம்பிக்கை கொண்டுள்ளோம். நாங்கள் அவர்களுள் வேற்றுமை பாராட்டுவதில்லை. நாங்கள் அவனுக்கே கட்டுப்பட்டவர்களாவோம் என்றும் நீங்கள் கூறுங்கள். (திருக்குர்ஆன் 2: 137)

கண்ணியத்திற்குரிய விருந்தினர்களே! மத நல்லிணக்கம் மற்றும் கருத்து சுதந்திரம் குறித்து திருக்குர்ஆன் எண்ணற்ற இடங்களில் எப்படிப்பட்ட அடிப்படை உண்மைகளையும், கட்டளைகளையும் பிறப்பித்துள்ளது என்றால் அதை கருத்தில் கொண்டு அதன் படி செயல்பட்டால் இன்றைய நாட்களில் மார்க்கத்தின் பெயரால் நடக்கின்ற சண்டை சச்சரவுகள், கொலை குற்றங்கள் ஆகியவற்றை தடுத்து நிறுத்த முடியும். ஆனால், அதற்கான நிபந்தனை என்னவென்றால் இந்த அமைதியை வழங்கக்கூடிய மற்றும் சமாதானத்தை விரும்பக் கூடிய போதனைகளை அரசியல் லாபத்திலிருந்து முற்றிலுமாக விலக்கி வைக்க வேண்டும். நேரத்தை கருத்தில் கொண்டவாறு நான் மூன்று வசனங்களை மட்டுமே மொழியாக்கத்துடன் கூறியுள்ளேன்.

இங்கு மார்க்கம் என்பது ஏதோ ஒரு அரசியல் அமைப்போ, சமுதாயமோ அல்லது ஒரு நாட்டின் பெயரோ அல்ல! இந்த அடிப்படை விஷயத்தை புரிந்தவாறு மார்க்கத்தின் உண்மைத்துவம் என்பது மனிதனின் ஆன்மிக, பௌதிக மற்றும் நல்லொழுக்க நிலைமைகளை சீராக்குகிறது என்பதை நினைவில் கொள்வதற்கான தேவையும் உள்ளது. மேலும் தன்னுடைய உண்மையான படைப்பாளனுடனான உண்மையான மற்றும் வலுவான தொடர்பை நிலை நாட்டுவதற்கான வழியையும் அது காட்டுகிறது. இந்த நோக்கத்திற்காகவே அனைத்து உலகங்களையும் பரிபாலிக்கின்ற இறைவன் ஒவ்வொரு நாடு மற்றும் சமுதாயத்திலும் தன்னுடைய வழிகாட்டி மற்றும் தூதரை அனுப்பியுள்ளான்.

அவன் இவ்வாறு கூறுகின்றான்:

ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு தூதர் உண்டு. (திருக்குர்ஆன் 10: 48)

.அல்லாஹ் கூறுகின்றான்:

மேலும் ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் (இறைவனிடமிருந்து அனுப்பப்பட்ட) வழிகாட்டி ஒருவர் உண்டு.
(திருக்குர்ஆன் 13: 8)

இதனால்தான் முஸ்லிம்களுக்கு, நீங்கள் எங்கு ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது இறக்கப்பட்ட வஹீ மற்றும் திருக்குர்ஆன் மீது நம்பிக்கை கொள்கின்றீர்களோ அங்கு உங்கள் ஈமான் முழுமை பெறுவதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்பு எந்த எந்த நபிமார்கள் மீது அல்லாஹ்வின் வஹீ மற்றும் வேதம் இறங்கியதோ அவற்றின் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும், அந்த நபிமார்கள் தத்தமது காலத்தில் அந்த இல்ஹாம், வேதம் மற்றும் இறைச் சட்டங்களைக் கொண்டு தங்களுடைய சமுதாயத்தை சீர்திருத்துகின்ற மற்றும் வழி நடத்துகின்ற கடமையை அந்த நபிமார்கள் செய்து கொண்டே இருந்தார்கள். எனவே, அந்த அனைத்து நபிமார்கள் மீதும், அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத்துகளின் மீதும் நம்பிக்கை கொள்ளவதும் அவசியமாகும் என்ற போதனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறு கூறுங்கள்; நாங்கள் அவனுடைய தூதர்களுள் எவருக்கிடையிலும் (எந்த) வேற்றுமை(யும்) பாராட்டுவதில்லை. அதாவது தூதுத்துவத்தின் அடிப்படையில் அனைவரும் சமமானவர்களே. ஆனால், அவர்களுடைய பொறுப்புகள், கடமைகள், பணி செய்வதற்கான வரையறைகள் உள்ளன. அவை அவர்களுக்கான தகுதிக்கு ஏற்ப மாறுபடும்.

இந்த சுருக்கமான முன்னுரைக்குப் பிறகு மத நல்லிணக்கம் மற்றும் கருத்து சுதந்திரம் குறித்து திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியில் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் மற்றும் அழகிய முன்மாதிரியின் சில உதாரணங்களை நேரத்தை கருத்தில் கொண்டு எடுத்துரைப்பேன்.

நாம் இதை வீட்டிலிருந்து துவங்குவோம். பொதுவாக மகன் மார்க்கத்திலிருந்து வெளியேறி விட்டால் பெற்றோர்கள் அவரை புறக்கணித்து விடுகிறார்கள் என்பதை காண முடிகிறது. சகோதரர்கள் சமூக உறவுகளையும் துண்டித்து விடுகின்றார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு முஸ்லிமிற்கு எவ்வாறான போதனை வழங்கப்படுகிறது என்பதை பாருங்கள்! ஒரு முறை ஒரு நபர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு உறவினர்கள் உள்ளனர்; அவர்களிடம் நான் உறவு பாராட்டுகின்றேன்; அவர்களோ என்னிடம் பகைமை பாராட்டுகின்றனர். நான் உதவி செய்கின்றேன்; அவர்கள் எனக்கு தீங்கு விளைவிக்கின்றார்கள். அவர்களிடம் நான் பொறுமையை மேற்கொள்கின்றேன்; அவர்கள் என்னிடம் அறிவீனத்தையே கடைப்பிடிக்கின்றார்கள் என்று ஒருவர் கூறினார்.

அதற்கு, நீர் கூறுவது போன்ற நிலையில் இருந்தால் நீர் அவர்களை சூடான சாம்பலைத் உண்ணச் செய்தவர் போலாவீர்! (அதாவது அவர்கள் தங்கள் மீது மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்கின்றனர்) இதே நிலையை நீர் தொடர்கின்ற வரை அவர்களின் தீங்குகளை விட்டு காப்பதற்காக ஓர் உதவியாளர் (வானவர்) உம்முடன் இருந்து கொண்டே இருப்பார் என்று கூறினார்கள். (முஸ்னத் அஹ்மத் 7992)

அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரலி) கூறினார்: அல்லாஹ்வின் தூதருடைய காலத்தில் என்னிடம் என் தாயார் வந்திருந்தார். அப்போது அவர் இணைவைப்பவராக இருந்தார். 'என் தாயார் என்னிடம் ஆசையுடன் வந்துள்ளார்; என் தாயிடம் அவரின் உறவைப் பேணி நல்லமுறையில் நடந்து கொள்ளட்டுமா?' என்று கூறி நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் மார்க்கத் தீர்ப்பு கேட்டேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஆம்! நீர் உம் தாயின் உறவைப் பேணி அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்வீராக!' என்று கூறினார்கள். (ஸஹீஹ் புஹாரி: 2620)

ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் இரத்த உறவினர்களில் பெரும்பாலானவர்கள் அன்னார் (ஸல்) தன்னை நபி என்று வாதித்ததன் காரணமாக அன்னாரை எதிர்ப்பதில் உச்சகட்ட கொடுமையை மேற்கொண்டார்கள்.அவ்வாறு இருந்தும் அன்னார் (ஸல்) இவ்வாறு கூறி வந்தார்கள்:

குறைஷி குலத்தின் இந்த கிளை என்னுடைய எதிரியாகிவிட்டது. ஆனால், எனக்கு அவர்களுடன் ஒரு இரத்த உறவு இருக்கிறது. அந்த உறவின் காரணமாக அதன் உரிமைகளை எந்நிலையிலும் நான் பேணிக் கொண்டே இருப்பேன். எனவே அன்னாரின் ஒரு ஸஹாபி ஸுமாமா பின் உஸால் யமாமாவை சார்ந்தவர். இவர் தரப்பிலிருந்து மக்கா வாசிகளுக்கு கோதுமை வந்து கொண்டிருந்தது. அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதும் மக்காவாசிகள் நபியே கரீம் (ஸல்) அவர்களுக்கு கொடுமைகள் இழைத்து வந்தார்கள் என்பதை அறிந்தவுடன் இன்றிலிருந்து கோதுமையின் ஒரு தானியம் கூட இங்கிருந்து மக்காவிற்கு போகாது என்று தீர்மானித்தார்கள். மேலும் அவர்கள் மக்காவாசிகளுக்கு என்னுடைய அன்பிற்குரிய நேசர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்காத வரை யமாமாவில் இருந்து கோதுமையின் ஒரு தானியம் கூட இங்கு வராது என்று கூறினார்கள். அப்போது மக்காவாசிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் வந்து, நீங்கள் இரத்த உறவை பேணுங்கள் என்று போதனை செய்கின்றீர்கள்; அவ்வாறு இருக்க யமாமாவில் இருந்து வந்து கொண்டிருந்த எங்களுடைய கோதுமையோ நின்றுவிட்டது; மேலும் நாங்கள் பசி பட்டினியால் மரணிக்கின்றோம்; எங்கள் மீது நீங்கள் கருணை காட்டுங்கள்! என்று கேட்டுக் கொண்டார்கள். எனவே அனைத்து உலகிற்கும் அருட்கொடையாளரின் கருணையினால் மக்காவாசிகளுக்கு மீண்டும் கோதுமை வர துவங்கியது. (அஸ்ஸீரத்துல் நபவிய்யதுல் இப்னு ஹஷ்ஷாம்)

அதேபோன்று, அன்னார் (ஸல்) மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த பிறகு மக்காவாசிகளை ஒரு கடுமையான பஞ்சம் சூழ்ந்து விட்டது. அவர்களைப் பஞ்சம் வாட்டியது. இறுதியில், அதில் அவர்கள் (பலரும்) அழிந்து போனார்கள். மேலும், பலர் செத்தவற்றையும் எழும்புகளையும் உண்ண வேண்டியதாயிற்று. இந்நிலையில் அபூ ஸுஃப்யான் வந்து, முஹம்மதே! நீர் எங்ககளிடம் உறவுகளைப் பேணுமாறு கட்டளையிட்டபடி வந்தீர்; உம் சமுதாயத்தினரோ அழிந்துகொண்டிருக்கிறார்கள். எனவே நீங்கள் (இந்தப் பஞ்சத்தை நீக்கும்படி) அல்லஹ்விடம் துஆ செய்யுங்கள்; மழை பொழியட்டும்! மேலும் அதன் மூலம் இந்த பஞ்சமும், வறுமையும் நீங்கட்டும்! என்று கூறினார்.

இதே மக்கா வாசிகள் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாரின் குடும்பத்தாரை மூன்று ஆண்டுகள் தொடர்ந்து ஷுஅப் அபீ தாலிபில் வீட்டு கைதியாக வைத்திருந்தார்கள். எந்த அளவிற்கு என்றால் உண்ணுகின்ற மற்றும் பருகுகின்ற பொருள்கள் கூட அன்னாருக்கு கொடுக்க விடாமல் தடுத்து வைத்திருந்தனர். இவ்வாறான கொடுமைகள் இழைத்தும் கூட நபிகள் நாயகம் (ஸல்) அதை கண்டும் காணாமல் விட்டு விட்டார்கள். மேலும் அத்தருணமே கையை உயர்த்தி துஆ செய்தார்கள். துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. நன்கு மழை பொழிய துவங்கியது. மக்காவாசிகளின் வாழ்வில் பஞ்சம் அகன்று மீண்டும் செழிப்பான மகிழ்ச்சிக்குரிய அந்த பழைய நாட்களும் திரும்பியன. (புஹாரி

கிதாபுத் தப்ஃஸீர் ஸூரா அர்ரோம்-அத்துகான்)

அண்டை வீட்டாரைப் பொறுத்தவரை, நபி (ஸல்) அவர்கள் அண்டை வீட்டாரிடம், அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் சரி! முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தாலும் சரி! நல்லிணக்கத்தையும், கருணையையும் மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்கள். இது செயல்படுத்தப்பட்டால், வெறும் மத வேறுபாடுகளின் அடிப்படையில் எழுகின்ற எந்த மோதல்களும் ஒருபோதும் ஏற்படாது.

அபூ ஹூரைரா (ரலி) அறிவிக்கின்றார்கள்: 'அல்லாஹ்வின் மீதாணையாக! அவர் இறைநம்பிக்கையாளர் அல்ல. அல்லாஹ்வின் மீதாணையாக! அவர் இறைநம்பிக்கையாளர் அல்ல. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் இறை நம்பிக்கையாளர் அல்ல' என்று (மூன்று முறை) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இறைத் தூதர் அவர்களே!' 'அவர் யார்? என்று கேட்கப்பட்டது. அதற்கு, 'எவருடைய நாசவேலைகளிலிருந்து அவருடைய அண்டை வீட்டார் பாதுகாப்பு உணர்வைப் பெறவில்லையோ அவர்தான்' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (ஸஹீஹ் புஹாரி : 6016)

நாம் எதிர்பாராத நேரத்தில் பல்வேறு விதமாக திடீர் தாக்குதல்கள் தொடுக்கப்படுகிறன. சில நேரங்களில் இரவில், வானொலி அல்லது தொலைக்காட்சியில் ஒரு சத்தமான நிகழ்ச்சி ஒளிபரப்பப்படலாம், இது அண்டை வீட்டாரை நிம்மதியாக தூங்க விடாமல் தடுக்கிறது. சில நேரங்களில் வீட்டு குப்பைகள் அண்டை வீட்டாரின் வாசல் அருகே வைக்கப்படுதல் போன்றவை.

அபூதர் (ரலி) அவர்கள் கூறியதாவது: (என்னிடம்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'அபூதர்! நீர் குழம்பு சமைத்தால் அதில் அதிகமாக தண்ணீர் சேர்த்துக்கொள்வீராக! உம்முடைய அண்டை வீட்டாரையும் கவனித்துக்கொள்வீராக!' என்று கூறினார்கள். இதன் பொருள் அண்டை வீட்டார்களுக்கும் அவ்வப்போது குழம்பை கொடுக்க வேண்டும் என்பதாகும். (ஸஹீஹ் முஸ்லிம் : 5120)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'நான் நல்ல முறையிலோ அல்லது தீய முறையிலோ நடந்து கொண்டேன் என்பதை எப்படி நான் அறிந்து கொள்வது?' என்று ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார். அதற்கு,'நீர் நல்ல முறையில் நடந்து கொண்டீர் என உம்முடைய அண்டை வீட்டார் கூறுவதை நீர் செவியேற்றால் நீர் நல்ல முறையில் நடந்து கொண்டீர்; நீர் தீய முறையில் நடந்து கொண்டீர் என உமது அண்டை வீட்டார் கூறுவதை நீர் செவியேற்றால் நீர் தீய முறையில் நடந்து கொண்டவர் ஆவீர்' என்று கூறினார்கள். (இப்னு மாஜா)

பின்னர், ஒருவரின் மதத்தையோ அல்லது கொள்கையையோ பரப்புவதில் பலவந்தப்படுத்துவதையோ அல்லது போர் புரிவதையோ அனுமதிக்க முடியாது.

. அல்லாஹ் கூறுகின்றான்:

மார்க்கத்தில் எவ்வித கட்டாயமும் (ஆகுமானதும்) இல்லை. (அல் பக்கரா 2: 257)

'மார்க்கத்தில் எந்த நிர்ப்பந்தமும் இல்லை' என்ற திருக்குர்ஆனின் தெளிவான கூற்றை நான் ஆரம்பத்தில் முன்வைத்துள்ளேன். மேலும், உண்மை உங்கள் இறைவனிடமிருந்து வந்துள்ளது அதன் பிறகு எந்த கட்டாயத்திற்கும் இடமில்லை என்றும் அது அறிவித்துள்ளது. ஏனென்றால் உண்மை என்பது இதயங்களை தன் உண்மைத்துவம் மற்றும் சிறப்புத் தன்மையை கொண்டு ஒப்புக் கொள்ள வைப்பதாகும், இதற்கு பலவந்தம் அல்லது வன்முறையுடன் எந்தத் தொடர்பும் இல்லை. தற்போது மக்கள் தங்கள் விருப்பப்படி அதை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம்.

மற்றொரு வசனத்தில், 'உங்களுக்கு உங்கள் மார்க்கம், எனக்கு என் மார்க்கம்' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, நிராகரிப்பாளர்கள் மற்றும் இறைமறுப்பாளர்களே! உங்களுக்கு உங்கள் மார்க்கத்தை தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் உண்டு; எனக்கு என் மார்க்கத்தின் சுதந்திரம் உண்டு.' (ஸூரத்துல் காஃபிரூன்: 7)

மேற்கண்ட வசனங்கள் மார்க்க சுதந்திரத்தின் நான்கு அடிப்படை உரிமைகளை வழங்குகின்றன.

முதலாவதாக, யாரையும் தங்கள் மதத்திற்குள் கட்டாயமாக புகுத்த முடியாது. இரண்டாவதாக, தங்கள் சொந்த விருப்பப்படி ஒருவர் மதத்திற்குள் நுழைவதை எவராலும் வலுக்கட்டாயமாகத் தடுக்க முடியாது.

மூன்றாவதாக, ஒருவர் அனைவராலும் அறியப்பட்ட மற்றும் வெளிப்படையான தனது கொள்கையைப் பின்பற்றுவதிலும், சம்பிரதாய மற்றும் வழிபாட்டைச் செய்வதிலும் எந்தவிதமான கட்டுப்பாடும் அல்லது வற்புறுத்தலும் அனுமதிக்கப்படாது.

நான்காவதாக, ஒருவர் ஒரு மார்க்கத்தில் நிலைத்திருக்க விரும்பவில்லை என்றால், அவரை அதில் நிலைத்திருக்க கட்டாயப்படுத்துவது அனுமதிக்கப்படாது. மேலும் அதில் நிலைத்திருக்க விரும்புவரை அவ்வாறு கட்டாயமாக வெளியேற வேண்டும் என்று நிர்பந்திக்கவும் கூடாது.

இங்கு இஸ்லாமிய மார்க்கத்தை பரப்புவதற்காகவே போர்கள் நடைபெற்றது என்று இஸ்லாத்தின் மீது செய்யப்படுகின்ற ஆட்சேபனை முற்றிலும் ஒரு தவறான ஆட்சேபனையாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இஸ்லாமிய போர்கள் வெறும் தற்காப்புப் போர்களா? அல்லது அவை குழப்பம் மற்றும் தீங்குகளை நீக்கி அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்காகவா? என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் நடைமுறை எவ்வாறாக இருந்தது என்றால் அல்லாஹ் அன்னாரை முழு உலகிற்கும் வழிகாட்டியாகவும், தூதராகவும் அனுப்பி, நபிமார்களின் முத்திரையாக நியமித்திருந்தாலும், எந்தவொரு சந்தர்ப்ப சூழ்நிலையிலும் தம்மை மற்ற நபிமார்களை விட உயர்ந்தவர் என்று எந்த ஒரு முஸ்லிமும் கூறி அமைதியின் சூழலைக் கெடுப்பதை அன்னார் (ஸல்) ஒருபோதும் விரும்பியதும் இல்லை; பொறுத்துக் கொள்ளவும் இல்லை. இவ்வாறு, ஸஹீஹ் புஹாரியில் ஒரு அறிவிப்பு உள்ளது, ஒரு முறை ஓர் யூதன் சந்தையில் பொருட்களை விற்றுக்கொண்டிருந்தபோது, ஒரு முஸ்லிம், அந்த யூதரிடம் அவர் விரும்பாத ஒரு சிறிய விலையைக் கூறினார்கள்.

அதற்கு அந்த யூதர், 'உலகத்தார் அனைவரைவிடவும் மூஸா (அலை) அவர்களுக்கு மேன்மை அளித்தவன் மீதாணையாக!' என்று கூறினார்.

அதைக் கேட்டு (கோபம் கொண்ட) அந்த முஸ்லிம் கையை ஓங்கி யூதரின் முகத்தில் அறைந்து விட்டார். உடனே அந்த யூதர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, 'நாங்கள் உங்கள் பொறுப்பிலும் பாதுகாப்பிலும் இருக்கின்றோம். இந்த முஸ்லிம் என்னை அறைந்து எனக்கு அநீதி இழைத்துவிட்டார்' என்று முறையிட்டார்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அந்த முஸ்லிமின் மீது மிகவும் கோபமடைந்தவாறு 'நபிமார்களில் எனக்கு எந்த சிறப்பையும் அளிக்காதீர்கள்' என்று கூறினார்கள்.

! மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு, மார்க்கத்தில் பல வேறுபாடுகள் இருந்தபோதிலும், பரஸ்பர ஒற்றுமையை ஏற்படுத்தவும் வெறுப்பை அகற்றவும் கூடிய ஒரு பொதுவான நிலையைக் கண்டறிய முயற்சிப்பது அவசியமாகும். எனவே, எல்லாம் வல்ல அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்;

நீர் கூறுவீராக! வேதத்தைவுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்குமிடையில் ஒன்றுபட்ட ஒரு கருத்தின்பால் வாருங்கள். (அதாவது) நாம் அல்லாஹ்வையன்றி வேறவரையும் வணங்கமாட்டோம்; அவனுக்கு வேறெதனையும் இணை வைக்க மாட்டோம்; அல்லாஹ்வை விட்டு விட்டு நம்முள் சிலர் வேறு சிலரை கடவுள்களாக ஆக்கி கொள்ளமாட்டோம். ஆனால், அவர்கள் புறக்கணித்து விட்டால், நீங்கள் அவர்களிடம், நாங்கள் (இறைவனுக்குக்) கட்டுப்பட்டு நடப்பவர்களாயிருக்கின்றோம் என்பதற்கு நீங்கள் சாட்சிகளாயிருங்கள் என்று கூறுங்கள். (ஆலி இம்ரான் 3: 65)

மக்கத்து காஃபிர்களின் தொடர் எதிர்ப்புகள், அநீதியான தாக்குதல்கள் மற்றும் அவர்கள் இழைத்த துன்பங்கள், மேலும், எல்லாவற்றிற்கும் மேலாக முஸ்லிம்கள் தங்களுடைய கொள்கைக்கு ஏற்ப அமல் செய்வதிலிருந்தும், தப்லீஃக் செய்வதிலிருந்தும் பலவந்தமாக தடுக்கப்பட்ட காரணத்தினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறை அனுமதியுடன் மக்காவிலிருந்து மதீனா ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். அங்கு புதியதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்த சில குடும்பங்கள் மட்டுமின்றி யூதர்களின் மூன்று கோத்திரங்களான பனு கைனுக்காஃ, பனு நழீர் மற்றும் பனு குரைழா கோத்திரங்களும், இணை வைப்பவர்களுடைய அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் என்ற இரண்டு கோத்திரங்களும் கோத்திரங்களும் வசித்து வந்தன.

இந்த ஐந்து கோத்திரங்களிடையே ஒழுங்குமுறை மற்றும் ஒழுக்கம் என்ற ஒன்றே இல்லை. குறிப்பாக, மூன்று யூத கோத்திரங்களும் தனித்தனி கோட்டைகளில் சுதந்திரமாகவும் தன்னாட்சி முறையிலும் வசித்து வந்தனர். இந்தச் சூழ்நிலையில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், மதீனாவாழ் மக்களிடத்தில் மத நல்லிணக்கம், அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டும் நோக்கத்துடன், குறிப்பாக யூத கோத்திரங்களுடன் ஒரு எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தை மேற்கொண்டார்கள். அதன் விதிமுறைகள் பின்வருமாறு:

(1) முஸ்லிம்கள் மற்றும் யூதர்களாகிய நாங்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடனும், நேர்மையுடனும் இருப்போம். மேலும் ஒருவர் மற்றவருக்கு எதிராக மோசடி செய்யவோ அல்லது கடுமையாகவோ நடந்து கொள்ள மாட்டோம்.

(2) அனைத்தும் சமுதாயத்திற்கும் மார்க்கத்தில் சுதந்திரம் உண்டு.

3) அனைத்து வகையான கருத்து வேறுபாடுகள் மற்றும் சச்சரவுகளுக்கும், தீர்வு காண நபி (ஸல்) அவர்களிடமே வரவேண்டும், மேலும் ஒவ்வொரு தீர்ப்பும் அந்த அந்த சமூதாயத்தின் வேதத்தின் அடிப்படையில் இருக்கும்.

(4) அனைத்து குடிமக்களின் உயிர்களும் சொத்துக்களும் பாதுகாக்கப்படும்.

5) யூதர்கள் அல்லது முஸ்லிம்களுக்கு எதிராகப் எந்த நாடு போர் தொடுத்தாலும் , யூதர்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கவும் உதவவும் எழுந்து நிற்பார்கள்.

6) மதீனா மீது தாக்குதல் நடந்தால், அனைவரும் ஒன்றிணைந்து அதை எதிர்த்துப் போராடுவார்கள்.

7) எந்த ஒரு பிரிவினரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதி இன்றி போருக்காக வெளியேறக் கூடாது.

8) இந்த உடன்படிக்கையின் படி எந்த ஒரு கொடுமைக்காரனோ அல்லது குழப்பவாதியோ தண்டனையிலிருந்து பாதுகாப்பாக இருக்க மாட்டார்கள்…போன்றவை.

யூத கோத்திரங்கள் இந்த ஒப்பந்தத்தை தொடர்ந்து மீறி வந்தாலும், நபி (ஸல்) அவர்கள் எப்போதும் அவர்களிடம் அன்பாக நடந்து கொண்டு, தனது வாக்குறுதியை நிறைவேற்றினார்கள்.

எனவே, இத்தகைய சாதகமற்ற சூழ்நிலைகளில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவின் ஆட்சிப் பொறுப்பை மிகத் திறமையாக நிர்வகித்தார்கள். குறிப்பாக வெவ்வேறு மதங்கள், பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் வெவ்வேறு கொள்கைகள் கோட்பாடுகளை கொண்டிருந்த ஒரு மக்களிடையே ஹிக்மத்துடன்

செயல்பட்டார்கள். ஒவ்வொருவருக்கும் தங்கள் நம்பிக்கையையும்,பிரிவையும் பின்பற்றுவதற்கும், அதை வெளிப்படுத்துவதற்கும், மேலும் அதனை அமைதியாகப் பிரச்சாரம் செய்வதற்கும் சுதந்திரம் அளித்து, பின்னர் அதைச் செயல்படுத்தியும் காட்டியது மார்க்க சுதந்திரம் மற்றும் மத நல்லிணக்கத்திற்கான ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாகும்.

ஒருமுறை நஜ்ரானிலிருந்து ஒரு கிறிஸ்தவக் குழு மதீனாவிற்கு நபி (ஸல்) அவர்களுடன் மார்க்கக் கலந்துரையாடலுக்காக வந்தது. அன்னார் (ஸல்), அவர்களை மிகுந்த மரியாதையுடனும், கண்ணியத்துடனும் மஸ்ஜிது நபவியில் தங்க வைத்தார்கள். அவர்கள் தங்கள் வழிபாட்டிற்காக எங்கு செல்வது? என்று எண்ணிய போது, இங்கும் அங்கும் செல்ல வேண்டிய அவசியமில்லை; இந்த பள்ளிவாசலிலேயே உங்கள் வழிமுறையின்படி நீங்கள் இறை வணக்கம் செய்யலாம் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

திருக்குர்ஆனும் இவ்வாறு போதித்துள்ளது:

**அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைப்பவற்றை நீங்கள் ஏசாதீர்கள். இல்லையாயின், அவர்கள் அறியாமையினால் அல்லாஹ்வை ஏசுவார்கள். (அல் அன்ஆம் 6:109)**

மக்கத்து இணைவைப்பாளர்கள் உஹது போரின் போது ஷஹீதாக்கப்பட்ட முஸ்லிம்களின் உடல்களை சிதைத்து, அதாவது அவர்களின் மூக்கு, காதுகள் போன்றவற்றை வெட்டி, அவமதித்தனர். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் இவ்வாறான முறையில் அவர்களைப் பழிவாங்கியதில்லை. மாறாக, அன்னாரது முன்மாதிரி இதுவாகவே இருந்தது.

ஒருமுறை, ஓர் யூதரின் ஜனாஸா வந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்கள். அப்போது, 'இது ஓர் யூதரின் ஜனாஸா' என்று ஒருவர் கூறினார். அன்னார் (ஸல்) , 'அவருக்கு ஆன்மா இல்லையா?; அவர் ஒரு மனிதர் இல்லையா?' என்று கேட்டார்கள். (புகாரி)

ஹஸ்ரத் யஃலா பின் முர்ரா (ரலி) அவர்கள், அறிவிக்கின்றார்கள்; நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் பலமுறை பயணம் செய்துள்ளேன். அன்னார் (ஸல்) எந்த மனித சடலத்தையாவது பார்த்தால், அதை அடக்கம் செய்யாமல் ஒருபோதும் சென்றதில்லை. மேலும் அந்த சடலம் முஸ்லிமுடையதா அல்லது காஃபிருடையதா என்று ஒருபோதும் கேட்டதில்லை.

பத்ர் போரில் கொல்லப்பட்ட பல இணைவைப்பாளர்களின் தலைவர்களின் உடல்களை மக்காவாசிகள் திறந்தவெளி மைதானத்தில் போட்டுவிட்டு ஓடிவிட்டனர். நபி (ஸல்) அவர்கள் அந்த அனைத்து சடலங்களையும் ஒரு குழியில் அடக்கம் செய்தார்கள் அதை "கலீபே பத்ர்" பத்ரின் இதயம் என்று கூறுவார்கள்.(புகாரி, கிதாபுல்-மகாஸி)

அஹ்ஸாப் போரின் போது இணை வைப்பாளர்களின் ஒரு தலைவர் நவ்ஃபல் பின் அப்துல்லாஹ் இறந்து விட்டார். மக்கத்து இணை வைப்பாளர்கள், ஹம்ஸா (ரலி) அவர்களுடன் செய்த மிருகத்தனமான செயலின் காரணமாக இயல்பாகவே அவர்கள் அச்சத்தில் இருந்தார்கள் அவர்களுடைய தலைவரின் சடலத்தையும் அவ்வாறு சிதைத்து விடலாம் என்று எண்ணி அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் எங்களிடமிருந்து பத்தாயிரம் திர்ஹத்தை பெற்றுக் கொண்டு நவ்ஃபலின் சடலத்தை திருப்பிக் கொடுத்து விடுமாறு செய்தி அனுப்பினார்கள். கணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் நாங்கள் சடலங்களுக்கு எந்தவொரு தொகையையும் பெறுவதில்லை என்று கூறி நீங்கள் உங்களுடைய சடலத்தை எடுத்துச் செல்லுங்கள் என்று கூறினார்கள். (துலாயிலுந் நுபுவ்வதி லில் பைஹக்கி, தொகுப்பு 3)

வெற்றிகொள்ளப்பட்ட மற்றும் தோல்வியுற்ற சமுதாயங்களிடம் அதுவும் குறிப்பாக, எவர்களின் கைகளால் நீண்ட காலமாக சொல்லொணா துன்பங்களையும், சித்திரவதைகளையும் சகித்துக் வந்தார்களோ, அவர்களிடம் நன்னடத்தையை வெளிப்படுத்துவது உலக வரலாற்றில் இஸ்லாத்தின் நிறுவனர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர வேறு எங்கும் காணமுடியாது.

மக்கத்து இணை வைப்பாளர்களின் தலைவர் அபூஜஹலின் மகன் இக்ரிமாவும் தம் தந்தையைப் போலவே வாழ்நாள் முழுவதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக போர் புரிந்து கொண்டே இருந்தார். எதுவரை என்றால், மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்திலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சார்பாக பொது மன்னிப்புக்கான அறிவிப்பு செய்த பிறகும், ஒரு குழுவை தாக்கி ரத்தம் சிந்துவதற்கு அவர் காரணம் ஆகிவிட்டார். மேலும், போர்க் குற்றத்தின் காரணமாக மரண தண்டனைக்குரியவராக அவர் கருதப்பட்டார். தனது உயிரைக் காப்பாற்றுவதற்காக ஏமன் நாட்டை நோக்கி ஓடிவிட்டார். முஸ்லிமாக இருந்த அவருடைய மனைவி உம்மே ஹக்கீம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவரிடம் சென்று, தம்முடைய கணவரை மன்னிக்குமாறு கேட்டதற்கு இணங்க கருணை உள்ளம் கொண்ட மாநபி (ஸல்) அவர்கள் மன்னித்து விட்டார்கள். புறப்பட தயாராக இருந்த படகில் அமர்ந்து கொண்டிருந்த தம்முடைய கணவரிடம் மாநபி (ஸல்) அவர்கள் உங்களை மன்னித்து விட்டார்கள்; வாருங்கள்! என்று அவர் கூறினார்.

ஆனால், இக்ரிமாவிற்கு தாம் மன்னிக்கப்பட்டு விட்டோம் என்பதில் நம்பிக்கை ஏற்படவில்லை. எவ்வாறு இருப்பினும், அவர் தம்முடைய மனைவியுடன் தயக்கத்துடனும், அச்சத்துடனும் மக்கா திரும்பி வந்து விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று,தாங்கள் என்னை உண்மையாகவே மன்னித்து விட்டீர்களா? என்று கேட்டார் .அதற்கு ஆம்! நான் உம்மை மன்னித்து விட்டேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். மீண்டும் அவர் நான் என்னுடைய மார்க்கத்தில் இருக்கின்ற நிலையிலேயே தாங்கள் என்னை மன்னித்து விட்டீர்களா? என்று கேட்டார். ஆம்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்போது அந்த இணை வைப்பாளராக இருந்த இக்ரிமாவின் உள்ளம் இஸ்லாத்திற்காக திறந்து விட்டது. மேலும் அவர் இந்த நல்லிணக்கம் மற்றும் நன்னடத்தையைப் பார்த்து இவ்வாறு கூறினார்: முஹம்மது (ஸல்) தாங்கள் இரத்த உறவை மிக்க பேணுபவரும், எண்ணற்ற கருணையாளரும், மிகவும் கண்ணியத்திற்குரியவரும் ஆவீர்கள்; அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்றும், மேலும் முஹம்மத் (ஸல்) அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன் என்று கூறி இஸ்லாத்தை தழுவி விட்டார். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுப்பு 3, பக்கம் 92)

அதேபோன்று அந்த குற்றவாளிகளில் அபூஸுஃபியானின் மனைவி ஹிந்தா பின்த் உத்பாவும் இருந்தார். இவர் உஹது போரில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சிறிய தந்தை ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் சடலத்துடன் மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொண்டார். அவர்களின் மூக்கு காது மற்றும் பிற உடல் உறுப்புகளை வெட்டி சடலத்தின் உருவத்தையே சிதைத்து விட்டார் மேலும் அவர்களின் கல்லீரலை கடித்து மெண்டு பழிவாங்குதல் என்ற நெருப்பை தனித்து கொண்டார். மக்கா வெற்றிக்குப் பிறகு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெண்களிடம் பைஅத் வாங்கும் போது இந்த பெண்மணியும் முக்காடு அணிந்து கொண்டு அமர்ந்திருந்தார்.

ஏனென்றால் அவருடைய குற்றத்தின் காரணமாக அவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்; 'பெண்கள் பைஅத்திற்காக வருகை தந்த போது ஹிந்தாவும் முக்காடு அணிந்து கொண்டு அவர்களுடன் வந்தார். மேலும் பைஅத்தும் செய்துவிட்டார். நாங்கள் இணைவைக்க மாட்டோம் என்ற வாசகத்தை அடைந்ததும் - அவர் இயல்பாகவே மிக அதிகமாக கோபம் அடையக் கூடியவர். அதன் காரணமாக அவர் கூறினார்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் இனி இணை வைப்போமா? தாங்கள் தனியாக இருந்தீர்கள்; நாங்கள் அனைவரும் முழு சக்தியுடனும், ஆற்றலுடனும் தங்களை எதிர்த்தோம்; எங்களுடைய தெய்வம் உண்மையானதாக இருந்திருந்தால் தாங்கள் எவ்வாறு வெற்றி பெற்றிருப்பீர்கள்? நிச்சயம் அது ஒன்றுமற்றதாக நிரூபணம் ஆகிவிட்டது; நாங்கள் தோல்வியை அடைந்து விட்டோம். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இது ஹிந்தாவா? என்று கேட்டார்கள்? அன்னாரின் உறவினர் என்ற அடிப்படையில் அவருடைய குரலை அன்னார் (ஸல்) அறிந்திருந்தார்கள்.

ஹிந்தா கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஆம்! நான் தற்போது முஸ்லிமாகி விட்டேன்; தற்போது தங்களுக்கு என்னை கொலை செய்வதற்கான உரிமை இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரித்தவாறு ஆம்! இனி உமக்கு எந்தத் தண்டனையும் கொடுக்க முடியாது என்று கூறினார்கள்.

சுருக்கமாக, எந்த சமுதாயம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து கடவுள்களையும் ஒன்றிணைத்து ஒரே இறைவனாக உருவாக்கிவிட்டார்கள் என்று கருதியதோ அவர்களிடத்தில் எந்த அளவிற்கு மாற்றம் நிகழ்ந்தது விட்டது என்றால், ஹிந்தா போன்ற பெண்ணும் கூட இறைவன் ஏகன் இல்லை இனி எவராவது கூறமுடியுமா? என்று கூறினார். இந்த அளவிற்கு மாற்றம் ஏற்பட்டுவிட்டது. (அன்வாருள் உலூம் தொகுதி 20 பக்கம் 14,15)

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! இந்த தலைப்பு மற்றும் கட்டுரைக்கு ஏற்ப இறுதியில் இதை கூறுவதும் அவசியம் என்று கருதுகிறேன் மார்க்க நல்லிணக்கம் மற்றும் கருத்து சுதந்திரம் தொடர்பாக திருக்குர்ஆனின் போதனைகள் மற்றும் ஹஸ்ரத் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் இக்காலத்தில் எல்லாம் வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிழலாக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் அந்தஸ்தில் குறிப்பாக இந்தியாவில் அனுப்பியுள்ளான். இதற்கான ஒரு மிகப்பெரிய காரணம் என்னவென்றால், இந்தியா பல்வேறு சமுதாயங்கள் மற்றும் மார்க்கத்தினர்கள் வாழும் இடமாக இருக்கின்றது. பல்வேறு நிறம், இனம், மொழிகள் மற்றும் மார்க்கத்தை பின்பற்றக்கூடிய நாடாகவும் இருக்கின்றது. எனவே எல்லாம் வல்ல அல்லாஹ் அழகிய மற்றும் சமாதானத்தை வழங்கக் கூடிய இஸ்லாமிய போதனைகளை பரப்புவதற்காக இந்த நாட்டை மையமாக ஆக்கியுள்ளான்.

இந்த நாட்டிலிருந்து தான் அந்த ஒளியானது இன்று உலகின் 220 நாடுகளில் பரவியுள்ளது. இந்த இந்திய நாட்டில் பிற மார்க்கங்களை பின்பற்ற கூடியவர் அல்லாமல் இந்து மற்றும் முஸ்லிம்கள் ஆகிய இரண்டு பெரிய சமுதாயங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கிடையில் ஒற்றுமை ஒருமைப்பாடு மற்றும் மத நல்லிணக்கங்களின் போதனைகளை வழங்கியவாறு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானீ (அலை) அவர்கள் தம்முடைய வாழ்நாளின் கடைசி நாட்களில் 'சமாதானத் தூது' என்ற பெயரில் ஒரு புத்தகத்தை எழுதினார்கள். அதிலிருந்து சில மேற்கோள்களை நேரத்தை கருத்தில் கொண்டு நான் எடுத்து வைக்கின்றேன்:

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:- செவியேற்பவர்களே! நாம் அனைவரும் இந்துக்களாக இருந்தாலும் முஸ்லிம்களாக

இருந்தாலும் நம்மிடையே நிலவும் நூற்றுக்கணக்கான வேறுபாடுகளுக்கு மத்தியிலும் நாம் இவ்வுலகை படைத்த மற்றும் அதன் அதிபதியான அந்த இறைவன் மீது நம்பிக்கை கொள்வதில் ஒன்று பட்டிருக்கின்றோம். மேலும் அவ்வாறே நாம் அனைவரும் மனிதர்கள் என்ற ரீதியிலும் ஒன்றுபட்டு இருக்கின்றோம். மேலும் அவ்வாறே நாம் அனைவரும் ஒரே நாட்டில் வாழ்பவர்களாக இருக்கின்ற காரணத்தால் ஒருவருக்கொருவர் அண்டை அயலாராக இருக்கின்றோம். எனவே நமது கடமை என்னவென்றால், நாம் தூய உள்ளத்துடனும், நல்ல எண்ணத்துடனும் ஒருவருக்கொருவர் நண்பர்களாக ஆகி மார்க்கம் மற்றும் பௌதிக இன்னல்களில் ஒருவருக்கொருவர் அனுதாபத்தோடு நடந்து கொள்ள வேண்டும். மேலும் ஒருவர் மற்றவருடைய உடல் அங்கமாக மாறிவிடும் அளவிற்கு அனுதாபத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எனது தேசத்தினரே! எந்த மார்க்கத்தில் பொதுவான அனுதாபம் பற்றிய போதனை இல்லையோ அந்த மார்க்கம் ஒரு மார்க்கமே அல்ல. மேலும் எந்த மனிதனிடம் அனுதாபம் என்ற பண்பு இல்லையோ அவன் மனிதனே அல்ல. நம் இறைவன் எந்த ஒரு சமுதாயத்திடமும் பாரபட்சம் காட்டுவதில்லை. உதாரணமாக மனிதனின் என்னென்ன ஆற்றல்களும், திறமைகளும் ஆரியர்களின் பழங்கால சமுதாயங்களுக்கு வழங்கப்பட்டனவோ அந்த எல்லா ஆற்றல்களும் திறமைகளும் அரேபியர்கள், பாரசீகர்கள் சிரியாவை சேர்ந்தவர்கள், சீனர்கள், ஜப்பானியர்கள், ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள் ஆகிய சமுதாயங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இறைவனின் பூமி அனைவருக்கும் விரிப்பாக பயன்படுகிறது. அவனது சூரியன், சந்திரன், மற்றும் பல நட்சத்திரங்களும் அனைவருக்கும் ஒளி தரும் விளக்காக பயன்படுகின்றன. மேலும் பிற தொண்டுகளையும் புரிகின்றன. அவனால் படைக்கப்பட்ட அடிப்படை காரணிகளாகிய காற்று, நீர், நெருப்பு, மற்றும் மண் அதேபோன்று அவனால் படைக்கப்பட்ட பிறப்பொருட்களான தானியங்கள் கனி வகைகள் மற்றும் மூலிகைகள் ஆகியவற்றிலிருந்து அனைத்து சமுதாயங்களும் பயனடைகின்றன. ஆக, இறைவனின் இந்த பண்புகள், நாமும் மனித குலத்துடன் மனித நேயம் மற்றும் நன்னடத்தையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்ற பாடத்தையும், மேலும், குறுகிய மனம் உள்ளவர்களாகவும் தைரியமற்றவர்களாகவும் ஆகிவிடக் கூடாது என்ற பாடத்தையும் புகட்டுகின்றன.' (சமாதான தூது பக்கம் 4,5)

மேலும் பரஸ்பர ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் அருள்களின் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:-

'ஒற்றுமை எத்தகையது என்றால் வேறு எந்த வகையிலும் தீர்க்க முடியாத துன்பங்களும் வேற எந்தத் திட்டத்தினாலும் தீர்வு காண முடியாத பிரச்சனைகளும் கூட ஒற்றுமையினால் தீர்வு காண முடியும் என்பது எவருக்கும் மறைமுகமானது அல்ல. எனவே ஒற்றுமையின் அருட்களிலிருந்து தன்னை விலக்கி வைப்பது அறிவுள்ளவரது செயல் அன்று. இந்துக்களும், முஸ்லிம்களும் இந்த நாட்டின் எப்படிப்பட்ட சமுதாயங்கள் என்றால் உதாரணமாக இந்துக்கள் ஒன்றிணைந்து முஸ்லிம்களை இந்த நாட்டில் இருந்து வெளியேற்றி விடுவார்கள் என்பதையோ அல்லது முஸ்லிம்கள் ஒன்றிணைந்து இந்துக்களை நாடு கடத்தி விடுவார்கள் என்பதையோ நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்றாகும். மாறாக இன்னும் கூறுவதென்றால் தற்போது இந்து முஸ்லிம்களின் இணைப்பு பிரிக்க முடியாத ஒன்றாகும். ஒருவர் மீது ஏதும் அழிவு வந்துவிட்டால் மற்றவரும் அதில் இணைந்து விடுவார்..... உங்களுடைய இரு சமுதாயங்களில் எவர் மற்ற சமுதாயத்திற்கு அழிவை ஏற்படுத்தும் எண்ணம் உடையவராக இருப்பாரோ அவர் தான் அமர்ந்திருக்கும் மரத்தின் கிளையை தாமே வெட்டுபவர் போன்றவராவார். நீங்கள் அனைவரும் இறைவன் அருளால் கல்வி அறிவு பெற்றவர்களாகவும் விளங்குகின்றீர்கள். தற்போது வெறுப்பினை விட்டுவிட்டு நேசிப்பதில் முன்னேறுவது அழகாகும். மேலும் இரக்கமின்மையை விட்டு விட்டு அனுதாபத்தை காட்டுவது தமது அறிவுடைமைக்கு உகந்ததாகும். (சமாதான தூது பக்கம் 10,11 )

செவியேற்பவர்களே! பல்வேறு மார்க்கங்களில் வெவ்வேறு கொள்கை கோட்பாடுகள் மற்றும் கருத்துகள் இருக்கலாம், அதை பின்பற்றக்கூடிய அனைவரும் தத்தமது புரிதலுக்கு ஏற்ப அவற்றை ஏற்றுக் கொண்டு பின்பற்றுவதுடன், பகுத்தறிவு மற்றும் நேர்மையான வாதங்களுடன் மற்றவர்களையும் நம்ப வைக்கின்றனர். இதுவே மார்க்க சுதந்திரத்தின் பொருளும், கருத்தும் ஆகும். ஆனால், இதற்கு நேர் மாற்றமாக எவர் பிற மதத் தலைவர்களையும் அல்லது அவர்களின் நம்பிக்கைக்குறிய வேதங்களையும் அவமதித்து மறுக்க முயற்சிப்பாரேயானால் அதுவே குழப்பத்திற்கும் போருக்கும் வழிவகுக்க கூடியதாக அமையும். அவ்வாறு இல்லையெனில், சின்னஞ்சிறு வேறுபாடுகள் பரஸ்பர அமைதி மற்றும் ஒற்றுமைக்கு தடையாக இருக்க முடியாது.

இந்த மையக் கருத்தை மேலும் விவரித்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:-

'கண்ணியத்திற்குரியவர்களே! பல்வேறு சமுதாயங்களின் நபிமார்களையும் இறைத்தூதர்களையும் கண்ணியக் குறைவாக குறிப்பிடுவதும் அவர்களைப் பழித்துரைப்பதும் எத்தகைய ஒரு விஷம் என்றால் அது இறுதியில் உடலை மட்டும் அழித்து விடுவதில்லை மாறாக ஆன்மாவையும் அழித்து மார்க்கம் மற்றும் உலகம் ஆகிய இரண்டையும் அழித்து விடுகின்றது என்பதை பழைய அனுபவமும் மீண்டும் மீண்டும் வரும் சோதனைகளும் நிரூபித்து காட்டி விட்டன. ஒரு நாட்டில் வாழும் மக்கள் ஒருவர் மற்றவரின் மார்க்க வழிகாட்டியை குறை கூறுவதிலும் அவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட அந்தஸ்தை சீர்குலைப்பதிலும் ஈடுபட்டால் அந்நாடு நிம்மதியாக வாழ முடியாது. மேலும் எந்த சமுதாயங்களில் ஒரு சமுதாயத்தவர் பிற சமுதாயத்தவரின் நபி, ரிஷி மற்றும் அவதாரத்தை தீயவர்களாகவும் தீய வார்த்தைகளாலும் நினைவு கூறுவார்களோ அந்த சமுதாயங்களுக்கிடையே ஒருபோதும் உண்மையான ஒற்றுமை நிலவ முடியாது.... மேலும் நாங்கள் மற்ற சமுதாயங்களின் நபிமார்களை குறித்து ஒருபோதும் தீய வார்த்தைகளால் பேசியது இல்லை. இவ்வுலகில் பல்வேறு சமுதாயங்களுக்காக அனுப்பப்பட்ட நபிமார்களை கோடிக்கணக்கான மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். மேலும் உலகின் ஏதோ ஒரு பகுதியில் அவர்களின் நேசம் மற்றும் மகத்துவம் போற்றப்படுகிறது. இந்த நேசம் மற்றும் நம்பிக்கையில் ஒரு நீண்ட காலம் கடந்து விட்டதே அவர்களின் உண்மைக்கு போதுமான சான்றாகும் என்பதே எங்கள் கொள்கையாகும். ஏனென்றால், அவர்கள் இறைவன் புறமிருந்து வந்திருக்கவில்லை என்றால் அவர்களின் புகழ் கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் பரவி இருக்காது.' (சமாதான தூது பக்கம் 22,23)

இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மார்க்க சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் தொடர்பாக என்ன போதனைகளை வழங்கியுள்ளார்களோ மற்றும் எதற்கு தம்முடைய அழகிய முன்மாதிரி மூலம் செயல் வடிவிலான சான்றையும் வழங்கியுள்ளார்களோ, அதனை இக்காலத்தில் அன்னாருடைய உண்மை அடியாரான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் அந்த போதனைகள் மற்றும் தமது அழகிய முன்மாதிரி மூலம் மீண்டும் உயிர்ப்பித்து காட்டியுள்ளார்கள். அதன் பக்கம் அனைத்து உலகையும் நாம் அழைக்கின்றோம். ஏனென்றால் இன்று மனித நேயத்திற்கு ஏற்பட்ட அபாயம் சாதி, மதம், இனம் மற்றும் நிறத்தின் வேறுபாடுகள் மற்றும் பாகுபாடுகளின் காரணத்தினால் மட்டுமே நிலவுகிறது. மேலும் மார்க்க வேற்றுமையின் விளைவு ஒரு மனிதனை மனித நேயத்திலிருந்து விலக்கி கொலை மற்றும் அழிவுக்கான கட்டத்தை எட்டச் செய்துள்ளது. மனித பயங்கரவாதம் மற்றும் தற்கொலைத் தாக்குதல்களுக்கு மேலதிகமாக, மிகவும் கொடிய ஆயுதங்கள் மற்றும் ட்ரோன் தாக்குதல்களின் விளைவாக குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் மற்றும் அப்பாவி உயிர்கள் படுகொலை செய்யப்படுகின்ற சம்பவங்களை நாம் கேட்கவும் பார்க்கவும் செய்கின்றோம்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மத நல்லிணக்கம் மற்றும் கருத்து சுதந்திரம் தொடர்பாக இஸ்லாமிய போதனைகள் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை பிரகாசிக்கச் செய்தவாறு கூறுகின்றார்கள்:-

'திருக்குர்ஆனில் எண்ணற்ற இடங்களில் இஸ்லாத்தின் இந்த அழகிய போதனை காணக் கிடைக்கின்றது. அதில் முஸ்லிம் அல்லாதவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் அவர்களுடைய உரிமையை கவனத்தில் கொள்ளுதல் அவர்களுடன் நீதமான முறையில் நடந்து கொள்ளுதல் அவர்களின் மார்க்கத்தில் எந்த விதமான நிற்பந்தமும் செய்யக்கூடாது. மார்க்கம் தொடர்பாக எந்த ஒரு கடுமையும் மேற்கொள்ளக்கூடாது போன்றவை. இது போன்ற எண்ணற்ற கட்டளைகள் நமக்காக மட்டுமல்லாமல் முஸ்லிமல்லாதவர்களுக்காகவும் இருக்கின்றது....மனிதகுலத்தில் மிகவும் இரக்கமுள்ள, கருணையுள்ள மற்றும் மனித உரிமைகளின் சிறந்த பாதுகாவலராக திகழும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலை எவ்வாறாக இருந்தது?என்று சொன்னால் போர்க் காலங்களில் கூட, எதிரிக்கு எளிமையான வசதியை ஏற்படுத்தித் தரக்கூடிய எந்த வாய்ப்பையும் அன்னார் (ஸல்) ஒருபோதும் கை நழுவ விட்டதில்லை. அன்னாரின் வாழ்வின் ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு அசைவும், அன்னாரின் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும், ஒவ்வொரு கணமும் அன்னார் (ஸல்) கருணையின் முழு உருவமாகவே திகழ்ந்தார்கள் என்பதற்கான சான்றாகும். மேலும் அன்னாரின் மார்பில் எப்படிப்பட்ட உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது என்றால் அதைவிட வேறு எந்த உள்ளமும் கருணையின் அந்த உயர்தரம் மற்றும் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு அந்த உள்ளம் இருந்தது.சமாதானத்திலும், போரிலும், வீட்டிலும், வெளியிலும், அன்றாட விஷயத்திலும், மற்ற மார்க்கத்தினர்களுடன் தொடர்புடைய விஷயங்களிலும், பிற மார்க்கங்களுடன் செய்த ஒப்பந்தத்திலும் அன்னார் (ஸல்) கருணையின் முழு உருவமாகவே திகழ்ந்தார்கள். அன்னார் மத நல்லிணக்கம் மற்றும் கருத்து சுதந்திரத்தின் உயர் தரத்திலான உதாரணத்தை நிலை பெற செய்து விட்டார்கள். அதன் பிறகு சிறந்த மாபெரும் வெற்றியாளர் என்ற நிலையில் மக்காவில் நுழைந்து எங்கு வெற்றிக் கொள்ளப்பட்ட சமுதாயத்தினரிடம் மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொண்டார்களோ அங்கு மார்க்க சுதந்திரத்திற்கான முழுமையான உரிமையும் வழங்கி திருக்குர்ஆனின் இந்த கட்டளையின் உயரிய முன்னுதாரணத்தை நிலைபெறச் செய்தார்கள். மார்க்கம் உங்கள் உள்ளத்துடன் தொடர்புடையதாகும். என்னுடைய விருப்பம் என்னவென்றால் நீங்கள் உண்மையான மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு உங்களுடைய உலகம் மற்றும் மறுமையை சீர் செய்தவாறு தங்களுடைய பாவ மன்னிப்பிற்கான காரணிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே ஆகும். ஆனால் இதில் எந்த நிர்பந்தமும் இல்லை. (ஜுமுஆ பேருரை பிப்ரவரி, 24, 2006) தமிழாக்கம்

முரப்பி அபுல் ஹஸன் ஆபித்

* * * * *  * * * * * *

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தன்னிகரற்ற வள்ளல் குணம்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 ஜுன் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **12 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّ عَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ۚ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ۝٢٧٥

நான் ஓதிய முதல் வசனம் சூரா பக்கராவின் வசனமாகும். அதன் பொருள்: எந்த மக்கள் தங்களுடைய செல்வங்களை இரவும், பகலும், மறைவாகவும் வெளிப்படையாகவும் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய இறைவனிடம் அவர்களுக்கான வெகுமதி பாதுகாப்பாக உள்ளது. அவர்களுக்கு எந்த அச்சமும் இருக்காது; அவர்கள் துயரமடையவும் மாட்டார்கள்.(2:275)

இரண்டாவது வசனம், சூரா அஸ் ஸாரியாத்தின் வசனம் ஆகும். அல்லாஹ் கூறுகிறான்: மேலும், அவர்களுடைய செல்வங்களில் கேட்பவருக்கும், கேட்க இயலாதவர்களுக்கும் உரிமை இருந்தது.

இன்று நான் மாநபி (ஸல்) அவர்களின் கொடை மற்றும் வள்ளல் தன்மையின் முன்மாதிரி தொடர்பாக சில அறிவிப்புகளை எடுத்துரைப்பேன். இது குறித்து எவ்வாறு அன்னார் மீண்டும் மீண்டும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு கவனமூட்டினார்கள் என்பதும், அன்னாருடைய சொந்த அமல் என்னவாக இருந்தது என்பதும் இந்த அறிவிப்புகளில் இருந்து தெரியவருகிறது.

நான் கூறியது போன்று, நான் ஓதிய இந்த வசனங்களிலும், மற்ற பல வசனங்களிலும், அல்லாஹ்வுக்கான உரிமை மற்றும் அடியார்களுக்கான உரிமையை நிறைவேற்றுதல், மார்க்கத் தேவைகள் மற்றும் தேவை உடையோரின் தேவைகளை முழுமைப்படுத்துதல் ஆகியவற்றின் பக்கம் அல்லாஹ் கவனமூட்டியுள்ளான். இந்தக் கட்டளையின் கீழ் பெருமானார் (ஸல்) அவர்கள் உண்மையான நம்பிக்கையாளருக்கும் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். எல்லாவற்றையும் விட மேலாகத் தமது முன்மாதிரியை எடுத்து வைத்துள்ளார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளின் செயல் வடிவத்தைத் தமது முன்மாதிரியால் நமக்குக் காட்டியுள்ளார்கள். எனவே, (இந்த) ஒரு நற்பண்பு மட்டுமே அல்ல; அதற்கும் மேற்பட்டு, அன்னாருடைய வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதும் முழுக்க முழுக்க திருக்குர்ஆனுக்கு ஏற்பவே இருந்தது.

ஆக, எந்தப் பண்பை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அதற்கான மிக உயர்ந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்கள். அதை விடப் பெரியதொரு எடுத்துக்காட்டை எடுத்து வைக்க முடியாது. எவ்வாறாயினும், நான் கூறியது போன்று, இன்று அன்னாருடைய நற்பண்பான வள்ளல் தன்மை தொடர்பாக அறிவிப்புகளை எடுத்து வைப்பேன்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த துஆ சொற்களைக் கூறி துஆ செய்து வந்தார்கள்:

அல்லாஹ்வே! நான் கருமித்தனத்திலிருந்தும், சோம்பேறித்தனத்திலிருந்தும்,மிக மோசமான வாழ்நாளிலிருந்தும், கப்ர் தண்டனையிலிருந்தும், வாழ்வு மற்றும் மரணத்தின் குழப்பத்திலிருந்தும், உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

இவ்வாறே இது தொடர்பாக இந்தவொரு துஆவும் உள்ளது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களே அறிவிக்கின்றார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த துஆவைச் செய்து வந்தார்கள்:

அல்லாஹ்வே! கவலை மற்றும் துயரத்திலிருந்தும், இயலாமை மற்றும் சோம்பலிலிருந்தும், கோழைத்தனம் மற்றும் கருமித்தனத்திலிருந்தும், கடன் அதிகமாவதிலிருந்தும், மக்கள் (என்னை) மேலோங்குவதிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

இவ்வாறே இறைவழியில் வழங்குதல் மற்றும் அடியார்களுக்கு உதவி செய்தல் தொடர்பாகவும், அன்னார் (ஸல்) நம்பிக்கை கொண்டவர்களுக்கு இந்த அறிவுரையையும் கூறினார்கள்.

ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: பணப்பையை அடைத்து வைக்காதே! திறந்து வை! இல்லையென்றால், உனக்குத் தடுக்கப்படும். அதாவது, எதில் நீ! உனது செல்வத்தை வைத்துள்ளாயோ, அதன் வாயை அடைக்காதே! தேவைக்கு ஏற்ப செலவு செய்து வா. பிறருக்கு உதவி செய்து வா! மற்ற அறிவிப்புகளில் இந்தச் சொற்கள் உள்ளன: எண்ணிக் கொண்டு இருக்காதே. இல்லையேல், அல்லாஹ்வும் உனக்கு எண்ணி எண்ணிக் கொடுப்பான்.

அதாவது, உனக்கு அல்லாஹ் வாரி வழங்கியுள்ளான் எனும் போது, பிறகு, நீ! அவனுக்கு நன்றி செலுத்துவதற்கான உரிமையை நிறைவேற்று. நன்றி செலுத்துவதற்கான உரிமையாவது, மற்றவர்களுக்கு உதவி செய். அல்லாஹ் உனக்கு மேற்கொண்டு வழங்குவான்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வள்ளல் அல்லாஹ்வுக்கு அருகில் இருக்கிறார். சொர்க்கத்துக்கு அருகில் இருக்கிறார். மக்களுக்கு அருகில் இருக்கிறார். நெருப்பை விட்டு விலகியிருக்கிறார். கருமி அல்லாஹ்வை விட்டு விலகியிருக்கிறார். சொர்க்கத்தை விட்டு விலகியிருக்கிறார். மக்களை விட்டு விலகியிருக்கிறார். நெருப்புக்கு அருகில் இருக்கிறார். மேலும், கருமியான இறை வணக்கம் செய்பவரை விட, அறிவீனரான வள்ளல் மேன்மை பொருந்தியவரும், அல்லாஹ்வின் பார்வையில் அதிகம் பிடித்தமானவரும் ஆவார். கருமி இறை வணக்கம் செய்யக்கூடியவர் என்றாலும் சரி, ஆனால், அவருக்கு நிகரில், வாரி வழங்கும் ஓர் அறிவீனர் இருக்கிறார் என்றால், அல்லாஹ் அவரை அதிகம் நேசிக்கிறான்.

இவ்வாறே ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஏமாற்றுக்காரர், கருமி மற்றும் மிக அதிகமாக செய்ததை சொல்லிக் காட்டுபவர் ஆகியோர் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள். இந்த மூன்று தனிப்பண்புகள் ஆகும். ஏமாற்றுபவர், கருமி, அதாவது, கஞ்சத்தனம் செய்பவர் மற்றும் யாரிடமாவது ஏதாவது ஒரு விஷயத்தை அதிகம் சொல்லிக் காட்டுபவர் ஆகியோர் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள்.

இவ்வாறே ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நம்பிக்கை கொண்டவர் எளிய இயல்புடையவரும், வள்ளலும் ஆவார். தீயவர் ஏமாற்றுபவரும், கீழ்த்தரமானவரும் ஆவார்.

சில மக்கள் தமது மொழியில், எளிய இயல்பு என்பது எவரிடம் அறிவு குறைவாக இருக்கிறதோ அவரைக் குறிக்கும் என்று புரிந்து வைக்கிறார்கள். எளிய இயல்பு என்பதன் பொருள் இப்படியல்ல. அதற்கு மாறாக, நம்பிக்கை கொண்டவர் தொடர்பாக, நம்பிக்கை கொண்டவரோ புத்திக்கூர்மையில் மிகவும் மேம்பட்டிருப்பார் என்று வந்துள்ளது. நம்பிக்கை கொண்டவரின் புத்திக்கூர்மையும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. **அதனிடம் விழிப்புடன் இருக்க வேண்டும்.** அங்கு இதன் பொருள் சண்டை சச்சரவுகளிலிருந்து விலகியிருப்பவர் என்பதாகும். மேலும், அவர் பரிவுள்ளவராக இருப்பார். திறந்த உள்ளம் கொண்டிருப்பார். மக்கள் நேசிப்பவராக இருப்பார். கண்ணியத்திற்குரியவராக இருப்பார்.

ஆக, இதுதான் நம்பிக்கை கொண்டவரின் அடையாளம் ஆகும். ஆக, இதுதான் நாம் சுய ஆய்வு செய்து கொள்வதற்கு

நமக்கான ஒரு தரம் ஆகும்.

ஓர் அறிவிப்பில் முத்தரஃப் தம் தந்தையாரிடமிருந்து அறிவிக்கின்றார்:

நான் நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்த போது, அன்னார் (ஸல்) அல்ஹாக்குமுத்தகாஃசுர் எனும் சூராவை ஓதிக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்:

எனது செல்வம், எனது செல்வம் என்று ஆதமின் மகன் கூறுகின்றான். அதாவது, இது எனது செல்வம் ஆகும்; எனது செல்வமாகும் என்று செல்வந்தரான மனிதன் கூறுகின்றார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஆதமின் மகனே! நீ உண்டு தீர்த்துவிட்டதுதான் உனது செல்வமாகும். அணிந்து பழையது ஆக்கி விட்டது அல்லது ஸதக்கா கொடுத்து முன்னால் அனுப்பி வைத்து விட்டது.

ஆக, எல்லாவற்றையும் விடச் சிறந்த செல்வம் என அன்னார் (ஸல்) கூறியதாவது, நீ செலவு செய்தது உனது செல்வமாகும். ஆனால், நீ ஸதக்கா செய்ததுதான் சிறந்த செல்வமாகும். அதை நீ அல்லாஹ்வுக்கு முன் சமர்ப்பித்து விட்டாய். அவனுடைய அடியார்களுக்கான உரிமையை நிறைவேற்றுவதற்காக சமர்ப்பித்து விட்டாய். அவன் வழியில் செலவு செய்து விட்டாய். அதனால் இந்த செல்வம் உனக்கு அடுத்த உலகில் பன்மடங்காகித் திரும்பக் கிடைக்கும்.

எனவேதான், இது குறித்து வசனத்தில் கூறப்பட்டிருந்தது போன்று, எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்:

அவர்களுக்கு எந்த அச்சமும் இருக்காது. அவர்கள் துயரமடையும் மாட்டார்கள். ஏனெனில், அவர்கள் செய்த அந்தத் தியாகங்கள், அவர்கள் வழங்கிய தான தர்மங்கள், பிறருக்கு அவர்கள் செலவு செய்தது அவர்களுடைய செல்வம், அவர்களுக்கு மறுவுலகில் கிடைக்கும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்:- ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இரண்டு விஷயங்களை மட்டுமே பொறாமையாகப் பார்ப்பது ஆகுமானதாகும். ஒருவர், அல்லாஹ் செல்வத்தை வழங்கி, பிறகு, அவர் அதைப் பொருத்தமான இடத்தில் தயக்கமின்றி செலவு செய்ய ஆற்றலும் வழங்கப் பெற்ற நபர் ஆவார். இன்னொருவர், அல்லாஹ் நுட்பமான அறிவை வழங்கி, அவர் அதற்கு ஏற்ப தீர்ப்பு கூறுகின்ற, அமல் செய்கின்ற மற்றும் பிறருக்கும் கற்றுக் கொடுக்கின்ற நபராவார்.

பிறகு, ஒரு தருணத்தில் அறிவுரை வழங்கியவாறு அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ உமாமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஆதமின் மகனே! நீ உனது தேவைக்கு அதிகமாக செல்வத்தை செலவு செய்வது, உனக்குச் சிறந்ததாகும். அல்லாஹ் உனக்கு வழங்கிய செல்வத்திலிருந்து உனது தேவைகளை தாராளமாக நிறைவேற்றிக் கொள். ஆனால், அதை விடக் கூடுதலாக இருக்கின்ற செல்வத்தை செலவு செய். நீ அதைத் தடுத்து வைப்பது உனக்கு மோசமானதாகும். நீ தேவையான அளவு வைத்துக் கொள்வதனால் பழித்துரைக்கப்பட மாட்டாய். நீ தேவையை நிறைவேற்றிக் கொண்டது பற்றி, ஏன் செல்வத்தை வைத்துக் கொண்டாய் என்று உன்னிடம் கேட்கப்பட மாட்டாது. மேலும், யாரைப் பராமரிப்பது உனது பொறுப்பில் இருக்கிறதோ அவரிடமிருந்து நீ துவங்கு. செலவு செய்வதற்கான வழிமுறை இதுவாகும்: எவை உன்னுடைய பொறுப்புகளோ, உன்னுடைய சந்ததிகள், உன் மனைவி மக்கள், உன்னுடைய ஏழை உறவினர்கள் அல்லது எவர்களுடைய பராமரிப்பு உனது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்கள் ஆவார்கள். அவர்கள் உன்னுடைய செல்வத்திலிருந்து உதவி பெறுவதற்கான முதல் உரிமையாளர்கள் ஆவர்.

பிறகு, கூறினார்கள்: மேலும், மேலே இருக்கும் கை கீழே இருக்கும் கையை விடச் சிறந்ததாகும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் அவர்கள் கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள், உங்களில் எவருக்குத் தன்னுடைய வாரிசுடைய செல்வம் தனது சொந்த செல்வத்தை விட அதிகம் பிடித்தமானது? என்று வினவினார்கள்.

அதாவது, என் வாரிசுக்கு நான் வழங்கி விட்டுச் செல்கின்ற செல்வம், நான் என்னிடம் வைத்திருக்கின்ற அல்லது எனக்காக செலவு செய்து கொண்டிருக்கின்ற செல்வத்தை விடப்பிடித்தமானது என்று சொல்பவர் யார் இருக்கிறார். அதற்கு மக்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களில் தனது செல்வம் அதிகம் பிடித்தமானதாக இல்லாதவர் எவரும் இல்லை. எவ்வாறாயினும், எங்களிடம் இருப்பது எங்களுக்கு அதிகம் பிடித்தமானது.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: பிறகு, அவர் முன்னால் அனுப்பி வைத்ததுதான் அவருடைய செல்வமாகும். அவர் பின்னால் விட்டு விட்டது அவருடைய வாரிசுக்கான செல்வமாகும். நீங்கள் எதை முன்னால் அனுப்பி விட்டீர்களோ, அல்லாஹ்வின் வழியில் செலவு செய்து விட்டீர்களோ, ஏழைகளுக்கு உதவி செய்துள்ளீர்களோ அது எல்லாவற்றையும் விடச் சிறந்தது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியது போன்று, அதற்கு உங்களுக்கு இறுதியில் வெகுமதி கிடைக்கும்.

செல்வத்தைத் தயக்கமின்றி செலவு செய்வதிலும், அல்லாஹ்வின் மீது தவக்குல் வைப்பதிலும் மாநபி (ஸல்) அவர்களின் சொந்த அமல் என்னவாக இருந்தது. இது குறித்து ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் பிலாலிடம் வருகை தந்தார்கள். அவர்களிடம் ஒரு பேரீத்தம் பழக்குவியல் இருந்தது. அன்னார் (ஸல்) பிலால், இது என்ன? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதை நான் தங்களுக்காகவும், தங்களுடைய விருந்தினர்களுக்காகவும் சேர்த்து வைத்துள்ளேன் என்று பணிவுடன் பதிலளித்தார்கள்.

அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள், அந்தக் குவியல் மீது நரகத்தின் கடும் வெப்ப அலை வந்தடையவதைக் குறித்து நீர் அஞ்சவில்லையா? எனக் கேட்டார்கள். பிறகு, பிலாலே செலவு செய்து கொண்டே செல்வீராக. அரியணையின் இறைவன் இருக்க பஞ்சம் பட்டினிக்கு அஞ்சாதீர் என்று அன்னார் (ஸல்) பிலால் (ரலி) அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

பிறகு, இது தொடர்பாக அன்னாருடைய சொந்த முன்மாதிரிக்கான பிறிதோர் எடுத்துக்காட்டு உள்ளது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அவர்கள் ஓர் ஆட்டை அறுக்கச் செய்தார்கள். மேலும், அதன் இறைச்சியை ஏழைகளுக்கு இடையே பகிர்ந்தளித்தார்கள். சிறிது உண்பதற்காக வீட்டிலும் வைத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், எவ்வளவு இறைச்சி மீதமிருக்கிறது? என்று வினவினார்கள். அதற்கு, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், வெறும் கால் பகுதி மட்டும்தான் எஞ்சியுள்ளது என்று பதிலளித்தார்கள். முன்னங்கால், ஆட்டின் தொடை பகுதி. இதைக் கேட்டு, பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் விநியோகித்து விட்ட முழு பொருளும் மீதமாகிவிட்டது. இந்தக் கால் பகுதியைத் தவிர. ஏனெனில், இதுவோ யாருக்கும் உதவவில்லை. நாம் உண்பதற்காக நீங்கள் வைத்துள்ளீர்கள். நீங்கள் செலவு செய்து விட்டதுதான் மறுவுலகில் பயன்தரும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் உரை நிகழ்த்தியவாறு கூறினார்கள்:

நான் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன்: நானோ பகிர்ந்து கொடுப்பவன் மட்டுமே ஆவேன். அல்லாஹ்வே! வழங்குகிறேன்.

வள்ளல் பண்பு மாநபி (ஸல்) அவர்களின் அவர்களுடைய இயல்பில் நபித்துவத்துக்கு முன்பும் கூட உன்னதமான முறையில் காணப்பட்டு வந்தது. நான் படிப்பது போன்று, பெருமானார் (ஸல்) அவர்களின் தூய துணைவியார் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களுக்கு முதல் வஹீ இறங்கிய அந்த நேரத்தில், இதற்கான சான்று பகர்ந்தார்கள். அன்னார் (ஸல்) பதற்றமடைந்த நிலையில் வீட்டுக்கு வருகை தந்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், பதற்றமடைய வேண்டியத் தேவையில்லை. இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ் தங்களை ஒருபோதும் இழிவடையச் செய்ய மாட்டான். தாங்கள் உறவுகளைப் பேணுகிறீர்கள்; இயலாதோரின் சுமையை சுமக்கின்றீர்கள்; மறைந்து போன நன்மைகளை செய்கிறீர்கள்; விருந்தோம்பல் செய்கிறீர்கள்; உண்மையான இன்னல்களில் உதவி புரிகிறீர்கள் என்று கூறினார்கள்.

பிறகு, ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நம்பிக்கை கொண்டவரிடம் இரண்டு பழக்கங்கள் சேர முடியாது. கருமித்தனம் மற்றும் தீயொழுக்கம். அதாவது, நம்பிக்கை கொண்டவரிடம் கருமித்தனமும் இருக்காது. தீயொழுக்கமும் இருக்காது. இதுவும் தன்னைத் தானே ஆய்வு செய்து கொள்வதற்கான ஒரு தரமாகும். பிறகு, கருமித்தனத்திலிருந்து தப்பித்திருக்குமாறு வழிகாட்டல் வழங்கியவாறு அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அநீதியிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக அநீதிகள் கியாமத் நாளின் இருள்களாக இருக்கும். கருமித்தனம் மற்றும் பேராசைலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். நிச்சயமாக கருமித்தனம் உங்களுக்கு முன்னிருந்தோரை அழித்து விட்டது. அந்தக் கருமித்தனம் அவர்களைத் தூண்டி விட்டது. எனவே, அவர்கள் இரத்தம் சிந்தச் செய்தார்கள். மேலும், ஹராமான பொருள்களை ஹலாலாக்கினார்கள்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த அடியாருக்குள்ளும் ஒருபோதும் அல்லாஹ்வின் பாதையின் புழுதியும், நரகத்தின் புகையும் ஒரு சேர இருக்க முடியாது. மேலும், எந்த அடியாருக்குள்ளும் பேராசையும், கருமித்தனமும் மற்றும் ஈமானும் ஒரு சேர இருக்க முடியாது.

முன்னரும் ஓர் அறிவிப்பில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது போன்று, பேராசைக்காரன், அதாவது, பேராசைபடுபவன் மற்றும் கருமி ஆகியோர் ஒருபோதும் நம்பிக்கையாளர் ஆக முடியாது. எனவே,

இதுதான் தரமாகும். நம்பிக்கையாளர் ஆக வேண்டும் என்றால், பேராசையிலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும்.

அதாவது, அதிகமாக ஆசைப்படுவதிலிருந்தும் விலகியிருக்க வேண்டும். கருமித்தனத்தை விட்டும் விலகியிருக்க வேண்டும். ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அடியார்கள் காலையில் எழும் போது, வானத்திலிருந்து இரண்டு வானவர்கள் இறங்காத நாளே கிடையாது. அவர்களில் ஒருவர், அல்லாஹ்வே! செலவு செய்பவருக்கு அதற்கு வெகுமதியை வழங்குவாயாக என்று கூறுவார். இரண்டாமவர், அல்லாஹ்வே! கருமியின் செல்வம் வீணாகட்டும் என்று கூறுவார்.

அதாவது, செலவு செய்பவருக்கு அதற்குப் பகரமாக இன்னும் வழங்குவாயாக. கருமித்தனம் செய்பவரின், அதாவது, கஞ்சத்தனம் செய்பவரின் செல்வத்தை வீணடித்து விடுவாயாக. இந்த உலகிலும் அந்த செல்வத்தில் பரக்கத் ஏற்படுவதில்லை. இதையே நாம் பார்க்கிறோம். பல மக்கள் இந்த விஷயத்தை வெளிப்படுத்துகிறார்கள். மேலும், மறுவுலகிலும் இந்த செல்வம் அவருக்கு எந்தப் பலனும் அளிக்காது.

அல்லாஹ் ஓரிடத்தில் இவ்வாறு கூறியுள்ளான்: அல்லாஹ்வின் வழியில் அவன் மீதான நேசத்தில் செலவு செய்பவர்களுக்கு அவன் அதற்கான வெகுமதியை வழங்குகிறான்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களில் எல்லாரையும் விட அதிகம் அழகானவராக இருந்தார்கள். மக்களில் எல்லாரையும் விடப் பெரிய வள்ளலாக இருந்தார்கள். மக்களில் எல்லாரையும் விடப் பெரிய வீரராக இருந்தார்கள்.

இவ்வாறு ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், வள்ளல்கள் அனைவரையும் விட அதிகமாக வாரி வழங்குபவனைப் பற்றி நான் உங்களுக்குக் கூற வேண்டாமா? எனக் கேட்டார்கள்.

பிறகு, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அல்லாஹ் வாரி வழங்குபவர்கள் அனைவரைக் காட்டிலும் பெரிய வள்ளல் ஆவான். நான் ஆதமின் மகன்களில் எல்லாரையும் விட அதிகமாக வாரி வழங்குபவன் ஆவேன். உலகில் மனிதர்களில், எல்லாரையும் விட அதிகமாக வாரி வழங்குபவன் நான் ஆவேன்.

இவ்வாறே ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்களிடமிருந்து அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நன்மை மற்றும் நற்செயல்களில் எல்லா மக்களையும் விட அதிகமாக வள்ளலாகத் திகழ்ந்தார்கள். மேலும், ரமலான் மாதத்தில் அன்னார் எல்லாரையும் விட அதிகமாக வள்ளலாகத் திகழ்ந்து வந்தார்கள். ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் ரமலானில், அந்த ரமலான் கழியும் வரை அன்னாரைச் சந்திப்பார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களுக்குத் திருக்குர்ஆன் ஓதிக் காட்டுவார்கள். ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அன்னாரைச் சந்திக்கும் போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நன்மை மற்றும் நற்செயல்களில் வேகமான சூறாவளியை விடவும் மிஞ்சிய வள்ளலாகத் திகழ்வார்கள். புயல் காற்று, சூறாவளி காற்று வந்திருப்பது போன்று செலவு செய்வார்கள்.

இந்த விஷயத்தையே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஒரு குத்பாவில் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் வாரி வழங்கும்போது, உச்சகட்டமான முறையில் வழங்குவார்கள். எதுவரை என்றால், ஸஹாபா பெருமக்கள் எடுத்துரைக்கின்றார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் குறிப்பாக, ரமலானில் வேகமாக வீசுகின்ற சூறாவளியைப் போன்று வாரி வழங்குவார்கள். அத்துடன் எவ்வகையிலும் வீண் விரயம் செய்யாதீர்! என்ற வசனத்தின்படி அன்னார் (ஸல்) அமல் செய்து வந்தார்கள்.

அதாவது, வாரி வழங்குதலை வீணாகவோ, பயனற்றதாகவோ தொலைத்து விட மாட்டார்கள். பொருந்தாத இடத்திலும் பயன்படுத்த மாட்டார்கள். வள்ளல் தன்மை இருந்தது. ஆனால், வீண் செலவு செய்யக்கூடாது; காரணமின்றி வீணாக்கக்கூடாது என்பதும் அல்லாஹ்வின் கட்டளை ஆகும். அல்லாஹ் வீண் செலவு செய்வதை விட்டும் தடுத்துள்ளான்.

ஹாத்திம் தாயீ வாரி வழங்கினார்தான்; ஆனால், அது பொருந்தாத இடத்தில் இருந்தது. ஹாத்திம் தாயீ பெரும் வள்ளல் என்று அழைக்கப்படுகிறார். ஆனால், அவரது வள்ளல் தன்மை பொருத்தமான இடத்திலும், தருணத்திலும் இருக்கவில்லை. சிந்திக்காமல் இருந்து வந்தது. அவர் ஹல்வாயீ கீ துகான் பர் தாதா ஜீ கீ ஃபாத்திஹா என்ற பிறர் சொத்தைக் கொண்டு தன் கடமைகளைச் செய்ய முயல்வதைக் குறிக்கும் பழமொழிக்கு ஏற்றாற் போல் இருந்தார். இது ஒரு (உருது) பழமொழியாகும். அவருடைய சொந்த செல்வம் எதுவும் கிடையாது. தந்தையின் செல்வத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு அதில் அவருக்கு என்ன உரிமை இருந்தது? ஹாத்திம் தாயீ பற்றி வருகிறது, குழந்தைப் பருவத்திலிருந்தே அவரது இயல்பில் வள்ளல் பண்பு இருந்தது. கடைசியில் அவர் தந்தை இவரோ எனது செல்வத்தை அழித்துக் கொண்டிருக்கிறாரே என்று பார்த்தார். ஒட்டகங்களைக் கண்காணித்து வா என்று அவரை வெளியே அனுப்பி விட்டார். ஒருநாள் அவர் மூன்று பேர் வந்திருப்பதைப் பார்த்தார். மூன்று பெரிய கவிஞர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் இவரைப் பயணத்தில் பார்த்தார்கள். ஆக, அவர்களுக்காக விருந்தோம்பல் செய்வதற்காக, மூன்று ஒட்டகங்களை அறுத்து விட்டார். அவர்கள், நாங்கள் மூன்று பேர்தான் இருக்கிறோம். ஒரு ஒட்டகமே போதுமே என்று கூறினார்கள். அதற்கு, இல்லை, நான் ஒன்றை மட்டும் அறுத்தால், மற்ற இரண்டும் ஒட்டுண்ணிகள் ஆகி விட்டன என்று அவர் கூறினார்.

ஆக, தந்தையின் செல்வமாக இருந்தது. இலவசமாக கிடைத்திருந்தது. அவர் அவர்களுக்காக மூன்று ஒட்டகங்களையும் அறுத்து விட்டார். மீதமாகியிருக்கும். மீதமானவை வீணாகி விட்டன. அல்லது யாருக்காவது கொடுத்து விட்டார்.

ஆக, என் செல்வத்தை இப்படி வாரி இறைத்துக் கொண்டே இருக்கிறானே என்று தந்தைக்கும் மிகவும் மனவருத்தம் இருந்தது. ஆனால், மாநபி (ஸல்) அவர்களிடம் வந்த செல்வம் அன்னாருடைய செல்வமாக இருந்தது. திருக்குர்ஆனின் வழிகாட்டல்படி, சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப, அன்னார் (ஸல்) செலவழித்து வந்தார்கள். மாநபி (ஸல்) அவர்கள், தயக்கமின்றி செலவு செய்யுங்கள் என்று கூறிய அந்த நபிமொழிகளுக்கு இங்கு விளக்கம் வந்து விட்டது. பொருள் என்னவென்றால், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப செலவு செய்யுங்கள். பிறகு, எவ்விதமான தயக்கமும் இருக்கக் கூடாது என்பதாகும். அதுவன்றி, மூன்று பேர் வந்துள்ளார்கள், காட்டில் வந்துள்ளார்கள் என்று மூன்று ஒட்டகங்களை அறுத்து விட்டு, பிறகு, அதன் இறைச்சி வீணாவதாக இருக்கக் கூடாது. ஏனெனில், உண்பவர் அங்கு வேறு யாரும் கிடையாது. நிச்சயமாக காட்டில் வேறு யாரும் கிடைத்திருக்க மாட்டார்கள். யாராவது கிடைத்திருந்தாலும் ஒரு சிலர்தான் கிடைத்திருப்பார்கள். பிறகும், ஏதோ கொஞ்சம், பெருமளவு இறைச்சியே மீதமாகியிருக்கும். அது வீணாகி விட்டது. அதற்கு எந்தப் பலனும் கிடையாது.

ஆக, சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப செலவு செய்ய வேண்டும். அல்லாஹ்வின் வழியில் செலவு செய்கிறோம், தகுந்த இடத்திற்கு ஏற்ப செலவு செய்கிறோம்.

எனில், பிறகு, கவலையற்று இருங்கள். ஏனெனில், அவர்களிடம் அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ளான். வசனத்தில் அல்லாஹ் கூறியது போன்று, எந்தக் கவலையும் துயரமும் இருக்காது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அதற்கு நிகராக மாநபி (ஸல்) அவர்கள் ஒருபக்கமோ எந்த அளவுக்கு வள்ளலாகத் திகழ்ந்தார்கள் என்றால், ஏற்கனவே கூறப்பட்டது போன்று, ஸஹாபா கூறுகிறார்கள்: ரமலானின் நாள்களில் அன்னார் எந்த அளவுக்கு வாரி வழங்குவார்கள் என்றால், அது வேகமான சூறாவளி வீசுவது போன்று இருந்தது. ஆனால், மறுபக்கம் சிந்தித்து புரிந்து செலவு செய்பவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னிடம் திஹாமாவின் மலைகளுக்கு நிகராக, அதாவது, அரேபியாவின் கடற்கரை மலைத்தொடர்களுக்கு நிகராக, தங்கம் இருந்திருந்தாலும், நான் அதை அனைத்தையும் உங்களிடையே பகிர்ந்து கொடுத்திருப்பேன். நீங்கள் என்னைப் பொய்யனாகவோ கருமியாகவோ காணப் பெற மாட்டீர்கள்.

ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அபூ ஸர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களுடன் மதீனாவின் மைதானத்தில் நடந்து சென்று கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் உஹுது மலை எங்கள் முன்னால் வந்து விட்டது. அன்னார், அபூ ஸர் என அழைத்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, உள்ளேன் என்று நான் கூறினேன். அன்னார் (ஸல்) இந்த உஹது அளவு தங்கம் என்னிடம் இருந்து, மூன்று இரவு எனக்குக் கழிந்து, நான் கடனை அடைப்பதற்காக வைத்து விட்டதைத் தவிர, அதிலிருந்து ஒரு தீனாராவது என்னிடம் எஞ்சியிருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தராது. மாறாக, நான் நிச்சயமாகவே அல்லாஹ்வின் அடியார்கள் இடையே அதை இவ்வாறு இவ்வாறு இவ்வாறு செலவு செய்து விடுவேன்.

அதாவது, அன்னார் (ஸல்) தம் வலப்பக்கம், இடப்பக்கம் மற்றும் பின்பக்கம் நடந்துக் காட்டினார்கள்.

பிறகு, கூறினார்கள்: மிகுந்த செல்வந்தர்கள்தான் கியாமத் நாளன்று வறியவர்களாக இருப்பார்கள். எவர்கள் செல்வந்தர்களாக இருக்கிறார்களோ, பணத்தை சேர்த்து வைத்துக் கொண்டே இருக்கிறார்களோ, தேவை உடையவர்கள் மற்றும் ஏழைகள் மீது செலவு செய்யமல் இருக்கிறார்களோ அவர்கள்தான் கியாமத் நாளன்று ஏழைகளாக இருப்பார்கள். ஆனால், இவ்வாறு இவ்வாறு இவ்வாறு செலவு செய்பவர்கள் அல்ல; எவர் செலவு செய்கிறாரோ அவர் கியாமத் நாளன்று வறியவராக இருக்க மாட்டார்.

அதாவது, தமது வலப்புறம், இடப்புறம்

மற்றும் பின்புறம். மேலும், அவர்கள் மிகவும் குறைவானவர்கள்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: இத்தகைய மக்கள், இவ்வாறு அல்லாஹ்வின் வழியில் செலவு செய்பவரகள் மிகக் குறைவானவர்களே இருக்கிறார்கள். செல்வந்தர்களாக இருப்பவர்கள். கருமித்தனம் செய்வதில்லை. மாறாக, அல்லாஹ்வின் வழியில் ஒரு நம்பிக்கை கொண்ட செல்வந்தர் அதற்கு மாற்றமாக அச்சமின்றி செலவு செய்கிறார்.

அடுத்து, அல்லாஹ் அவர்களுக்கு இன்னும் வழங்கிக் கொண்டே செல்கிறான். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இரண்டு மலைகளுக்கு நடுவில் எத்தனை ஆடுகள் இருந்தனவோ அத்தனையையும் கேட்டார். அன்னார் (ஸல்) அவருக்கு அவற்றை வழங்கி விட்டார்கள். பிறகு, அவர் தன் சமுதாயத்திடம் வந்து, என் சமுதாயமே! இஸ்லாத்தை ஏற்பாயாக! இறைவன் மீது ஆணையாக! முஹம்மத் (ஸல்) அவர்கள் எவ்வளவு வழங்குகிறார்கள் என்றால், ஏழ்மை பற்றிய அச்சமே அவர்களுக்கு இல்லை என்று கூறினார்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

சிலவேளை யாராவது ஒரு மனிதர் உலகத்துக்காக மட்டும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு வந்தார். ஆனால், இஸ்லாத்தை ஏற்றதுமே இஸ்லாம் அவருக்கு உலகம் மற்றும் அதில் உள்ளவற்றை விடப் பிடித்தமானதாக ஆகி விடும்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நபிநாதர் (ஸல்) அவர்கள் நாளைக்காக எந்தப் பொருளையும் மிச்சப்படுத்தி வைக்க மாட்டார்கள்.

ஹஸ்ரத் உத்பா பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களுக்கு அஸ்ர் தொழுகை தொழவைத்தார்கள். பிறகு, அதையடுத்து அன்னார் விரைவாக வீட்டுக்குச் சென்றார்கள். சற்று நேரத்திற்குப் பிறகு வெளியே வருகை தந்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: நான் அன்னாரிடம் கேட்டேன். அல்லது வேறு யாரோ ஒருவர் கேட்டார். அப்பொழுது அன்னார் (ஸல்) நான் வீட்டில் ஸதக்காவின் செல்வத்திலிருந்து ஒரு துண்டு தங்கத்தை விட்டு வந்திருந்தேன். அது இரவு முழுக்க என்னிடம் இருப்பதை நான் விரும்பவில்லை. எனவே, நான் அதைப் பகிர்ந்தளித்து விட்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் வருகை தந்தார்கள். அப்பொழுது அன்னாருடைய முகத்தின் நிறம் மாறியிருந்தது. ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஏதோ ஒரு துன்பம் அல்லது வேதனையினால் இப்படி இருக்கும் என்று நான் நினைத்தேன். அவர்கள் கூறுகிறார்கள்: நான், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தங்களுடைய முகத்தின் நிறம் மாறியிருப்பதைக் காண்கிறேன். ஏதாவது ஒரு துன்பத்தின் காரணமாக இப்படி ஆயிற்றா? என பணிவுடன் வினவினேன். அதற்கு அன்னார் (ஸல்) அந்த 7 தீனார்கள் காரணமாக இப்படி இருக்கிறது; அவை என்னிடம் மாலையில் வந்தன; இரவு கழிந்து விட்டது; நாம் அவற்றை செலவழிக்கவில்லை; நான் அவற்றைப் படுக்கையின் ஓரத்தில் மறந்து போயிருந்தேன். எனக்கு ஞாபகம் வந்ததும், எனக்கு அதைப் பற்றி பயங்கரமான கவலை ஏற்பட்டது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உக்பா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அவர்கள் கூறினார்கள்: நான் மாநபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் மதீனாவில் அஸ்ர் தொழுகை தொழுதேன். அன்னார் (ஸல்) ஸலாம் கொடுத்தார்கள். மேலும், வேகமாக எழுந்து நின்றார்கள். மக்களின் தோள்களைத் தாண்டியவாறு தம் தூய துணைவியார்களின் அறைகளை நோக்கிச் சென்றார்கள். மக்கள் அன்னாருடைய இந்த விரைவைக் கண்டு பதற்றமடைந்தார்கள்.

பிறகு, அன்னார் (ஸல்), அவர்களிடம் வெளியே வந்தார்கள். அவர்கள் அன்னாருடைய இந்த விரைவினால் வியந்து போயிருப்பதைக் கண்டார்கள். இதனால் பெருமானார் (ஸல்) அவர்கள், என்னிடம் சிறிது தங்கம் இருந்தது. அது எனக்கு நினைவுக்கு வந்தது. அது எனது கவனத்தை இறைவனை நினைவுகூர்வதை விட்டும் தடுப்பதை நான் விரும்பவில்லை. எனவே, நான் அதை விநியோகிக்குமாறு கூறி விட்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் நிலை எப்படி இருந்தது என்றால், அன்னாரிடம் என்ன இருந்தாலும் அதை அன்னார் தானமாகக் கொடுத்து விடுவார்கள். ஒருமுறை அன்னாரது இல்லத்தில் ஓர் அன்பளிப்பு இருந்தது. அன்னார் (ஸல்) அதை எடுத்து விநியோகம் செய்து விட்டார்கள்.

இந்த நிகழ்வை எடுத்துரைத்தவாறே ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதை இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஒருமுறை ஸதக்காவின் பணம் கொஞ்சம் வந்தது. அதைப் பகிர்ந்தளிக்கும்போது, ஒரு தீனார் எங்கோ மூலையில் விழுந்து விட்டது. அதை எடுப்பதற்கு அன்னாருக்கு நினைவிருக்கவில்லை. தொழுகைக்குப் பிறகு ஞாபகம் வந்ததும், மக்கள் மீது தாண்டியவாறு அன்னார் உடனடியாக தம் வீட்டுக்குச் சென்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே என்ன விஷயம்? என்று ஸஹாபிகள் வினவினர். அன்னார் (ஸல்) இப்படி, இப்படி ஒரு தீனார் பகிர்ந்தளிப்பதில் விடுபட்டுப்போனது. எனவே, எவ்வளவு விரைவாக சாத்தியப்படுகிறதோ அதையும் விநியோகித்து விடுகிறேன் என நான் நினைத்தேன் என்று கூறினார்கள்.

ஆக, பொருள், செல்வம் இருந்த போதிலும், அன்னார் (ஸல்) எந்த அளவு பெருந்தன்மையையும், மனநிறைவையும் வெளிப்படுத்தினார்கள் என்றால், பார்த்து வியப்பு ஏற்படுகிறது. என்ன வந்தாலும் அன்னார் இறைவழியில் செலவு செய்து விடுவார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் பஹ்ரைனில் இருந்து செல்வம் கொண்டு வரப்பட்டது. அன்னார், (ஸல்) அதைப் பள்ளிவாசலில் போட்டு விடுங்கள் என்று கூறினார்கள். இது மாநபி (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டதிலேயே மிக அதிகமான செல்வமாக இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுகைக்காகப் புறப்பட்டார்கள். அன்னார் (ஸல்) அதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை. அதன் பக்கம் பார்க்கவில்லை. அன்னார் (ஸல்) தொழுது முடித்ததும், வந்து அந்தப் பொருளிடம் சென்றார்கள். பார்ப்பவருக்கெல்லாம் கொடுத்தார்கள். இதற்குள் அன்னாரிடம் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் வந்தார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கும் வழங்கிடுங்கள். ஏனெனில், நான் பத்ர் நாளன்று எனக்கான ஈட்டுத் தொகையை கொடுத்திருந்தேன். அகீலுக்கான ஈட்டுத் தொகையையும் கொடுத்திருந்தேன் என்று கூறினார்கள்.

இவர் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் சகோதரர் மகன் அகீல் பின் அபீ தாலிப் ஆவார். எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் (ஸல்) இதிலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். எனவே, அவர்கள் இரண்டு கைகளாலும் நிறைத்து நிறைத்து தம் ஆடையில் போட்டுக் கொண்டார்கள். பிறகு, அதைத் தூக்கலானார்கள். ஆனால், அவர்களால் தூக்க முடியவில்லை. எனவே, அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதை எனக்குத் தூக்கித் தர யாருக்காவது கட்டளை பிறப்பித்திடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அன்னார் (ஸல்) இல்லை, இது முடியாது என்று கூறினார்கள்.

பிறகு, தாங்களாவது எடுத்து என் மீது வைத்திடுங்கள் என்று கூறினார்கள். அன்னார் (ஸல்), இல்லை, இதுவும் முடியாது என்று கூறினார்கள். இதனால் அவர்கள் அதிலிருந்து சிறிது எடுத்துப் போட்டு விட்டார்கள். பிறகு, தூக்கப்பார்த்தார்கள். பிறகும் அவர்களால் தூக்க முடியவில்லை. ஆகவே அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதை எனக்குத் தூக்கித் தர யாருக்காவது கட்டளை பிறப்பித்திடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அன்னார் (ஸல்), இல்லை என்று கூறினார்கள். அதற்கு அவர்கள், அப்படியானால், தாங்களே எடுத்து என் மீது வைத்து விடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அன்னார் (ஸல்),முடியாது என்று கூறினார்கள். இதனால் அவர்கள் அதிலிருந்து இன்னும் சற்று எடுத்துப் போட்டு விட்டார்கள். பிறகு, அதைத் தூக்கி தமது தோள் மீது வைத்துக் கொண்டு நடந்தார்கள். அவர்கள் சென்றதும், அவர்கள் எங்கள் கண்களிலிருந்து மறையும் வரை பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்ச்சியாக அவர்களைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். எல்லாத் தருணத்திலும் அன்னார் ஸஹாபிகளுக்கு நடுநிலையைப் பேணுமாறு அறிவுரை வழங்குவார்கள். சரி, நான் வழங்குகிறேன். நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்; ஆனால், நடுநிலையாக. அவர் நெருங்கிய உறவினராகவே இருந்தாலும் சரி, நடுநிலை இருக்க வேண்டும். எவ்வளவு தேவையோ அவ்வளவு எடுத்துக் கொள்ளுங்கள். அதிகம் எடுத்துக் கொள்ளக் கூடாது.

இந்த ஹதீஸின் இறுதியில் அறிவிப்பாளர் இதையும் எழுதியுள்ளார்: பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அவருடைய இந்தப் பேராசையைக் கண்டு வியப்பு ஏற்பட்டது. இது அறிவிப்பாளரின் சொந்தக் கருத்தாகும். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுடைய பேராசையைக் கண்டு வியந்து அவ்வாறு பார்த்திருக்க மாட்டார்கள். மாறாக, அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அந்த ஏழ்மை காலம் நினைவுக்கு வந்து விட்டது. ஸஹாபிகளின் அந்தப் பழைய நிலைமையை சிந்தித்துப் பார்த்தவாறு, எப்படி இந்த மக்கள் தியாகங்கள் செய்து வந்தார்கள். எத்தகைய ஏழ்மை காலம் அவர்கள் மீது இருந்தது. இன்று அல்லாஹ் நமக்கு எவ்வாறு வழங்குகிறான்! என்று அவர்களை அன்னார் (ஸல்) வெகு தொலைவு வரை பார்த்துக் கொண்டே இருந்தார்கள். பல்வேறு விளக்கவுரையாளர்களும் அதை அறிவிப்பாளரின் சொந்த சிந்தனை என்று கூறியுள்ளார்கள். ஏன் பேராசை கொள்கிறார் என்று மாநபி (ஸல்) அவர்கள் வியப்படைந்தார்கள் என்பதல்ல. மாறாக, வேறு சிந்தனைகள் குறித்தே விளக்கவுரையாளர்கள் எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒரு பொருள்

கேட்கப்பட்டு, அதற்கு அன்னார் (ஸல்) இல்லை என்று சொல்லியது ஒருபோதும் நடக்கவில்லை.

ஹஸ்ரத் ஸஹ்ல் பின் ஸஃது (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகவும் நாணம் கொண்டவராக இருந்தார்கள். எப்பொழுது அன்னாரிடம் எதுவும் கேட்கப்பட்டாலும், அன்னார் (ஸல்) வழங்கி விடுவார்கள்.

இப்னு அபீ ஃஹைஃசமா ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களின் நற்பண்புகளை எடுத்துரைக்கும் போது, அன்னார் (ஸல்) வழங்குவதன் அடிப்படையில் எல்லா மக்களையும் விடப் பெரிய வள்ளலாக இருந்தார்கள் என்று கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் ஸஹ்ல் பின் ஸஃது கூறுகின்றார்கள்:

ஒரு பெண்மணி புர்தா எனும் ஒரு வகை போர்வையைக் கொண்டு வந்தார். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே நான் தங்களுக்கு அணிவிப்பதற்காக இதை என் கையால் தைத்துள்ளேன் என்று கூறினார். நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தமக்கு அதற்கான தேவை இருந்தது போன்று, அதை எடுத்துக் கொண்டார்கள்.

பிறகு, அன்னார் எங்களிடம் வந்தார்கள். அந்தப் போர்வையையே அன்னார் (ஸல்) கீழாடையாக உடுத்தியிருந்தார்கள்; கட்டியிருந்தார்கள். மக்களில் ஒருவர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்தப் போர்வையை எனக்கு அணிவதற்கு அளித்திடுங்கள் என்று கேட்டுக் கொண்டார். அன்னார் (ஸல்) ஆகட்டும் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் சிறிது நேரம் அவையில் அமர்ந்திருந்தார்கள். பிறகு, உள்ளே சென்று அதை மடித்தார்கள். மேலும், அந்த நபரிடம் அனுப்பி வைத்து விட்டார்கள். உடை மாற்றி விட்டு, வேறு போர்வை அணிந்து கொண்டு வந்தார்கள். மக்கள் அந்த நபரிடம், அன்னாரிடம் இதைக் கேட்டு நீ செய்தது சரி கிடையாது, அன்னார் (ஸல்) கேட்போருக்கு மறுக்க மாட்டார்கள் என்று உனக்குத் தெரியும் என்று கூறினார்கள். அதற்கு அந்த நபர், இறைவன் மீது ஆணையாக! நான் மரணித்த பிறகு, இது எனக்கு கஃபன் துணியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக் கேட்டேன் கூறினார்.

எழுதப்பட்டுள்ளதாவது, ஹஸ்ரத் ஸஹ்ல் கூறினார்கள்: அதே போர்வை பிற்காலத்தில் அவருக்கான கஃபன் துணியாகப் பயன்படுத்தப்பட்டது.

ஓர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் மஸ்வூர் பின் மஃஹ்ரமா அவர்கள் அறிவிக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் சிறிது போர்வைகளை விநியோகித்தார்கள். மஃஹ்ரமா அவர்களுக்கு எந்தப் போர்வையையும் வழங்கவில்லை. மஃஹ்ரமா தம் மகனிடம், மகனே! எம்முடன் நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் செல் என்று கூறினார்கள். நான் அவர்களுடன் சென்றேன். இதை அவர் மகன் அறிவித்துள்ளார். மஃஹ்ரமா அவர்கள் உள்ளே சென்று அன்னாரை என்னிடம் அழைத்து வா என்றார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: எவ்வாறாயினும், நான் சிறு பிள்ளையாக இருந்தேன். உள்ளே சென்றேன். மாநபி (ஸல்) அவர்களை அழைத்து என் தந்தை வந்துள்ளார் என்று கூறினேன். அன்னார் (ஸல்) அவர்களிடம் வருகை தந்தார்கள். மேலும், அவற்றில் ஒரு போர்வை அன்னார் (ஸல்) கையில் இருந்தது. அன்னார் (ஸல்)நான் உமக்காக இதைப் பாதுகாத்து வைத்தேன். நீர் முறையீட்டைக் கொண்டு வந்தீர் அல்லவா? என்று கூறினார்கள். அவர் முறையீட்டை வெளிப்படுத்துவதற்கு முன்னதாகவே அன்னார் (ஸல்) நான் உமக்காக இதைப் பாதுகாத்து வைத்தேன் என்று கூறி அந்தப் போர்வையை அவருக்கு வழங்கி விட்டார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: அன்னார் (ஸல்) அந்த மஃஹ்ரமாவின் பக்கம் பார்த்தார்கள். மேலும், இந்தப் போர்வை உமக்காக என்று கூறினார்கள். இந்த விஷயத்தினால் மஃஹ்ரமா மகிழ்ச்சியடைந்தார். பிறிதோர் அறிவிப்பில் உள்ளது, நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மஃஹ்ரமா அவர்களின் குரலை அடையாளம் கண்டு கொண்டார்கள். மேலும், வெளியே வருகை தந்தார்கள். மகன் உள்ளே செல்வதற்குப் பகரமாக அன்னார் (ஸல்) தாமே வெளியே வருகை தந்தார்கள். அன்னாரிடம் ஒரு போர்வை இருந்தது. அன்னார் (ஸல்) அதன் சிறப்புகளை அவர்களுக்குக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

நான் இதை உமக்காகப் பாதுகாத்து வைத்திருந்தேன், நான் இதை உமக்காகப் பாதுகாத்து வைத்திருந்தேன் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சென்று கொண்டிருந்தேன். அன்னார் (ஸல்) நஜ்ரான் நாட்டுப் போர்வையைப் போர்த்தியிருந்தார்கள். அதன் முனை சுரசுரப்பாக இருந்தது. அன்னாரை ஒரு காட்டரபி வந்து சந்தித்தார். அவர் அன்னாரது போர்வையை மிகவும் கடுமையாகப் பிடித்து இழுத்தார். நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கழுத்தின் ஒரு பக்கத்தில் பார்த்தேன், அவர் வேகமாக இழுத்ததன் காரணமாக அந்தப் போர்வையை முனை அன்னாரது கழுத்தில் காயத்தை ஏற்படுத்தியிருந்தது. பிறகு அவர், முஹம்மது (ஸல்) அவர்களே! தங்களிடம் உள்ள அல்லாஹ்வின் செல்வத்திலிருந்து எனக்கும் தருமாறு கட்டளையிடுங்கள் என்றார். கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் அவர் பக்கம் திரும்பினார்கள். மேலும், சிரித்தார்கள். பிறகு, அவருக்கு வழங்குமாறு வழிகாட்டல் வழங்கினார்கள்.

இதன் விளக்கம் ஓரிடத்தில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் எங்களுடன் அவையில் அமர்ந்து உரையாடி வந்தார்கள். பிறகு, அன்னார் எழுந்து நிற்கும்போது, நாங்களும் எழுந்து நிற்போம். அன்னார் (ஸல்) தம் இல்லமான தம் துணைவியார் ஒருவரின் இல்லத்திற்கு செல்லும் வரை இவ்வாறே நடக்கும். அவர்கள் கூறுகிறார்கள்: ஒருநாள் அன்னார் எங்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) எழுந்து நின்றதும், நாங்களும் எழுந்து நின்றோம். நாங்கள் ஒரு காட்டரபியைப் பார்த்தோம். அவன் பெருமானார் (ஸல்) அவர்களைப் பிடித்து, அன்னாரது போர்வையுடன் அன்னாரை இழுத்தான். இதனால் நபி (ஸல்) அவர்களின் கழுத்து சிவந்து விட்டது.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போர்வை மிகவும் சுரசுரப்பானதாக இருந்தது. பிறகு, மாநபி (ஸல்) அவர்கள் அவர் பக்கம் பார்த்தபோது, அந்தக் காட்டரபி அன்னாரிடம், என்னுடைய இந்த இரண்டு ஒட்டகங்கள் மீதும் நீங்கள் பொருளை ஏற்றிடுங்கள். ஏனெனில், நீங்கள் உங்கள் செல்வத்திலிருந்தும் ஏற்றித்தர மாட்டீர்கள்; உங்கள் தந்தையின் செல்வத்திலிருந்தும் ஏற்றித்தர மாட்டீர்கள் என்று கூறினார். மிகவும் கண்ணியக் குறைவாகப் பேசினார்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: இதற்கு மாநபி (ஸல்) அவர்கள், இல்லை, நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன். இல்லை, நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன். இல்லை, நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன் என்று கூறினார்கள். அத்துடன் இஸ்திஃக்ஃபாரும் செய்தார்கள். மேலும் கூறினார்கள்: இல்லை. நான் எப்பொழுது வரை உனக்கு வழங்க மாட்டேன் என்றால், தரவே மாட்டேன் என்று சொல்லவில்லை. நீ என்னை இப்படி பிடித்து இழுத்ததற்கு ஈடுகட்டாத வரை, நான் உனக்கு வழங்க மாட்டேன் என்று நிபந்தனை விதித்தார்கள். நீ என் போர்வையைப் பிடித்து இழுத்துள்ளாய். என் கழுத்தைக் காயப்படுத்தி விட்டாய். அதற்கு ஈடு செய் என்றார்கள். அந்தக் காட்டரபி ஒவ்வொரு முறையும், இறைவன் மீது ஆணையாக! நான் அதற்கு ஈடு செய்ய மாட்டேன் என்றே கூறிக் கொண்டிருந்தார். இல்லை, நான் எந்த ஈடும் செய்ய மாட்டேன் என்று அவர் கூறினார். ஏனெனில், தாங்கள் தீங்கிழைத்ததற்குப் பதிலாகத் தீங்கிழைத்துப் பழிவாங்க மாட்டீர்கள் என்று அவர் கூறினார். அவர் இந்த உத்தியைப் பயன்படுத்தினார். காட்டரபியும் சாதுர்யமானவராக இருந்தார். தாங்கள் தீங்கிழைத்ததற்குப் பதிலாக தீங்கிழைத்துப் பழிவாங்க மாட்டீர்கள். எனவே, நான் ஈடுகட்டுவதற்கான பேச்சே இல்லை. நானோ தீமை செய்தேன் தான். ஆனால், தாங்களோ தீமை செய்ய மாட்டீர்கள் என்றார். இதைக் கேட்ட மாநபி (ஸல்) அவர்கள் சிரித்து விட்டார்கள். பிறகு, கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், அவரது இரண்டு ஒட்டகங்களில் ஒன்றின் மீது கோதுமையையும் மற்றொன்றின் மீது பேரீத்தம் பழங்களையும் ஏற்றிடுங்கள். இரண்டையும் நிறைத்து விடுங்கள் என்று ஆணையிட்டார்கள். அவருக்குப் பொருளை வழங்கியது மட்டுமல்லாமல், அவரது வரம்பு மீறலையும் மன்னித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எம்மிடம் பஹ்ரைனின் செல்வம் வந்தால், நான் உமக்கு இவ்வாறு இவ்வாறு இவ்வாறு வழங்குவேன் என்று அன்னார் (ஸல்) இரு கைகளையும் சேர்த்து வைத்துக் கொண்டு கூறினார்கள். ஆனால், பஹ்ரைனின் செல்வம் வருவதற்கு முன்னர் மாநபி (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். பிறகு, அந்தச் செல்வம் அன்னாருக்குப் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தது. அன்னார் (ஸல்) அறிவிப்பவர் ஒருவரிடம், எவரிடம் மாநபி (ஸல்) அவர்களின் ஏதாவது ஒரு வாக்குறுதியோ அல்லது கடனோ இருக்கிறதோ அவர் வரட்டும் எனக் கட்டளையிட்டார்கள். இதனால் நான் எழுந்து நின்று விட்டேன். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பஹ்ரைனின் செல்வம் வந்தால், நான் உனக்கு இவ்வாறு இவ்வாறு இவ்வாறு வழங்குவேன் என்று கூறியிருந்தார்கள் எனப் பணிவுடன் கூறினேன். இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு கை நிறைய எடுத்தார்கள். கைகளில், அதாவது, இரண்டு கைகளையும் சேர்த்து நிரப்பினார்கள். பிறகு, இதை எண்ணுங்கள் என்று என்னிடம் கூறினார்கள்.

ஆக, நான் எண்ணிப் பார்த்தபோது அவை 500 திர்ஹம்கள் இருந்தன. பிறகு, அன்னார் இதைவிட இரண்டு மடங்கு இன்னும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பஹ்ரைனில் செயலாளராக நியமித்திருந்த ஹஸ்ரத் தல்ஹா பின் ஹஸ்ரமீ (ரலி) அவர்கள்தான் பஹ்ரைனில் இருந்து இந்த செல்வத்தை அனுப்பி வைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்துக்குப் பிறகும் ஹஸ்ரத் தல்ஹா அதே பொறுப்பில் நிலைபெற்றிருந்தார்கள்.

ஹாரூன் பின் ரியாப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை நபி (ஸல்) அவர்களிடம் 70,000 திர்ஹம்கள் வந்தன. இது மாநபி (ஸல்) அவர்களிடம் வந்ததிலேயே எல்லாவற்றையும் விட அதிக செல்வமாக இருந்தது. பிறகு, இந்த செல்வம் ஒரு பாயில் வைக்கப்பட்டது. பிறகு, மாநபி (ஸல்) அவர்கள் அதைப் பகிர்ந்தளிப்பதற்காக எழுந்து நின்றபோது, கேட்பவர் எவர் வந்தாலும் அன்னார் அவரை வெறுங்கையோடு திருப்பியனுப்பவில்லை. எதுவரை என்றால், அன்னார் (ஸல்) அந்த முழு செல்வத்தையும் விநியோகித்து விட்டார்கள். இந்த அறிவிப்பில் இப்படி உள்ளது. இந்த செல்வத்தை விடவும் அதிக செல்வம் வந்திருக்கிறதுதான். ஒருவேளை அறிவிப்பாளருக்குத் தெரிந்தவரை இது எல்லாவற்றையும் விட அதிக செல்வமாக இருந்திருக்கலாம். அல்லது இந்த அறிவிப்பு எடுத்துக் கூறப்படும் நேரத்தில், அப்பொழுது வரை இது எல்லாவற்றையும் விட அதிக செல்வமாக இருந்திருக்கலாம். ஏனெனில், இதற்கு முந்தைய அறிவிப்பில் பஹ்ரைனில் இருந்து வந்த செல்வம் இதை விட மிகவும் அதிகமானதாக இருந்தது.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு நபர் மாநபி (ஸல்) அவர்களிடம் வந்தார். அன்னாரிடம் பொருள் கேட்டார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவருக்குப் பாதி வஸ்க் அளவு (அதாவது, 70 கிலோ) தானியத்தைக் கடன் வாங்கிக் கொடுத்தார்கள். ஒரு வஸ்க் என்பது ஏறத்தாழ 60 சாஉ (140 கிலோ) அளவாகும். ஒரு சாஉ என்பது இரண்டரை சைர் (ஏறத்தாழ இரண்டரை கிலோ) அளவுக்கு நிகரானதாகும். பிறகு, கடன் கொடுத்த நபர் அதைத் திரும்பக் கேட்க வந்தார். அன்னார் அவருக்கு ஒரு வஸ்க் (140 கிலோ) அளவுக்குக் கொடுத்தார்கள். மேலும், பாதி அவரது கடனைத் திருப்பித் தருவதாகவும், பாதி அவருக்கு அன்பளிப்பாகவும் இருக்கிறது என்று கூறினார்கள். இது கடனைத் திருப்பித் தருவதற்கான ஆகச் சிறந்த வழிமுறை ஆகும். அவரிடமிருந்து பாதி வஸ்க் (70 கிலோ) தானியத்தைக் கடனாக வாங்கி வழங்கினார்கள். கடன் கொடுத்தவருக்குத் தனது முழு வஸ்கை (140 கிலோவை) வழங்கினார்கள். இதுதான் கடனைத் திருப்பித் தருவதற்கான ஆகச் சிறந்த வழிமுறை ஆகும். அதற்கு மாற்றமாக அசல் கடனைக் கூடத் திருப்பித் தருவதில் தட்டிக் கழித்து செயல்படுவதல்ல.

ஹஸ்ரத் ஸஹ்ல் பின் ஸஃஅது சாஇதீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்காகக் கருப்பு நிற கம்பளி அங்கி ஒன்று தயாரிக்கப்பட்டது. ஒருநாள் அன்னார் (ஸல்) அந்த அங்கியை அணிந்து கொண்டு ஸஹாபா பெருமக்களிடம் வருகை தந்தார்கள். அன்னார் (ஸல்) இது எவ்வளவு அழகாக இருக்கிறது பாருங்களேன் என்று கூறினார்கள்.

ஒரு நாட்டுப்பு மனிதர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஊண(ஸல்)ஊ என் தாய் தந்தையர் தங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக! இந்த அங்கியை எனக்கு வழங்கிடுங்கள் என்று கேட்டுக் கொண்டார். பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு பொருள் கேட்கப்பட்டு, அன்னார் (ஸல்) மறுத்ததாக ஒருபோதும் நடக்கவில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது அங்கியை அவிழ்த்து அவருக்கு வழங்கி விட்டார்கள். ஒரு மிக அழகான ஓர் அறிவிப்பு உள்ளது.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு துணி வியாபாரியிடம் 4 திர்ஹம்களுக்கு ஒரு மேலாடை வாங்கினார்கள். அந்த மேலாடையை அணிந்து கொண்டு மாநபி (ஸல்) அவர்கள் வெளியே வருகை தந்தார்கள். அப்பொழுது அன்ஸாரிகளில் ஒருவர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு இந்த மேலாடையை அணிவித்து விடுங்கள். அல்லாஹ் தங்களுக்கு சொர்க்கத்தின் ஆடையை அணிவிப்பானாக என்று கூறினார். ஹுஸூர் (ஸல்) அவர்கள் அந்த மேலாடையை அவிழ்த்து அவருக்கு வழங்கி விட்டார்கள். பிறகு, அன்னார் (ஸல்) கடைக்காரரிடம் சென்றார்கள். அவரிடமிருந்து 4 திர்ஹம்களுக்கு இன்னொரு மேலாடை வாங்கினார்கள். அன்னாரிடம் 2 திர்ஹம்கள் மீதமாயிகியிருந்தன. பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களிடம் அப்பொழுது 10 திர்ஹம்கள் இருந்தன. 4 திர்ஹம்களுக்கு முதல் ஆடையை வாங்கினார். பிறகு 4 திர்ஹம்களுக்கு இன்னொன்றை வாங்கினார்கள். 2 திர்ஹம்கள் மீதமிருந்தன.

அன்னார் (ஸல்) வழியில் திரும்பி வந்து கொண்டிருக்கும்போது, ஓர் அடிமைப் பெண்ணை அழுது கொண்டிருக்கக் கண்டார்கள். அன்னார் அவளிடம் அழுவதற்கான காரணத்தை வினவினார்கள். அதற்கு அவள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என் வீட்டார் நான் மாவு வாங்கி வருவதற்காக 2 திர்ஹம்கள் கொடுத்திருந்தார்கள். ஆனால், அவை என்னிடமிருந்து எங்கோ விழுந்து விட்டன. தொலைந்து விட்டன என்று கூறினாள். ஹஸ்ரத் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீதமிருந்த 2 திர்ஹம்களை அவளுக்கு வழங்கி விட்டார்கள். அவள் திரும்பி அழ ஆரம்பித்தாள். அன்னார் அவளிடம், அவள் ஏன் அழுகிறாள் என்று வினவினார்கள். இப்பொழுதுதான் அவளிடம் 2 திர்ஹம்கள் இருக்கின்றனவே, போய் மாவு வாங்கிக் கொள் என்றார்கள். அதற்கு அவள், இவ்வளவு நேரம் ஆகி விட்டது; எங்கே இருந்தாய்? இன்று இப்பொழுது அவர்கள் என்னை அடிப்பார்கள் என்று எனக்கு பயமாக இருக்கிறது என்றாள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் அவளுடன் அவளுடைய வீட்டு மக்களை நோக்கி நடந்தார்கள். அன்னார் (ஸல்), அவர்களுக்கு ஸலாம் கூறினார்கள். அவர்கள் மாநபி (ஸல்) அவர்களின் குரலை அடையாளம் கண்டு கொண்டார்கள். ஆனால், பதில் அளிப்பதற்குப் பதிலாக மௌனம் காத்தார்கள். அன்னார் (ஸல்) மீண்டும் ஸலாம் கூறினார்கள். அவர்கள் பிறகும் மௌனமாக இருந்தார்கள். அதாவது, வீட்டு மக்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மூன்றாவது முறை ஸலாம் கூறினார்கள். அப்பொழுது அவர்கள் அன்னாருடைய ஸலாமுக்கு பதிலளித்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களிடம், உங்களுக்கு முதல் முறை ஸலாம் கேட்கவில்லையா? என்று வினவினார்கள். அதற்கு அவர்கள், நாங்கள் கேட்டோம்தான். ஆனால், தாங்கள் எங்கள் மீது சாந்தி கூறிக் கொண்டே இருக்க வேண்டும். உங்கள் மீது சாந்தி சமாதானம் உண்டாவதாக என்று மீண்டும் மீண்டும் ஸலாம் கூற வேண்டும் என்று விரும்பினோம் என்று கூறினார்கள். இது ஸஹாபிகளின் பேராசையாக இருந்தது. பிறகு, அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்கள் தாய் தந்தையர் தங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக! தாங்கள் எப்படி இந்தப் பக்கம் வருகை வந்துள்ளீர்கள் என்று பணிவுடன் கேட்டார்கள். அதற்கு அன்னார் (ஸல்), இந்த சிறுமி நீங்கள் இவளை அடித்து விடுவீர்களோ என்று அஞ்சிக் கொண்டிருந்தாள் என்று கூறினார்கள். அதைக் கேட்ட அந்த அடிமைப் பெண்ணின் எஜமானர், தாங்கள் இவளுடன் வருகை தந்த காரணத்திற்காக, இந்த அடிமைப் பெண்ணை அல்லாஹ்வுக்காக விடுதலை செய்து விட்டேன் என்று கூறினார். கண்ணியத்திற்குரிய நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு நன்மை மற்றும் சொர்க்கத்திற்கான நற்செய்தியை வழங்கினார்கள். பிறகு, அன்னார் (ஸல்) அல்லாஹ் இந்த 10 திர்ஹம்களில் பெரும் பரக்கத்தைப் போட்டுள்ளான்.

அதாவது, அல்லாஹ் இதிலிருந்து தன் நபிக்கும் ஆடை அணிவித்துள்ளான். ஓர் அன்ஸாரிக்கும் ஆடைய அணிவித்துள்ளான். ஓர் அடிமைப் பெண்ணையும் அதன் காரணமாக விடுதலை செய்ய வைத்து விட்டான் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் முன் ஒரு திராட்சை கொத்தை அன்பளிப்பாக சமர்ப்பித்தார்கள். அது பேரீத்தம் பழங்களின் ஒரு கொத்தாகும் என்று கூறப்படுகிறது. முதலில் ஓரிடத்தில் திராட்சை என்று உள்ளது. ஓரிடத்தில் பேரீத்தம் பழம் என்று உள்ளது.

எவ்வாறாயினும், அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு, ஓர் இரவலர் வந்தார். அப்பொழுது ஹுஸூர் (ஸல்) அவர்கள் அதை அவருக்கு வழங்கி விட்டார்கள். பிறகு, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அதை ஒரு திர்ஹமுக்கு வாங்கிக் கொண்டார்கள். அவர்கள் கொண்டு வந்திருந்த அந்த பழக்கொத்து, ஏதாவது சிறப்பான வகையாக இருக்கும். நல்ல பேரீத்தம் பழங்களாக இருந்திருக்கும். அன்னார் (ஸல்) ஒரு திர்ஹமுக்கு அந்த இரவலரிடமிருந்து அதை மீண்டும் விலைக்கு வாங்கி நபி பெருமானார் (ஸல்) அவர்கள் முன் சமர்ப்பித்து விட்டார்கள். அந்த இரவலர் மீண்டும் வந்து விட்டார். எனவே, அன்னார் அதை அவருக்கு மீண்டும் வழங்கி விட்டார்கள். மேலும், இவ்வாறே இந்த விவகாரம் மூன்று முறை நடந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் விலை கொடுத்து வாங்குவார்கள். நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன் சமர்ப்பிப்பார்கள். அவர் வந்து மீண்டும் கேட்பார். பிறகு, அன்னார் (ஸல்) அவருக்கு வழங்கி விடுவார்கள். கடைசியில், கண்ணியத்திற்குரிய நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த இரவலரிடம் மென்மையாக, இன்னாரே! நீர் என்ன இரவலரா அல்லது வணிகரா? நீர் இரவல் கேட்க வந்தீர். இரவலர் ஆவீர். இப்படியோ செய்யக்கூடாது. நீரோ திர்ஹமும் சம்பாதிக்கிறீர். நீர் இப்படி வியாபாரம் செய்கின்றீர் என்று கூறினார்கள். அன்னார் (ஸல்) மறுக்கவில்லை. ஆனால், மிகவும் நுட்பமான முறையில், நீ செய்யும் இந்த அமல் பொருத்தமானதல்ல என்று அறிவுரை கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ் தபாரக் வ தஆலா ஸைது பின் சஃனா அவர்களுக்கு நேர்வழி காட்ட நினைத்தபோது, ஸைது பின் சஃனா அவர்கள் கூறினார்கள்: நபித்துவத்துக்கான எத்தனை அடையாளங்கள் இருந்தனவோ அவை எனக்கு முஹம்மத் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தில் தென்பட்டன. இரண்டு விஷயங்களைத் தவிர. அவற்றைக்குறித்து அவை அன்னாரிடம் இருக்கின்றனவோ? இல்லையா? என்பது எனக்குத் தெரியாமல் இருந்தது. அவற்றில் ஒன்று, அந்த நபியின் சகிப்புத்தன்மை அவரது சினத்தின் மீது மேலோங்கி விடும். இரண்டாவது விஷயம், அவருடன் எவ்வளவு அறிவீனமாக நடந்து கொள்ளப்பட்டாலும், அவர் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையில் இன்னும் அதிகம்

முன்னேறுவார். மேலும், எப்பொழுதாவது, வாய்ப்பு கிடைத்தால், அந்த அடையாளங்களையும் சோதித்துப் பார்ப்பேன் என்று சந்தர்ப்பம் தேடிக் கொண்டிருந்தேன்.

எவ்வாறாயினும், சோதித்துப் பார்ப்பதோ இரண்டாவது விஷயம். ஆனால், சந்தர்ப்பம் எப்படி அமைந்தது என்றால், ஸைது பின் சஃனா கூறுகின்றார்கள்: ஒருநாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வீட்டில் இருந்து வெளியே வந்தார்கள். அன்னாருடன் அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அப்பொழுது பயண விலங்கில் ஒருவர் வந்தார்.

அவர் காட்டரபியாக, அதாவது, நாட்டுப்புற மனிதராகக் காட்சியளித்தார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இன்ன கோத்திரத்தின் பஸரா கிராமத்தின் மக்கள் முஸ்லிம்கள் ஆகிவிட்டார்கள்; நான் அவர்களிடம், அவர்கள் முஸ்லிம்கள் ஆகி விட்டால், அவர்களுக்கு மிகவும் அதிகமாக வாழ்வாதாரம் கிடைக்கும் என்று கூறியிருந்தேன். இப்பொழுது அவர்கள் மழை குறைவு காரணமாக, பஞ்சம் மற்றும் பட்டினியை எதிர்கொள்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவர்கள் வளமான வாழ்வாதாரத்தின் மீதான பேராசையில் முஸ்லிம்கள் ஆனது போன்று, பேராசைப்பட்டு, அளவற்ற விருப்பம் கொண்டு இஸ்லாத்தை விட்டு வெளியேறி விடக்கூடாது என்று எனக்கு அச்சமாக இருக்கிறது; தாங்கள் பரிவுகூர்ந்தால், தாங்கள் பொருத்தமாகக் கருதினால், அவர்களை நோக்கி சிறிது பொருட்களை அனுப்பி, அவர்களுக்கு உதவியும் உள்ளத்தை மகிழ்ச்சிப்படுத்தவும் செய்திடுங்கள் என்று பணிவுடன் அவர் கேட்டுக் கொண்டார்.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் அந்த நபர் பக்கம் பார்த்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இருந்தார்கள். அவர்களும், உதவிக்காக உடனடியாக அனுப்பக்கூடிய பொருள் எதுவும் இப்பொழுது இல்லை என்று பணிவுடன் கூறினார்கள். ஸைது பின் சஃனா அவர்கள் கூறுகிறார்கள்: நான் அன்னாருக்கு அருகில் சென்றேன். நான் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். மேலும்,முஹம்மது (ஸல்) அவர்களே! இன்ன கோத்திரத்தின் தோட்டத்தின் பேரீத்தம் பழங்களை, ஒரு நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு, நிர்ணயிக்கப்பட்ட கால அளவின் நிபந்தனையின் பேரில், விற்கலாமா? என்று கேட்டேன். அதற்கு அன்னார் (ஸல்), யூதரே! (இந்த சஃனா யூதராக இருந்தார்கள்) நிர்ணயிக்கப்பட்ட அளவு மற்றும் கால அளவின் நிபந்தனையின் பேரிலோ பேரீத்தம் பழங்களையோ நான் விற்கலாம்தான். ஆனால், இந்தப் பேரீத்தம் பழங்கள் இன்னார் மகன் இன்னாருடைய தோட்டத்தைச் சேர்ந்தவையாகத் தான் இருக்கும் என்ற நிபந்தனையை என்னால் ஏற்க முடியாது என்று கூறினார்கள்.

நான் சரி என்று சொன்னேன். எனவே, அன்னார் (ஸல்) என்னுடன் வணிக உடன்படிக்கை செய்து கொண்டார்கள். நான் எனது பணப்பையைத் திறந்தேன். இன்ன நேரத்தில் இவ்வளவு பேரீத்தம் பழங்களைத் தாங்கள் எனக்கு வழங்கி விட வேண்டும் என்று கூறி அன்னாருக்கு 80 மிஸ்கால் (ஏறத்தாழ 350 கிராம்) தங்கத்தை முன்பணமாகக் கொடுத்து விட்டேன். ஒரு மிஸ்கால் என்பது ஏறத்தாழ நாலே கால் கிராம் ஆகும். மாநபி (ஸல்) அவர்கள் உதவி கேட்க வந்திருந்த நபருக்கு அந்தத் தங்கத்தை வழங்கி விட்டார்கள். மேலும், இதை அந்த இன்னலில் ஆழ்ந்துள்ள மக்களிடையே ஒன்றுபோல் பகிர்ந்து கொடுத்து விடுங்கள். இதை வைத்து அவர்களுக்கு உதவிடுங்கள் என்று கூறினார்கள்.

ஸைது பின் சஃனா அவர்கள் கூறுகிறார்கள்: இப்பொழுது நிர்ணயிக்கப்பட்ட காலங்களில் ஒரு கால அளவுக்கு இரண்டு மூன்று நாள்கள் எஞ்சியிருந்த நிலையில், நான் ஹுஸூர் (ஸல்) அவர்களிடம் வந்தேன். அன்னாருடைய சட்டையைப் பிடித்தேன். போர்வைப் பிடித்து இழுத்தேன். மேலும், பெரும் சீற்றத்தின் தோற்றத்தை உருவாக்கிக் கொண்டு, முஹம்மது (ஸல்) அவர்களே! என் உரிமையை வழங்க மாட்டீரா? இறைவன் மீது ஆணையாக! எனக்கு பனூ அப்தில் முத்தலிபுடைய இந்தப் பழக்கத்தைப் பற்றி மிக நன்றாகத் தெரியும்! கடனைத் திருப்பித் தருவதில் மிகவும் மோசமானவர்கள் ஆவீர்கள்! உங்களுடைய தட்டிக் கழிக்கும் பழக்கம் பற்றியும் எனக்குத் தெரியும் என்றேன். ஆனால், இந்தப் பேச்சுக்கே இடம் இல்லை. ஆனால், எவ்வாறாயினும், எதிரியாக இருந்தார். அந்த நேரத்திலோ உள்ளத்தில் பகைமை இருந்தது அல்லவா! அல்லது சோதிக்க நினைத்தார்.

எவ்வாறாயினும், அவர் இப்படி செய்தார். அவர், எனக்கு அதைப் பற்றிய அனுபவம் இருக்கிறது என்று கூறலானார். இவர் கூறுகிறார்: அப்பொழுது நான் அருகிலேயே இருந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பக்கம் பார்த்தேன். சினத்தின் காரணமாக அவர்களுடைய கண்கள் சூழலும் காற்றாடி போன்று சூழன்று கொண்டிருந்தன.

அதாவது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சீற்றத்துடன் கண்களைப் பெரிதாக்கி என்னைப் பார்த்து, அல்லாஹ்வின் எதிரியே! இதோ என் காதில் விழுகிறதே! இப்படி நீ அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் பேசுகிறாயா? இதோ நான் பார்க்கிறேனே! இவ்வளவு அவமரியாதையாக நடந்து கொள்கிறாயா? அன்னாரை உண்மையுடன் அனுப்பிய அந்த இறைவன் மீது ஆணையாக! நான் அன்னாரைக் கண்டு அஞ்சாமல் இருந்திருந்தால், நான் எனது வாளால் உனது தலையை சீவியிருப்பேன் என்று அவர்கள் கூறினார்கள். ஆனால், அதே வேளையில், கண்ணியத்திற்குரிய திருத்தூதர் (ஸல்) அவர்கள் மிகவும் நிதானமாகவும், அமைதியாகவும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். புன்சிரித்துக் கொண்டிருந்தார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள், உமரே! இந்த சீற்றத்துக்கு பதிலாக, நீர் எனக்கு நான் சிறந்த முறையில் திருப்பித் தருவதற்காகவும், அவரிடம் அவர் நல்ல முறையில் திருப்பிக் கேட்பதற்காகவும் கூறுவதற்கு நானும் இவரும் என நாங்கள் இருவரும் அதிகம் உரியவர்கள் ஆவோம் என்று கூறினார்கள். பிறகு, உமரே! இவரை அழைத்துச் செல்வீராக! இவருக்கு இவருடைய உரிமையை வழங்கிடுவீராக. அதற்கும் மேற்பட்டு, மேற்கொண்டு 20 சாஉஃ அளவுக்குக் (ஏறத்தாழ 44 கிலோ) கூடுதலாகப் பேரீத்தம் பழங்களைக் கொடுத்து விடுவீராக! என்று கூறினார்கள்.

நான், உமரே! ஏன் இந்தக் கூடுதல் பழங்கள்? என்று கேட்டேன். அதற்கு, நான் கடுமையாக நடந்து கொண்டதற்காக, அதற்குப் பகரமாக, உமக்கு அதிகமாகத் தருமாறு ஹுஸூர் (ஸல்) அவர்கள் எனக்கு ஆணையிட்டுள்ளார்கள் என்று அவர்கள் பதிலளித்தார்கள். நான் உமரிடம், நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டேன். அதற்கு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இல்லை, நீங்கள் யார்? என்று கேட்டார்கள். நான் ஸைது பின் சஃனா ஆவேன் என்று நான் கூறினேன்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அந்த வழிகாட்டியா? அதாவது, யூதர்களின் பெரிய அறிஞரா? என்று கேட்டார்கள். அதற்கு, ஆமாம், யூதர்களின் அறிஞன் என்று நான் பதிலளித்தேன். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இவ்வளவு பெரிய அறிஞராக இருந்து கொண்டு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் கண்ணியக் குறைச்சலாக நடந்த கொண்ட இந்த முறையை நீர் ஏன் மேற்கொண்டீர்? என்று கேட்டார்கள். அதற்கு நான், உமரே! நபித்துவத்திற்கான எத்தனை அடையாளங்கள் இருந்தனவோ, நான் அன்னாரைக் கண்ட போது, எனக்கு அன்னாரிடம் அவை தென்பட்டன; இரண்டு அடையாளங்களைத் தவிர. அவற்றைப் பற்றி எனக்குத் தெரியாமல் இருந்தது. ஒன்று, அந்த நபியின் சகிப்புத்தன்மை அவரது சினத்தின் மீது மேலோங்குகிறதா என்பதாகும். இன்னொன்று, எவ்வளவு அதிகமாக அவர்களுடன் கசப்பாகவும், அறிவீனமாகவும் நடந்து கொள்ளப்படுகிறதோ, அவ்வளவே அதிகம் அவர்கள் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையோடு நடந்து கொள்வார்கள்.

ஆக, நான் இவ்விரு விஷயங்களையும் சோதித்துப் பார்த்தேன். உமரே! நான் உங்களை சாட்சியாக்குகிறேன். நான் அல்லாஹ்வை என் இறைவனாகவும், இஸ்லாத்தை என் மார்க்கமாகவும், முஹம்மத் (ஸல்) அவர்களை என் நபியாகவும் ஏற்றுக் கொள்வதிலும் மகிழ்ச்சியடைகிறேன். நான் தங்களை இதற்கு சாட்சியாக்குகிறேன். நான் ஒரு செல்வந்தன் ஆவேன்; ஆகையால், என்னுடைய பாதி செல்வத்தை முஹம்மதிய்ய உம்மத்துக்கு சதக்காவாக வழங்குகிறேன் என்று கூறினேன். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், முஹம்மதிய்ய உம்மத்தின் சில பகுதிக்கு என்று கூறு. ஏனெனில், முழு உம்மத்தையோ எண்ணவே முடியாது. அவர்களுக்கு (இந்த) செல்வம் எப்படி பூர்த்தியாக முடியும்? என்று கூறினார்கள். அதற்கு, சரி, அவர்களில் சிலருக்கு ஸதக்காவாகும் என்று நான் கூறினேன். பிறகு, ஸைது நபி பெருமானார் (ஸல்) அவர்களின் மேலான அவைக்கு வந்தார்கள். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், அவனுடைய திருத்தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சிபகர்கிறேன். நான் இதில் ஈமான் கொள்கிறேன் என்று கூறினேன். இவ்வாறு ஸைது நபிநாதர் (ஸல்) அவர்களை உண்மைப்படுத்தினார்; பைஅத் செய்தார். மேலும், பல போர்களில் அன்னாருடன் கலந்து கொண்டார். எதுவரை என்றால், தபூக் போரில் இருந்து திரும்பி வரும்போது, வழியிலேயே ஸைது வஃபாத் ஆகி விட்டார். யூத அறிஞராக இருந்தார். நல்ல இயல்பு இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்த்து, எல்லா அடையாளங்களையும் பார்த்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். இதுதான் மாநபி (ஸல்) அவர்களின் அழகிய ஒழுக்கமாகும். கடன் வாங்கி ஒரு சமுதாயத்தைப் பட்டினியிலிருந்து விடுவித்தது மட்டுமின்றி, அதற்கும் மேற்பட்டு, தம்முடைய நல்லொழுக்களால் ஒரு யூத அறிஞரையும் முஸ்லிம் ஆக்கி விட்டார்கள்.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ ஸல்லி அலா ஆலி முஹம்மதின் வ பாரிக் வ ஸல்லிம் இன்னக்க ஹமீதும் மஜீத்

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை, ஜுலை 3, 2026, பக்கம் 2 - 8)

தமிழாக்கம்
முரப்பி
அத்தாவுல் முஃகனீ

* * * * * * * * * * * * * *

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 23- 30 JULY 2026 Issue No. 30 & 31

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

## (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின்

## ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம் - 2013 (அறிக்கை: அப்துல் மாஜித் ஸாஹிப்)

**அஹ்மதிய்யா ஜமாஅத் ஆஸ்திரேலியாவின் தேசிய செயற்குழு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் நிகழ்த்திய சந்திப்பு**

நிகழ்ச்சி நிரலின்படி ஹுஸூர் அன்வருடன் அவர்களுடனான அஹ்மதிய்யா ஜமாஅத் ஆஸ்திரேலியாவின் தேசிய செயற்குழுவினரின் சந்திப்பு தொடங்கியது. ஹுஸூர் அன்வர் அவர்கள் துஆ செய்தார்கள்.

அதன் பிறகு, ஜெனரல் செக்ரட்டரி அவர்களிடம், ஜமாஅத்துகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் தரப்பிலிருந்து பெறப்படும் அறிக்கைகளைக் குறித்து ஹுஸூர் அன்வர் அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஜெனரல் செக்ரட்டரி, தமது ஜமாஅத்துகளின் எண்ணிக்கை இவ்வளவு என்றும், அந்த ஜமாஅத்துகளிலிருந்து தமக்கு மாதாந்திர அறிக்கைகள் வருகின்றன என்றும் கூறினார்.

செக்ரட்டரி மால் அவர்களிடம், ஜமாஅத்தின் வருடாந்திர பட்ஜெட், சந்தா வழங்குபவர்களின் எண்ணிக்கை, மற்றும் சம்பாதிப்பவர்களின் எண்ணிக்கை, அவர்களின் வருமானத்தின் தரம் ஆகியவற்றைக் குறித்து ஹுஸூர் அன்வர் அவர்கள் விரிவாகக் கேட்டறிந்தார்கள். மேலும் செக்ரட்டரி மால் ஸாஹிப் சிறப்பாக உழைத்துள்ளார் என்றும் கூறினார்கள்.

செக்ரட்டரி மால் கூறினார்: சம்பாதிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1249 ஆகும். அதில் 941 பேர் முறைப்படி சந்தா செலுத்துகிறார்கள்; 308 பேர் முறைப்படி சந்தா செலுத்தாதவர்கள். மேலும் முறைப்படி சந்தா செலுத்துகின்ற 941 நபர்களில் 874 பேர் வஸிய்யத் செய்தவர்கள் ஆவர்.

செக்ரட்டரி வஸாயாவிடம், வஸிய்யத் செய்த பெண்களின் எண்ணிக்கை குறித்து ஹுஸூர் அன்வர் அவர்கள் விசாரித்தார்கள். அதற்கு அவர், 874 மூஸிகளில் 327 பேர் பெண்கள் என்று கூறினார். அவர்களில் ஒரு சிலர் சம்பாதிப்பவர்கள் ஆவர்; அவர்கள் தங்கள் சொந்த வருமானத்தில் சந்தா செலுத்துகிறார்கள்; மீதமுள்ளவர்கள் சம்பாதிக்காத பெண்கள் ஆவர், அவர்கள் வருடத்திற்கு 180 டாலர் சந்தா செலுத்துகிறார்கள் - அதாவது மாதம் 15 டாலர் என்ற கணக்கில்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: சம்பாதிப்பவர்களில் 50 சதவீதம் பேர் வஸிய்யத் செய்தவர்களாக இருக்க வேண்டும். உங்களுடைய மொத்த மூஸிகளின் எண்ணிக்கையில், சம்பாதிக்காதவர்களின் எண்ணிக்கையும் பெரிய அளவில் உள்ளது. எனவே, இந்த கோணத்திலும் ஆய்வு செய்து உங்களுடைய 50 சதவீத இலக்கை பூர்த்தி செய்யுங்கள். சம்பாதிப்பவர்களில் மேலும் 150-க்கும் மேற்பட்டோரை வஸிய்யத் செய்தவர்களாக உருவாக்க முடியும்; அதற்கு வாய்ப்பு உள்ளது. ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் வஸிய்யத் செய்தவர்களிடமிருந்து பணத்தை மட்டும் வசூலிக்கக் கூடாது; மாறாக, அத்துடன் அவர்களின் தர்பிய்யத்தும் செய்யப்பட வேண்டும். சந்தா என்பது வரி (TAX) ஒன்றும் அல்ல; மூஸிகள் நன்மையிலும் இறையச்சத்திலும் உயர்ந்த தரத்தில் நிலைத்திருக்க வேண்டும். மேலும் இதன் பக்கம் கூடுதல் கவனம் இருக்க வேண்டும். அவர்கள் கொடுக்கும் என்பது அல்லாஹ் தஆலாவின் திருப்தியைப் பெறுவதற்காக மட்டுமாகவே இருக்க வேண்டும்.

தேசிய செக்ரட்டரி தர்பிய்யத் அவர்களுக்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் வழிகாட்டுதல் வழங்கியவாறு கூறினார்கள்: தொழுகையின் பக்கம் கவனம் இல்லை. தொழுகை சென்டர்கள் மற்றும் மஸ்ஜித்களிலும் பக்கம் கவனம் குறைவாக உள்ளது. உங்களிடம் சுமார் 500 மூஸிகள் உள்ளனர்; அவர்களில் 27 பேர் உங்கள் ஆமிலாவின் உறுப்பினர்கள் ஆவர். பின்னர் அன்ஸார், குத்தாம் ஆகிய அமைப்புகளின் ஆமிலா உறுப்பினர்களும் உள்ளனர். இந்த உறுப்பினர்கள் மட்டுமே மஸ்ஜித்களுக்கு வந்து விட்டால், வருகை அதிகமாகி விடும். பின்னர் ஒவ்வொரு ஜமாஅத்திலும் உள்ளூர் ஆமிலா உள்ளது. குத்தாம் மற்றும் அன்சாரின் ஒவ்வொரு மஜ்லிஸின் ஆமிலாவும் உள்ளது. இவர்கள் அனைவரும் தத்தமது மட்டத்தில், தங்கள் சென்டர்களில் தொழுகைக்காக வரத் தொடங்கினால் பின்னர் வருகை மிகவும் அதிகரித்து விடும். எனவே, முதலில் பொறுப்பாளர்கள் இதில் கவனம் செலுத்தி, தங்கள் முன்மாதிரியை நிறுவ வேண்டும். பொறுப்பாளர்கள் வரத் தொடங்கி விட்டால், பின்னர் மற்ற மக்களும் வருவார்கள். எனவே தொழுகைகளில் உங்கள் வருகையை உயர்த்துங்கள்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: முதலில் அனைத்து பொறுப்பாளர்களுக்கும் தொழுகையின் பக்கம் கவனமூட்டுங்கள். பின்னர் திருக்குர்ஆனை தினமும் ஓதுவதன் பக்கம் கவனமூட்டுங்கள். MTA- வில் குத்பாக்கள் கேட்பதன் பக்கம் கவனமூட்டுங்கள். செக்ரட்டரி தர்பியத்திடம் உரை கேட்பவர்களின் தரவு ( DATA) இருக்க வேண்டும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: குத்பாக்களில் தர்பிய்யத் POINTS இருக்கின்றன. அவற்றை சுறுசுறுப்பாகவும் விழிப்புடனும் இயங்கக் கூடிய ஜமாஅத்துகள் தமது மற்ற ஜமாஅத்துகளுக்கு சுற்றறிக்கையாக அனுப்புகின்றன. நீங்களும் இங்கு அவ்வாறு செய்யுங்கள்.

ஹுஸூர் அன்வர் கூறினார்கள்: இங்கே ஆஸ்திரேலியாவில் பந்தங்கள் முறியத் தொடங்கியுள்ளன. ஒருவர் ஒரு பையனை வீட்டிலிருந்து வெளியேற்றிவிட்டார் என்றால், மற்றொருவர் ஒரு பெண்ணை வீட்டிலிருந்து வெளியேற்றிவிட்டார். ‘இஸ்லாஹி கமிட்டி‘ உருவாக்கப்பட்டிருந்தது. அது தனது பங்களிப்பை வழங்க வேண்டும். கணவன்-மனைவி இடையே தகராறு நிகழ்கின்றது என்றால், இதுபோன்ற பிரச்சினைகள் எழும்போது, தொடக்கத்திலேயே இருவரையும் சமாதானப்படுத்தி பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும். விஷயம் எல்லை மீறிப் போகும் வரை காத்திருக்காமல், தொடக்கத்திலேயே உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். விஷயம் எல்லை மீறி சென்று விட்டால், பிறகு அது கஸா (நீதிமன்றம்) அமைப்பின் விவகாரமாகும். அப்பொழுது சீர்திருத்தக் குழுவின் கையிலிருந்து விஷயம் சென்று விடுகிறது. பெண் குலா பெறுவதற்கு விண்ணப்பம் கொடுத்து விட்டால் பின்னர் இஸ்லாஹி கமிட்டியின் பணி முடிந்து விடுகின்றது. பின்னர் அந்த விவகாரத்தை கஸா கையில் எடுத்து விடும். எனவே தொடக்கத்திலேயே விவகாரத்தை தீர்ப்பதன் பக்கம் இஸ்லாஹி கமிட்டி கவனம் செலுத்த வேண்டும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

ஒவ்வொரு மாதமும் இஸ்லாஹி கமிட்டியின் கூட்டம் நடைபெற வேண்டும். என்னென்ன பிரச்சனைகள் இருக்கின்றன? மேலும் எப்போது நடவடிக்கை எடுக்க வேண்டும்? என்று ஆய்வு செய்ய வேண்டும். நீங்கள் உங்களது பணியில் Active ஆக இருக்க வேண்டும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

தர்பிய்யத் நிகழ்ச்சிகள் interactive நிகழ்ச்சிகளாகவும் இருக்க வேண்டும். தர்பிய்யத் தலைப்புகளில் இளைஞர்களுக்கான கேள்வி-பதில் நிகழ்ச்சிகளையும் வடிவமையுங்கள். ஓர் இளைஞர் என்ன கேள்வி கேட்டாலும; அதற்கு பதிலளிக்கப்பட வேண்டும். கேள்வி எத்தகையதாக இருந்தாலும் அதற்கு பதிலளித்து அவரை திருப்திபடுத்துங்கள். இஜ்திமாவின் சந்தர்ப்பத்தின்போது அத்தகைய நிகழ்ச்சிகளை வையுங்கள். யூ.கேவின் இஜ்திமாவிலும் அத்தகைய நிகழ்ச்சி நிடைபெற்றிருந்தது. ஜாமிஆ மாணவர்கள் இளைஞர்களின் கேள்விகளுக்கு பதிலளித்திருந்தார்கள். அவர்களுக்கு அவர்களின் மொழியில் சரியான பதில் கிடைத்து விடும்போது பின்னர் விஷயம் புரிந்து விடுகிறது. **(தொடரும்......)**

தமிழாக்கம்
முரப்பி அப்துர் ரஹ்மான் தாஹிர் * * * * **

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad